Follow us

# தமிழன்

THAMILAN தமிலன்

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 02, இதழ் : 534 சுபகிருது வருடம், வைகாசி மாதம் 19ஆம் திகதி வியாழக்கிழமை (02.06.2022) ஹிஜ்ரி - 1443, ஜுல்ஹஃதா - 01, 0115886187 - பக்கங்கள் 12

விலை ரூ.50

## அரசியலமைப்பு திருத்தத்திற்கு சுயாதீனக்குழு 7 யோசனைகள்

யோ.தர்மராஜ்

21ஆவது அரசியலமைப்பினூடாக ஜனாதிபதி பாதுகாப்பு அமைச்சை மாத்திரம் வகிக்க முடியும் என்பதோடு, பிரதமரும் தேசிய பாதுகாப்பு சபையின் உறுப்பினராக இருத்தல் வேண்டும் போன்ற யோசனைகளை சுயாதீனக் குழு முன்வைத்துள்ளது.

21ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தில் உள்ளடக்கப்பட வேண்டிய யோசனைகள் அடங்கிய...

02 பக்கம்

## ஜோன்ஸ்டனை கைது செய்யுமாறு உத்தரவு

அலரிமாளிகை மற்றும் காலிமுகத்திடல் 'கோட்டா கோ கம' போராட்டக்காரர்கள் மீது கடந்த மே மாதம் 9ஆம் திகதி தாக்குதல் நடத்தப்பட்ட சம்பவம் தொடர்பாக முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவை கைது செய்யுமாறு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

02 பக்கம்



## டொலர் பற்றாக்குறை காரணமாக கைவிடப்படும் ஹஜ் யாத்திரை

நாட்டில் டொலர் பற்றாக்குறை தீவிரமடைந்துள்ளதன் காரணமாக இவ்வருட புனித ஹஜ் பயணத்தைக் கைவிட ஹஜ் ஏற்பாட்டாளர்கள் முடிவு செய்துள்ளனர்.

இது தொடர்பான ஊடக சந்திப்பு நேற்றுமுன்தினம் முஸ்லிம் சமய, பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தில் நடைபெற்றது.

02 பக்கம்

# கைதானார் துமிந்த!

## ஜயவர்தனபுர வைத்தியசாலைக்கே சென்று சி.ஐ.டி. நடவடிக்கை

வீடமைப்பு அதிகாரசபையின் தலைவர் துமிந்த சில்வா, ஸ்ரீ ஜயவர்தனபுர வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்த நிலையில் நேற்று மாலை கைதுசெய்யப்பட்டார்.

வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட துமிந்த சில்வாவை கைது செய்வதற்காக குற்றவியல் விசாரணைத் திணைக்களத்தின் அதிகாரிகள் அனுப்பிவைக்கப்பட்டனர். அவர்கள் நேற்று மாலை துமிந்தவை கைது செய்தனர்.

சுகயீனம் காரணமாக மே 7ஆம் திகதி சிங்கப்பூர் சென்றிருந்த துமிந்த சில்வா, மே 21ஆம் திகதிவரை அங்கு தங்கியிருந்து தனியார் வைத்தியசாலையில் சிகிச்சைபெற்று வந்துள்ளார். அதன் பின்னர் நாடு திரும்பி கொழும்பு தனியார் வைத்தியசாலைக்கு சென்ற துமிந்த, அங்கு 28ஆம் திகதிவரை தங்கியிருந்து சிகிச்சைப் பெற்றுள்ளார். இதன்பின்னர் நேற்று அவர் ஸ்ரீ ஜயவர்தனபுர வைத்தியசாலைக்கு சென்று சிகிச்சைக்காக தங்கியுள்ளார்.



02 பக்கம்

## அத்தியாவசியமற்ற பொருட்களும் இறக்குமதி செய்ய அனுமதி!

இலங்கைக்குள் இறக்குமதி செய்ய மட்டுப்படுத்தப்பட்டிருந்த 369 வகையான அத்தியாவசியமற்ற பொருட்களை இறக்குமதி செய்ய அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

02 பக்கம்

## திங்கட்கிழமை முதல் தனியார் பஸ் சேவைகள் நிறுத்தம்



02 பக்கம்

## சபாநாயகர் தலைமையில் கட்சித் தலைவர்கள் கூட்டம்

### இன்று காலை இடம்பெறும்

நாடாளுமன்றம் எதிர்வரும் 7ஆம் திகதி செவ்வாய்க்கிழமைமுதல் 10ஆம் திகதி வெள்ளிக்கிழமைவரை கூடவுள்ளது. இந்நிலையில், நாடாளுமன்ற விவகாரங்கள் தொடர்பான குழுவின் கூட்டம் இன்று முற்பகல் 9.30 மணிக்கு நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் நடைபெறவுள்ளது.

நாடாளுமன்றத்தில் எதிர்வரும் நாட்களில் நடைபெறவுள்ள நடவடிக்கைகள் தொடர்பில் இந்தக் கூட்டத்தில் முடிவெடுக்கப்படவுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர்களது உணவு விவகாரம் தொடர்பாகவும் இந்தக் கூட்டத்தில் தீர்மானம் எடுக்கப்படும்.

நாடாளுமன்றத்தால் வழங்கப்படும் உணவு தமக்குத் தேவையில்லை, வெளியிலிருந்து கொண்டுவந்து உண்பதற்கு அனுமதிக்குமாறு எம்.பிக்கள் கோரிக்கை விடுத்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## புதிய அரசியல் கூட்டணி அமைக்க முயற்சி: பிரதமராக விமலை பெயரிட உத்தேசம்!

### தகவல் வெளியிட்ட வாசுதேவ நாணயக்கார



நாடாளுமன்ற உறுப்பினர்களான விமல் வீரவங்ச, உதய கம்மன்பில, வாசுதேவ நாணயக்கார உட்பட 9 கட்சிகளின் பிரதிநிதிகள் இணைந்து புதியதொரு அரசியல் கூட்டணியை உருவாக்கும் முயற்சியில் தீவிரமாக இறங்கியுள்ளனர்.

02 பக்கம்

## அரசியல்வாதியின் தொழிற்சாலையில் தரமற்ற மதுபானம் விநியோகமா?

### வெளியானது அதிர்ச்சித் தகவல்

ஆளுங்கட்சி உயர் அரசியல்வாதி ஒருவரின் இரண்டு மதுபான தொழிற்சாலைகளிலிருந்து பாரியளவில் தீங்கு விளைவிக்கும் மற்றும் தரமற்ற மதுபானங்கள் அரசாங்க பகுப்பாய்வாளர் அறிக்கையின்றி சந்தைக்கு விநியோகிக்கப்பட்ட அதிர்ச்சித் தகவல் வெளியாகியுள்ளது.

பொதுக் கணக்குகளுக்கான குழு கடந்த வாரம் மதுபானங்களுக்கான தரநிலைகளை விரைவில் குறிப்பிடவும்,...

02 பக்கம்

## ஞானசார தேரருக்கு எதிரான வழக்கு 8 ஆண்டுகளுக்குப் பின் விசாரணைக்கு



குற்றவியல் தண்டனை சட்டத்தின் 291A4 சரத்தின் கீழ் பொதுபல சேனா அமைப்பின் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரருக்கு எதிராக வழக்கு தொடருமாறு சட்ட மா அதிபர் ஆலோசனை வழங்கியுள்ளார்.

இலங்கை பொலிஸ் திணைக்களத்தின் குற்றத்தடுப்புப் பிரிவின் அதிகாரிகள் நேற்றுமுன்தினம் கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றத்தில் இதனை தெரியப்படுத்தியுள்ளனர்.

மத உணர்வுகளை பாதிக்கும் கருத்தை வெளியிட்டுள்ளதாக ஞானசார தேரருக்கு எதிராக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இதற்கமைய அவருக்கு எதிராக நீதிமன்றத்தில் குற்றச்சாட்டுப்பத்திரம் தாக்கல் செய்யப்படவுள்ளது.

02 பக்கம்

### கமெண்ட் கந்தர்..



கைது எண்ட கையோட ஆசுப்பத்திரியில போய் படுக்கிறது பழைய ஸ்டைல் பாருங்கோ... இவர்கள் புதுசா எதுகும் யோசிக்கவே மாட்டாங்கள்...

## மக்களின் நலனை முன்னிறுத்தி செயற்படுங்கள்: அதிகாரிகளுக்கு அமைச்சர் டக்ளஸ் அறிவுறுத்தல்

நாடு எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடி சூழலில் கடற்றொழில் அமைச்சுக்குள் உள்ளடங்கியுள்ள திணைக்களங்களினால் முன்னுரிமை அளிக்கப்படவேண்டிய செயற்பாடுகள் தொடர்பாக ஆராயும் கலந்துரையாடல், கடற்றொழில் அமைச்சில் நேற்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் நடைபெற்றது.



02 பக்கம்

## எம்.பிக்கள் தடுப்பு நீடிப்பு

02 பக்கம்

### உஷ்



முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவை இந்தியாவுக்கு வந்து சற்று ஓய்வெடுத்துவிட்டு செல்லுமாறு இந்திய அரசியல்வாதி சுப்பிரமணிய சுவாமி கோரிக்கை விடுத்துள்ளாராம்.

மஹிந்த மூத்த அரசியல்வாதி என்பதால் அவர் பொதுவெளிக்கு வரவேண்டுமென தொலைபேசியில் மஹிந்தவுடன் பேசி அன்புடன் அழைத்தாராம் சுவாமி.

ஆனால், மஹிந்த இப்போதைக்கு இந்தியா செல்லும் நிலையில் இல்லையென தகவல்.

## அமைச்சுப் பொறுப்புகளை ஏற்றோர் கட்சிப் பதவிகளிலிருந்து நீக்கம்

### சுதந்திரக் கட்சி அதிரடி

யோ.தர்மராஜ்

கட்சியின் முடிவை மீறி இடைக்கால அரசாங்கத்தில் அமைச்சுப் பதவிகளைப் பெற்றுக்கொண்ட ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களை கட்சியின் அனைத்துப் பதவிகளிலிருந்தும் நீக்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக கட்சியின் தலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

02 பக்கம்

## தெமட்டகொடையைச் சேர்ந்த மூவர் தமிழகத்தில் அகதிகளாக தஞ்சம்

11 பக்கம்

## மதுபானம், சிகரெட் விலை அதிகரிப்பு

நேற்று நள்ளிரவுமுதல் அமுலாகும் வகையில் 750 மில்லிலீற்றர் மதுபானப் போத்தல் ஒன்றின் விலை 520 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், பியர் போத்தல் ஒன்றின் விலை 30 ரூபாவினால் அதிகரிக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

பெறுமதிசேர் வரி (வற்) அதிகரிப்பு காரணமாக இவ்வாறு மதுபானப் போத்தலின் விலை அதிகரிக்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

02 பக்கம்

## நாட்டின் பல பகுதிகளில் கன மழை; மண்சரிவு அபாய எச்சரிக்கை நீடிப்பு

மேல், சப்ரகமுவ மற்றும் வடமேல் மாகாணங்களிலும் கண்டி, நுவரெலியா, காலி மற்றும் மாத்தறை ஆகிய மாவட்டங்களிலும் இடைக்கிடையே மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யலாம் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

சப்ரகமுவ மாகாணம், களுத்துறை, நுவரெலியா, காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களின் சில பகுதிகளில் 75 மில்லிமீற்றருக்கும் அதிகமான மழைவீழ்ச்சி பதிவாகலாம் எனவும் திணைக்களம் தெரிவித்துள்ளது.

மத்திய மலைநாட்டின் மேற்கு சரிவுகளிலும் வடக்கு, வடமத்திய மற்றும் வடமேல் மாகாணங்களிலும் திருகோணமலை மற்றும் ஹம்பாந்தோட்டை மாவட்டங்களிலும் மணித்தியாலத்துக்கு 40 கிலோமீற்றர் வரையான வேகத்தில் பலத்த காற்று வீசக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

02 பக்கம்

# எரிவாயு கிடைக்காததினால் மூதூரில் மக்கள் ஆர்ப்பாட்டம்





(மூதூர் நிருபர்)

திருகோணமலை மூதூர் பிரதேச மக்கள் நேற்று(01) புதன்கிழமை வீதியை மறித்து எரிவாயு கோரி ஆர்ப்பாட்டம் ஒன்றினை மேற்கொண்டனர்.

மூதூர் மத்திய கல்லூரி மைதானத்துக்கு முன்னாள் உள்ள A5 வீதியை மறித்து சுமார் 1மணித்தியாலம் வரை ஆர்ப்பாட்டத்தினை மேற்கொண்டிருந்தனர்.

கடந்த 23ஆம் திகதி எரிவாயுவை பெற்றுக் கொள்ளவந்த போதிலும், எரிவாயு கிடைக்காததினால் மக்கள் ஏமாற்றமடைந்தனர். எனினும், அங்கு கொண்டுவரப்பட்ட வெற்று சிலிண்டரை இளைஞர்களிடம் ஒப்படைத்துச் சென்ற போதிலும், சுமார் 10 நாட்கள் ஆகியும் இன்னும் கிடைக்காமையால் மக்கள் எதிர்ப்பில் ஈடுபட்டனர்.

எனினும், அங்கு வந்த மூதூர் பிரதேச செயலாளர் மற்றும் மூதூர் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எதிர்ப்பில் ஈடுபட்டவர்களிடம் சுமுகமாக பேசி நாளை (இன்று) 400 எரிவாயு சிலிண்டர்களை வழங்குவதாக வாக்குறுதி வழங்கப்பட்டதையடுத்து மக்கள் கலைந்து சென்றனர்.

## ஜோன்ஸ்டனை...

சட்டமா அதிபர் திணைக்களம், குற்றவியல் விசாரணைத் திணைக்களத்திற்கு இந்த ஆலோசனையை வழங்கியுள்ளது. இதனடிப்படையில், முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவை கைது செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

மே மாதம் 9ஆம் திகதி கொழும்பில் உள்ள 'கோட்டா கோ கம' மற்றும் 'மைனா கோ கம' அமைதிப் போராட்டத்தளங்கள் மீதான தாக்குதல்கள் தொடர்பாக தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ சந்தேக நபராக பெயரிடப்பட்டுள்ளாரென சட்டமா அதிபர் தரப்பில் கோட்டை நீதவான் நீதிமன்றிடம் அறிவிக்கப்பட்டுள்ளது.

மே மாதம் 9ஆம் திகதி அலரிமாளிகையில் நடைபெற்ற முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவான கூட்டத்தின் பின்னர், கூட்டத்தில் கலந்துகொண்டவர்களில் சிலர் அலரிமாளிகை மற்றும் காலிமுகத்திடலில் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்கள் மீது தாக்குதல் நடத்தியதுடன் கூடாரங்களை உடைத்து சேதப்படுத்தினர்.

இதனையடுத்து நாடு முழுவதும் வன்முறை சம்பவங்கள் நடந்ததுடன் அரசாங்கத்தின் அமைச்சர்கள் உட்பட அரசியல்வாதிகளின் வீடுகள் தாக்கப்பட்டு, தீயிடப்பட்டன. இந்த சம்பவங்கள் தொடர்பாக விசாரணைகளை நடத்திய குற்றவியல் விசாரணைத் திணைக்களம், அலரி மாளிகை மற்றும் காலிமுகத்திடல் வன்முறை சம்பவங்கள் தொடர்பில் ஏற்கனவே சில அரசியல்வாதிகளை கைது செய்துள்ளது.

இந்த நிலையில், முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவை கைது செய்யுமாறு தற்போது ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

## கைதானார்...

அவருக்கு வலிப்பு நோய் இருப்பதாக சொல்லியே வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டதாக தெரியவந்தது.

பாரத லக்ஷ்மன் பெரேரா கொலை வழக்கில் மரணதண்டனை பெற்ற துமிந்த சில்வாவுக்கு வழங்கப்பட்ட பொது மன்னிப்பு செயற்பாட்டை தற்காலிகமாக நேற்றுமுன்தினம் இடைநிறுத்திய உயர் நீதிமன்றம், அவரை உடனடியாக கைது செய்யுமாறு குற்றவியல் விசாரணைத் திணைக்களத்திற்கு உத்தரவிட்டிருந்தது.

அத்துடன் நீதிமன்றத்தின் இந்த இடைக்கால உத்தரவை நடைமுறைப்படுத்த குற்றவியல் விசாரணைத் திணைக்களத்திற்கு உதவுமாறு சட்டமா அதிபருக்கு பணிப்புரை விடுக்கப்பட்டது. இதனை தவிர உயர் நீதிமன்றம் துமிந்த சில்வாவின் கடவுச்சீட்டை முடக்கியும் இடைக்கால உத்தரவை பிறப்பித்தது.

துமிந்த சில்வாவை கைது செய்ய உயர் நீதிமன்றம் பிடியாணை பிறப்பித்துள்ளதாகவும் அவரது உடல் நிலைமை மோசமாக இல்லை என்றால், அவர் கைது செய்யப்படுவார் எனவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் நிஹால் தல்துவ நேற்று பிற்பகல் கூறியிருந்தார்.

ஹிருணிகா பிரேமச்சந்திர நேற்று முற்பகல் தனது பேஸ்புக் பக்கத்தில் பதிவு ஒன்றை இட்டிருந்ததுடன் ஸ்ரீஜயவர்தனபுர வைத்தியசாலையின் 18ஆவது விடுதியில் ஒருவர் அனுமதிக்கப்பட்டுள்ளதாக தகவல் கூறியிருந்தார்.

இதனையடுத்தே, குற்றப்புலனாய்வுப் பிரிவினர் அங்கு விரைந்து துமிந்தவை கைது செய்தனர். அவரின் உடல்நிலையை கருத்திற்கொண்டு கைதுக்குப் பின்னர் அவரை வைத்தியசாலையில் சிகிச்சை பெற அனுமதிப்பது குறித்து நேற்று ஆராயப்பட்டது. எவ்வாறாயினும், அவரை சிறைச்சாலைக்கு அழைத்துச் செல்ல மற்றுமொரு தரப்பு ஏற்பாடுகளை செய்தது. சிகிச்சை முடிந்தகையோடு அவர் சிறைக்கு அழைத்துச் செல்லப்படவுள்ளார்.

## அரசியலமைப்பு திருத்தத்திற்கு...

கடிதமொன்றை சுயாதீனக் குழு நேற்று (01) பிரதமர் ரணில் விக்ரமசிங்க மற்றும் நீதியமைச்சர் விஜேதாச ராஜபக்ஷ ஆகியோருக்கு அனுப்பியுள்ளது. அக்கடிதத்திலேயே இந்த யோசனை உள்ளிட்ட 7 யோசனைகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

அக் கடிதத்தில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

21ஆவது திருத்தம் குறித்து எங்களுடைய கட்சித் தலைவர்களுக்கு உங்களால் (பிரதமர்) அனுப்பிய கடிதம் கிடைத்தது. அக்கடிதத்தின் கோரிக்கைக்கமைய எங்களுடைய யோசனைகளை இணைத்துள்ளோம்.

அதன்படி, அத்தியாவசியமாக இணைக்க வேண்டியவை.

எதாவவொரு சட்டமூலம் நாடாளுமன்றத்தின் தெரிவுக் குழுவின்போது திருத்தங்கள் முன்வைக்கப்பட்டால், அந்த திருத்தங்களுடன் அரசியலமைப்புக்குட்பட்ட சட்டமூலத்துக்கு சபாநாயகர் கைச்சாத்திட்ட ஒரு மாத காலத்திற்குள் எந்தவொரு நபராலும் உயர் நீதிமன்றத்திற்கு முன்னால் கேள்விக்குட்படுத்துவதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டும்.

எந்தவொரு நாட்டுடனும் இலங்கை அரசாங்கம் கைச்சாத்திடும் இரு தரப்பு மற்றும் முத்தரப்பு ஒப்பந்தங்கள் கைச்சாத்திடுவதற்கு முன்னர் நாடாளுமன்றத்தின் அனுமதிக்காக முன்வைக்கப்பட வேண்டும்.

அரச நிறுவனங்களில் மாற்றங்கள் முன்னெடுத்தால் அது தொடர்பான திட்டங்களை நாடாளுமன்றத்தில் முன்வைத்து அனுமதி பெற வேண்டும்.

துறைமுகங்கள், விமான நிலையங்கள் போன்றவற்றின் ஊடாக பெற்றுக்கொள்ளப்படும் பெறுமதியான தேசிய முதலீடுகளின்போதும், வியாபாரங்கள் ஆரம்பிக்கும்போதும் அது தொடர்பான ஒப்பந்தம் தேசிய நிதி திட்டமிடல் ஆணைக்குழுவின் அனுமதியை பெறும் வகையில் திட்டங்களை வகுத்தல் வேண்டும். அதன்பின்னர் அந்த ஒப்பந்தத்திற்கான முழு அனுமதியையும் பெற்றுக்கொள்வதற்கு நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டும்.

பிரதமர் தேசிய பாதுகாப்பு சபையின் உறுப்பினராக இருத்தல் வேண்டும்.

ஜனாதிபதிக்கு பாதுகாப்பு அமைச்சை மாத்திரமே வகிக்க முடியும்.

பொலிஸ் மற்றும் அரச சேவை ஆணைக்குழு ஊடாக முன்னெடுக்கப்படும் எந்தவொரு தீர்மானம் தொடர்பாக எந்தவொரு அமைச்சரும் கேள்வி எழுப்பினால், குறைந்தது இரு வாரங்களுக்குள் அமைச்சருக்கு பதில் வழங்குவதற்கு குறித்த ஆணைக்குழுவின் தலைவருக்கு பொறுப்புள்ளது.

அக்கடிதத்தில் விமல் வீரவங்ச, வாசுதேவ நாணயக்கார, உதய கம்மன்பில, கெவிந்து குமாரதுங்க உள்ளிட்டு 9 கட்சித் தலைவர்களும் கைச்சாத்திட்டுள்ளனர்.

## நாட்டின் பல பகுதிகளில்...

இதேவேளை, காலியிலிருந்து மாத்தறை மற்றும் ஹம்பாந்தோட்டை ஊடாக பொத்துவில் வரையான கடற்பரப்புகள் கொந்தளிப்பாகக் காணப்படும் எனவும் மீனவர்கள் மற்றும் கடற்படையினர் இது தொடர்பில் அவதானத்துடன் செயற்படுமாறும் திணைக்களம் எச்சரித்துள்ளது.

அத்தனகல்லு ஓயா, களு, களனி, நில்வலா மற்றும் கிங் கங்கைகளின் இரு கரைகளிலும் உள்ள தாழ்வான பகுதிகளில் வசிக்கும் மக்கள் அவதானத்துடன் செயற்படுமாறு நீர்ப்பாசனத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதனிடையே, இரத்தினபுரி, கேகாலை, மாத்தறை, கொழும்பு, காலி, களுத்துறை, கண்டி, நுவரெலியா ஆகிய மாவட்டங்களுக்கு விடுக்கப்பட்ட மண்சரிவு அபாய எச்சரிக்கை தொடர்ந்தும் நீடிக்கப்பட்டுள்ளதாக தேசிய கட்டட ஆய்வு நிறுவகம் அறிவித்துள்ளது.

## எம்.பிக்கள்..

மே 9ஆம் திகதி கொழும்பில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்கள் தொடர்பில் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள நாடாளுமன்ற உறுப்பினர்களான சனத் நிஷாந்த, மிலன் ஜயதிலக்க உள்ளிட்ட 11 பேரை ஜூன் 8ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க கோட்டை நீதவான் நீதிமன்றம் நேற்று உத்தரவு பிறப்பித்துள்ளது.

## மதுபானம், சிகரெட்...

இதேவேளை, நேற்று(1) நள்ளிரவு முதல் அனைத்து உள்ளூர் சிகரெட்டுகளின் விலைகளும் அதிகரிக்கப்பட்டுள்ளதாக இலங்கை புகையிலை நிறுவனத்தின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார். ஒரு சிகரெட் 5ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

வற் வரியை அதிகரிக்க அரசாங்கம் மேற்கொண்ட நடவடிக்கையின் காரணமாகவே இந்த விலை அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

## மக்களின் நலனை...

இதன்போது, கடற்றொழில் அமைச்சின் செயலாளர் திருமதி இந்து இரத்னாயக்க மற்றும் கடற்றொழில் திணைக்களம், இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனம், இலங்கை மீன்பிடித் துறைமுகக் கூட்டுத்தாபனம், நக்டா, நாரா, வடகடல், சீநோர் ஆகிய திணைக்களங்களின் நிறைவேற்று அதிகாரிகள், தாங்கள் எதிர்கொள்கின்ற நடைமுறை சவால்கள் மற்றும் எதிர்பார்ப்புகள் தொடர்பாக கருத்துகளை முன்வைத்து கலந்துரையாடினர்.

இலங்கை மீன்பிடித் துறைமுகத்தினால், மீன்பிடிக் கலன்களுக்கான எரிபொருட்கள் விநியோகிக்கப்படுகின்ற நிலையில், தேவையானளவு எரிபொருட்களை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திடம் இருந்து பெற்றுக் கொள்ளவதில் இருக்கும் நடைமுறைச் சிக்கல்கள் தொடர்பாக ஆராயப்பட்டது.

கடலுணவுகளை பாதுகாத்து சந்தைக்கு அனுப்புவதில் காணப்படுகின்ற சவால்கள் தொடர்பாக இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபன அதிகாரிகளினால் எடுத்துக் கூறப்பட்ட நிலையில், நாட்டுக்கு குறிப்பிடத்தக்களவு அந்நியச் செலாவணியை ஈட்டித் தருகின்ற இறால் பண்ணைகளில் வளர்க்கப்படும் இறால்கள் உட்பட, பண்ணைகளில் வளர்க்கப்படுகின்ற கடலுணவுகளுக்கான உணவுகளை இறக்குமதி செய்வதற்கு தடையாக டொலர் பற்றாக்குறை காணப்படுவதாகவும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளினால் சுட்டிக்காட்டப்பட்டது.

அதேபோன்று, வடகடல் மற்றும் சீநோர் ஆகிய நிறுவனங்களின் உற்பத்திகளுக்குத் தேவையான மூலப்பொருட்களை பெற்றுக் கொள்வதில் காணப்படும் இடையூறுகள் தொடர்பாகவும் பிரஸ்தாபிக்கப்பட்டது.

இதன்போது கருத்து தெரிவித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா,

"தற்போதைய சூழலில், எம்மிடம் இருக்கின்ற உற்பத்திசார் வேலைத்திட்டங்களை தனியார் முதலீட்டாளர்களின் ஒத்துழைப்புடன் முன்கொண்டு சென்று வருமானத்தை உருவாக்குவதற்கான வழிவகைகள் தொடர்பாக ஆராய வேண்டும்.

எனினும், விரைவில் ஜனாதிபதியுடனான சந்திப்பின்போது, எரிபொருள் போன்ற அடிப்படை தேவைகளை முடிந்தளவு பெற்றுக்கொள்வது தொடர்பாக ஆராய்ந்து சாதகமான முடிவுகளை பெற்றுக்கொள்ள முடியும் " என்று தெரிவித்தார்.

மேலும், எவ்வாறான சவால்கள் ஏற்பட்டாலும் நாட்டு மக்களுக்கு ஆரோக்கியமான கடலுணவு தாராளமாக - நியாயமான விலையில் கிடைப்பது உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்பதுடன், கடற்றொழில்சார் மக்களின் வாழ்வாதாரமும் பாதுகாக்கப்படும் வகையில், கடற்றொழில் அமைச்சு சார்ந்த அதிகாரிகளின் செயற்பாடுகள் அமைய வேண்டும் என்று தெரிவித்தார்.

## அத்தியாவசியமற்ற...

செல்லுபடியாகும் உரிமம் இல்லாவிடின், அத்தியாவசியமற்ற 369 பொருட்களை இலங்கைக்குள் இறக்குமதி செய்வதை மட்டுப்படுத்தி கடந்த மார்ச் 9ஆம் திகதி வர்த்தமானி அறிவித்தல் ஒன்று வெளியிடப்பட்டிருந்தது.

இந்நிலையில், குறித்த 369 அத்தியாவசிய பொருட்களை செல்லுபடியாகும் உரிமம் இன்றி இறக்குமதி செய்ய அனுமதி வழங்கி நேற்று முதல் அமுலுக்கு வரும் வகையில் வர்த்தமானி அறிவித்தல் ஒன்று வெளியிடப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், தற்போது நிலவும் வரிகள் உட்பட பொருந்தக்கூடிய விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளுக்கு உட்பட்டு இவ்வாறு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## திங்கட்கிழமை முதல்...

போக்குவரத்தில் ஈடுபட பஸ்களுக்கு முறையான டீசல் கிடைக்காததால், திங்கட்கிழமை (06) முதல் அனைத்து தனியார் பஸ்களும் சேவையில் ஈடுபடாது என இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன கொழும்பில் தெரிவித்துள்ளார்.

க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை முடிவடைந்துள்ள நிலையில், இந்தத் தீர்மானம் எடுக்கப்படவுள்ளதாக விஜேரத்ன தெரிவித்தார்.

மேலும், டீசல் பெறுவதற்கு பஸ்கள் பல நாட்கள் வரிசையில் காத்திருக்க வேண்டியுள்ளது என்றார். தனியார் பஸ்களுக்கு இலங்கை போக்குவரத்து சபை டிப்போவில் எரிபொருள் வழங்குவதாக கூறப்பட்டாலும், அதற்கான முறையான வேலைத்திட்டம் எதுவும் நடைமுறைப்படுத்தப்படவில்லை என விஜேரத்ன தெரிவித்தார்.

இந்த வாரம் பயணிகள் பஸ்களுக்கு டீசல் வழங்க அரசு முன்னுரிமை அளிக்காவிட்டால், திங்கட்கிழமை முதல் பஸ் சேவைகள் முழுமையாக நிறுத்தப்படும் என்றும் அவர் கூறினார்.

## அமைச்சுப் பொறுப்புகளை...

கட்சியின் மத்திய குழுவின் தீர்மானத்துக்கு அமைய அமைச்சர்களான நிமல் சிறிபால டி சில்வா மற்றும் மஹிந்த அமரவீர ஆகியோரே இவ்வாறு கட்சியின் அனைத்து பதவிகளிலிருந்தும் நீக்கப்பட்டுள்ளதாக கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மைத்ரிபால சிறிசேன விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அவர் நேற்று (01) ஊடகங்களுக்கு வெளியிட்ட அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் இறுதி மத்திய குழுக் கூட்டத்தில் நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சியில் இருந்துகொண்டு மக்களுக்காக எடுக்கும் நல்ல முடிவுகளுக்கு மாத்திரம் கட்சி என்ற அடிப்படையில் அரசாங்கத்திற்கு ஆதரவளிக்கும் என தீர்மானிக்கப்பட்டது.

அந்தத் தீர்மானத்திற்கு மாறாக எந்தவொரு நாடாளுமன்ற உறுப்பினரும் அமைச்சுப் பதவியைப் பெற்றால், அவர் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்குள் வகிக்கும் சகல பதவிகளில் இருந்தும் நீக்கப்பட வேண்டுமெனவும் கட்சியின் மத்திய குழு ஏகமனதாக தீர்மானித்தது.

இதன்படி, அரசாங்க அமைச்சுப் பதவிகளைப் பெறும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்கள் யாராக இருந்தாலும் அவர்கள் அக்கட்சியில் வகிக்கும் அனைத்து பதவிகளில் இருந்தும் நீக்கப்படுவார்கள் - என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

## ஞானசார தேரருக்கு...

கடந்த 2014 ஆம் ஆண்டு ஏப்ரல் 12ஆம் திகதி ஞானசார தேரர் செய்தியாளர் சந்திப்பு ஒன்றை நடத்தியிருந்தார். அதில் இஸ்லாமிய புனித நூலான புனித அல்குர்ஆனை அவமதிக்கும் வகையில் கருத்து வெளியிட்டுள்ளார்.

இது சம்பந்தமாக நடத்தப்பட்ட விசாரணை அறிக்கை சட்டமா அதிபருக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தது. இதனடிப்படையில் ஞானசார தேரருக்கு எதிராக குற்றச்சாட்டு பத்திரத்தை தாக்கல் செய்யுமாறு சட்டமா அதிபர், பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார்.

பொதுபல சேனா அமைப்பின் செயலாளரான ஞானசார தேரர், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நியமித்த 'ஒரு நாடு - ஒரு சட்டம்' தொடர்பான ஜனாதிபதி செயலணிக்குழுவின் தலைவராக கடமையாற்றி வருகிறார்.

## அரசியல்வாதியின்...

மதுபான உற்பத்தி நிறுவனங்களிற்கு பல்வேறு நிபந்தனைகளை உள்ளடக்கி மது விற்பனையில் சந்தை ஏகபோகத்தை நிறுவுவதைத் தடுக்க நடவடிக்கை எடுக்கவும் மதுவரித் திணைக்களத்திற்கு உத்தரவிட்டது.

இதன் விளைவாக மதுவரித் திணைக்களம், அரச பகுப்பாய்வாளர் திணைக்களம், இலங்கை தரநிலை நிறுவனம், தொழில்துறை தொழில்நுட்ப நிறுவனம் மற்றும் உள்ளூர் மதுபான தொழிற்துறை உறுப்பினர்கள் இணைந்து நாட்டில் உள்ள அனைத்து மதுபானங்களுக்கும் புதிய தரநிலைகளை அறிமுகப்படுத்தினர்.

எனினும், குருநாகல் மற்றும் களுத்துறையில் ஆளுங்கட்சியைச் சேர்ந்த பிரபல அரசியல்வாதி ஒருவருக்குச் சொந்தமான இரண்டு மதுபான உற்பத்தி ஆலைகள் தொடர்பான அதிர்ச்சிகரமான தகவல் வெளியாகியுள்ளது.

மூன்று வாரங்களுக்கு முன்னர் களுத்துறை மற்றும் குருநாகலில் உள்ள இந்த இரண்டு தொழிற்சாலைகளிலும் உற்பத்தி செய்யப்பட்ட இரண்டு உள்ளூர் வகை சாராயங்களின் மிகப்பெரிய தொகுதி, அரச பகுப்பாய்வு திணைக்களத்தின் இறுதி தர அங்கீகார சான்றிதழைப் பெறாமல் சந்தைக்கு விநியோகிக்கப்பட்டுள்ளதாக அந்த செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும், பின்னர் வெளியான அரச பகுப்பாய்வுத் திணைக்களத்தின் அறிக்கையில் பல அதிர்ச்சித் தகவல்கள் வெளியாகின.

குறிப்பிடப்பட்ட மதுபான தொகுதி தரமற்றவை, அதில் ஐசோபிரைல் அல்கஹோல் போன்ற ஆபத்தான இரசாயனங்கள் கலந்திருந்தது தெரிய வந்தது. இந்த அபாயமான இரசாயனங்கள் பொதுவாக ஆஃப்டர் ஷேவ் லோஷன்கள், கை சுத்திகரிப்பு திரவங்கள் மற்றும் பிற அழகுசாதனப் பொருட்களில் அல்கஹோல் கிருமி நாசினியாகப் பயன்படுத்தப்படுகிறது.

அரச பகுப்பாய்வுத் திணைக்களத்தின் உடனடி அறிவுறுத்தல்படி, குறிப்பிடப்பட்ட இரண்டு மதுபான நிறுவனங்களும் குறிப்பிட்ட தொகுதியின் அனைத்து தயாரிப்புகளையும் சேகரித்து அவற்றை அழிக்காமல் தொழிற்சாலைகளுக்கு திருப்பி அனுப்ப வழிவகுத்தது. இது மிகவும் சந்தேகத்திற்குரியது என்று கலால் வட்டாரங்கள் தெரிவித்தன.

தற்போது இந்த இரண்டு மதுபானத் தொழிற்சாலைகளிலும் கலால் பிரிவுகளுக்குப் பொறுப்பான சில கலால் அதிகாரிகள், இந்த அபாயகரமான கையிருப்புகளை பொதுமக்களுக்கு வெளியே அனுமதித்ததற்காக அரச பகுப்பாய்வுத் திணைக்களம் மற்றும் சட்ட அமுலாக்க அதிகாரிகளால் விசாரிக்கப்பட்டனர்.

எவ்வாறாயினும், குறிப்பிட்ட நிறுவனங்களின் உரிமையாளரின் ஈடுபாட்டுடன் சில அரசாங்க அதிகாரிகளின் பெரும் அழுத்தத்தால் இந்த விடயத்தில் ஒரு பாரபட்சமற்ற விசாரணை நிறுத்தப்பட்டுள்ளது என்று அந்த செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## டொலர் பற்றாக்குறை...

இதில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்த ஹஜ் பயண ஏற்பாட்டாளர்கள், சங்கத்தின் பிரதிநிதிகள் கூறியதாவது,

இந்த வருடம் 1,585 ஹஜ் பயணிகளுக்கு இலங்கையில் இருந்து ஹஜ் பயணத்துக்கான அனுமதியை சவூதி அரேபியா வழங்கியுள்ளது.

குறித்த அளவிலான ஹஜ் பயணிகள் மக்கா சென்று திரும்ப சுமார் பத்து மில்லியன் அமெரிக்க டொலர்கள் செலவாகும். நமது நாடு கடுமையான டொலர் பற்றாக்குறையால் நெருக்கடியை எதிர்கொண்டுள்ளது. இந்த நிலையில், அந்தளவு டொலர்களை செலவிட முஸ்லிம்கள் விரும்பாத காரணத்தினால் இந்த ஆண்டுக்கான ஹஜ் பயணம் கைவிடப்படுகின்றது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## புதிய அரசியல் கூட்டணி...

கூட்டணிக்கான பெயர் மற்றும் கொள்கைத் திட்டங்கள் தொடர்பில் தற்போது ஆராயப்பட்டு வருகின்றன என்று ஜனநாயக இடதுசாரி முன்னணியின் தலைவர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

கூட்டு தலைமைத்துவம் என்பது பிரதான இலக்காக இருந்தாலும், தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவங்சவே தலைவர் என்ற அந்தஸ்திலிருந்து செயற்படுவார் எனவும் வாசுதேவ குறிப்பிட்டார்.

புதிய கூட்டணியானது, அடுத்த பொதுத்தேர்தலில் களமிறங்கினால், பிரதமர் வேட்பாளர் யார் என்ற வினாவுக்கான பதிலையும் வாசுதேவ நாணயக்கார வெளியிட்டுள்ளார். விமல் வீரவங்ச அதற்கு பொருத்தமானவர் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். 9 கட்சிகளின் தலைவர்கள் பங்கேற்ற விசேட கூட்டம் நேற்றுமுன்தினம் மாலை இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி தலைமையகத்தில் நடைபெற்றது.

இதன்போது அரசமைப்புக்கான உத்தேச 21 ஆவது திருத்தச் சட்டமூலம் தொடர்பில் விரிவாக ஆராயப்பட்டுள்ளன. முன்வைக்கப்பட வேண்டிய திருத்தங்கள் சம்பந்தமாகவும் பேசப்பட்டுள்ளன. அந்தவகையில் 9 கட்சிகளின் யோசனை நீதி அமைச்சருக்கு அனுப்பிவைக்கப்படும் என விமல் வீரவங்ச தெரிவித்தார்.

21ஐ தோற்கடிப்பதற்கு பெசில் ராஜபக்ஷ முற்பட்டாலும், அதனை முறியடிப்பதற்கான நடவடிக்கை முன்னெடுக்கப்படும் என 9 கட்சிகளின் பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர்.

அதேவேளை, புதிய அரசியல் கூட்டணியை உருவாக்குவதற்காக முன்னெடுக்கப்படும் நகர்வுகள் தொடர்பிலும் இக்கூட்டத்தில் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது. புதிய கட்சிகளையும் அமைப்புகளையும் இணைத்துக்கொள்வதற்கும் இணக்கம் காணப்பட்டுள்ளது.

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி அரசுக்கு வழங்கிவந்த ஆதரவை, தேசிய சுதந்திர முன்னணி, ஜனநாயக இடதுசாரி முன்னணி, புதிய ஹெல உறுமய, இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி, லங்கா சமமாஜகக்கட்சி, தேசிய காங்கிரஸ், யுத்துகம உட்பட 10 கட்சிகள் மீளப்பெற்றன.

இதனையடுத்து, அக்கட்சிகள் நாடாளுமன்றத் தில் சுயாதீன அணியாகச் செயற்பட்டது. இக்கூட்டணியில் இடம்பெற்றிருந்த டிரான் அலஸ், அரசை ஆதரித்து, அமைச்சுப் பதவியைப் பெற்றுக்கொண்டுள்ளார். இதனால் 10 கட்சி கூட்டணியில் இருந்து அவரின் கட்சி வெளியேற்றப்பட்டுள்ளது. தற்போது 9 கட்சிகள் செயற்படுகின்றன.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் 9 கட்சிகளுடன் அரசியல் உறவு இருக்கின்றது. எனினும், புதிய கூட்டணியில் இடம்பெறுவது சம்பந்தமாக அக்கட்சி இன்னும் முடிவு எடுக்கவில்லை. ஆனால், தேர்தலொன்று வரும்பட்சத்தில் அக்கட்சிகளுடன் இணையும் சாத்தியமே காணப்படுகின்றது.

21ஆவது திருத்தச் சட்டமூலத்தை தோற்கடிப்பதற்கான நகர்வுகள் இடம்பெற்று வருகின்றன என்ற அச்சத்தை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் வெளியிட்டிருக்கின்றது.


### வெற்றி நிச்சயம்

**உங்கள் பிரச்சினை எதுவானாலும் ஒருமுறை என்னைத் தொடர்பு கொண்டால் 100% வெற்றி நிச்சயம். நடக்காத காரியங்களையும் நடத்தி வைக்கும் சக்தி என்னிடம் மட்டுமே உண்டு. என்னை நம்புங்கள். பணப்பிரச்சினை, வியாபார மந்தம், கடன், முன்னேற்றத்தடை, எதிரித் தொல்லை, வழக்கு, கொடுத்த பணம் திரும்பி வர, கணவன் மனைவி பிரச்சினை, நீண்டகால நட்பின் பிரிவால் வேதனை, நன்றாக பழகி பயனடைந்து விட்டு விலகிச்சென்றுவிட்டவர், குழந்தையின்மை மற்றும் சகல பிரச்சினைகளுக்கும் நிரந்தரத் தீர்வு நினைத்தது நினைத்தபடி நடக்க உடனே என்னை தொடர்புகொள்ளுங்கள். உலகப்புகழ்பெற்ற மலையாள மாந்திரீக ஜாம்பவான் தத்துவஞானி மகரிஷி தேசபந்து கௌரவ கலாநிதி ஸ்ரீமத் சுவாமிஜி**

071 5869631 www.facebook.com / srimath Suwamiji

மரண அறிவித்தல், நினைவஞ்சலி, மற்றும் பிறந்தநாள் விளம்பரங்களை குறைந்த கட்டணத்தில் பிரசுரிக்க வெறும் 1000/= மட்டுமே...

அழையுங்கள் 0761393805

# வவுனியா கணேசபுரத்தில் சடலமாக மீட்கப்பட்ட சிறுமியின் பிரேத பரிசோதனை வெளியானது

## உடலுக்குள் அதிகளவு நீர் சென்றமையால் மரணம் சம்பவித்துள்ளதாக தகவல்

(வவுனியா செய்தியாளர்)

வவுனியா கணேசபுரம் 8ஆம் ஒழுங்கை பகுதியில் பராமரிப்பற்ற கிணற்றிலிருந்து கடந்த திங்கட்கிழமை இரவு 9.30 மணியளவில் சடலமாக மீட்கப்பட்ட 16 வயதுடைய சிறுமி ராசேந்திரன் யதுர்சியின் மரணத்தில் பொலிஸாருக்கு சந்தேகம் நிலவியதினையடுத்து சிறுமியின் சடலம் பிரேத பரிசோதனைக்காக வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் வைக்கப்பட்டிருந்த நிலையில் நேற்று (01) மதியம் சட்ட வைத்திய அதிகாரியினால் சடலம் உடற்கூற்று பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

சிறுமியின் உடற்பகுதிக்குள் அதிகளவில் நீர் சென்றமையினால் மூச்சுத்திணறல் ஏற்பட்டு மரணம் நிகழ்ந்துள்ளதுடன் சிறுமியின் உடலில் எவ்வித காயங்களோ அல்லது எவ்வித தடயங்களோ காணப்படவில்லை என பரிசோதனை முடிவுகளை மாலை 4.30 மணியளவில் சட்ட வைத்திய அதிகாரி ஆர்.தனுஜன் தெரிவித்தார்.

குறித்த சிறுமி தாய் தந்தையினை பிரிந்த நிலையில், மாமாவின் அரவணைப்பில் வசித்து வந்ததுடன் சம்பவதினம் மதியம் தனியார் கல்வி நிலையம் சென்று மாலை 5.30 மணி வரை வீடு திரும்பவில்லை. இதனையடுத்து, குறித்த சிறுமியினை தேடிய உறவினர்கள் அவரைக் கண்டுபிடிக்க முடியாமையால் நெளுக்குளம் பொலிஸில் முறைப்பாடு செய்தனர்.

உறவினர்களால் நெளுக்குளம் பொலிஸாருக்கு வழங்கிய தகவலுக்கமைய வவுனியா சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர், வவுனியா மாவட்ட உதவி பொலிஸ் அத்தியட்சகர், வவுனியா பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி, தடயவியல் பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் சம்பவ இடத்திற்கு வருகை தந்து அப்பகுதியில் மோப்ப நாயின் உதவியுடன் விசாரணைகளை முன்னெடுத்தனர்.

இதன்போது கிணற்றிலிருந்து 70மீற்றர் தூரத்திலுள்ள மரத்தின் கீழ்ப்பகுதியில் சிறுமியின் காலணி மற்றும் புத்தகங்கள் மீட்கப்பட்டதுடன் மோப்ப நாயின் உதவியுடன் மேற்கொள்ளப்பட்ட சோதனையில் மோப்ப நாய் கிணறு அமைந்துள்ள பகுதியிலிருந்து 100 மீற்றர் தூரத்திலுள்ள காணியில் அமைந்துள்ள வர்த்தக நிலையத்தில் தஞ்சம் அடைந்திருந்தது. குறித்த பாவனையற்ற வர்த்தக நிலையத்தில் மதுபான போத்தல்கள் மற்றும் கயிறும் காணப்பட்டது.

குறித்த சம்பவம் தொடர்பில் உறவினர், அயலவர்கள் என பலரிடம் நெளுக்குளம் பொலிஸார் மற்றும் மாவட்ட குற்றத்தடுப்பு பொலிஸார் இணைந்து விசாரணைகளை முன்னெடுத்திருந்ததுடன் வாக்குமூலத்தினையும் பெற்றிருந்தனர்.சடலம் பிரேத பரிசோதனைக்காக வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு பிரேத அறையில் வைக்கப்பட்ட நிலையில், இரண்டு நாட்களின் பின்னர் சட்ட வைத்திய அதிகாரியின் முடிவுகள் வெளியாகியுள்ளதுடன் சிறுமியின் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

# சீரற்ற காலநிலையால் பரீட்சைக்கு தோற்றிய மாணவர்கள் பாதிப்பு

## ஆசிரியர் சங்கம் குற்றச்சாட்டு



சீரற்ற காலநிலை காரணமாக 2021 க.பொ.த சாதாரண தரப் பரீட்சைக்கு தோற்றிய மாணவர்கள் பல சிரமங்களை எதிர்நோக்கியுள்ளதாக ஆசிரியர் சங்கம் குற்றஞ்சுமத்தியுள்ளது.

விடைத்தாள்கள் நனைந்ததால் மாணவர்கள் சிலர் பரீட்சைக்கு முகங்கொடுக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக இலங்கை ஆசிரியர் சேவை சங்கம் தெரிவித்துள்ளது.

சீரற்ற காலநிலையை கருத்தில் கொண்டு நியாயமான தீர்வை அதிகாரிகள் வழங்க வேண்டும் என இலங்கை ஆசிரியர் சேவை சங்கத்தின் செயலாளர் மஹிந்த ஜயசிங்க தெரிவித்தார்.

கலை மாணவர்களின் கலைப் படைப்புகள் உலராமல் இருப்பதால் அவர்கள் அசௌகரியங்களை எதிர்கொண்டதாகவும் அவர் குறிப்பிட்டார்.

பரீட்சை நிலையங்களுக்குச் செல்வதில் மாணவர்கள் சிரமங்களை எதிர்கொண்டதாகவும் ஜயசிங்க மேலும் தெரிவித்தார். மாணவர்கள் எதிர்நோக்கும் சிரமங்கள் தொடர்பில் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்திற்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# எரிவாயுவுக்காக பொலிஸாருடன் சாணக்கியன் எம்.பி. வாக்குவாதம்



(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு நகர் பயினியர் வீதியில் கடந்த மூன்று தினங்களாக எரிவாயுவுக்காக காத்திருந்த மக்களுக்கு நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் எரிவாயுக்கான டோக்கன் வழங்குமாறு பொலிஸாரிடம் கோரியபோது அதனை வழங்க முடியாது என தெரிவித்த பொலிஸ் அதிகாரிக்கும் சாணக்கியனுக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டதையடுத்து நேற்று (01) அங்கு பதற்ற நிலை ஏற்பட்டது.

குறித்த பகுதியில் எரிவாயு பெறுவதற்காக வீதியில் கடந்த 3 தினங்களாக சுமார் ஆயிரத்துக்கு மேற்பட்ட பொதுமக்கள் வெற்று சிலிண்டருடன் காத்திருக்கின்றனர். இந்த நிலையில் குறித்த பகுதிக்கு நாடாளுமன்ற உறுப்பினர்களான இரா.சாணக்கியன், கே. கருணாகரன் ஆகியோர் சென்று அந்த மக்களுடன் கலந்துரையாடினர்.

இதன்போது நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன், எரிவாயு எதிர்வரும் 4ஆம் திகதி வழங்கப்படும் எனவும் கொழும்பில் எரிவாயு உள்ளதாகவும் இங்கு காத்திருந்தால் எரிவாயுவை பெற்றுக் கொள்ள முடியாது எனவே, எரிவாயுவை பெறுவதற்கு 3 இடங்கள் இருப்பதாகவும் ஆளுங் கட்சியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் சிவனேசதுரை சந்திரகாந்தனின் காரியாலயத்துக்கு முன்னாலும் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். வியாழேந்திரன் வீட்டிற்கு முன்னாலும் மாவட்ட செயலக காரியாலயத்துக்கு முன்னாலும் சென்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டால் அவர்கள் கொழும்பில் இருந்து எரிவாயுவை கொண்டு வந்து தருவார்கள் எனவும் மக்களிடம் தெரிவித்தார்.

இதன்போது மட்டக்களப்பு தலைமையக பொறுப்பதிகாரி பி.கே.ஹெட்டியாராச்சி சிறு குற்றப்பிரிவு பொறுப்பதிகாரி மொஹமட் ஆகியோர் சென்ற போது வரிசையில் நிற்பவர்களுக்கு எரிவாயு வரும் போது பெற்றுக் கொள்வதற்காக டோக்கன் வழங்க முடியுமா என சாணக்கியன் எம்.பி. கேட்டபோது அதற்கு சிறு குற்றப்பிரிவு பொறுப்பதிகாரி டோக்கன் வழங்க முடியாது என தெரிவித்ததையடுத்து அவர், நீ யார் வழங்க முடியாது என்று கூற என அந்த பொலிஸ் அதிகாரியை கேட்டு இருவருக்கும் இடையே ஏற்பட்ட வாக்குவாதத்தையடுத்து அந்த அதிகாரி அங்கிருந்து வெளியேறினார்.

இதனைத் தொடர்ந்து அரசாங்க அதிபருடன் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தொடர்பு கொண்டபோது, எரிவாயுவுக்காக காத்திருக்க வேண்டாம். இன்று 100 பேருக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார். அதன் பின்னர் அங்கிருந்து நாடாளுமன்ற உறுப்பினர்கள் வெளியேறினர்.

# திருகோணமலையில் 6 கிராம் ஹெரோயினுடன் ஒருவர் கைது

(கந்தளாய் நிருபர்)

திருகோணமலை தலைமையக பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் 6 கிராம் ஹெரோயின் போதைப் பொருளை வைத்திருந்த ஒருவரை எதிர்வரும் 6ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு திருகோணமலை நீதிமன்ற நீதவான் நேற்று(1) உத்தரவிட்டார்.

கேணியடி, திருக்கடலூர், திருகோணமலை பகுதியைச் சேர்ந்த 29 வயதுடைய ஒருவரே இவ்வாறு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

சந்தேக நபர் திருகோணமலை பகுதியில் ஹெரோயின் போதைப் பொருள் விற்பனை செய்து வருவதாக திருகோணமலை போதைப்பொருள் குற்றத்தடுப்பு பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் சோதனை நடவடிக்கைகளை மேற்கொண்ட போதே 6 கிராம் ஹெரோயின் போதைப் பொருளுடன் கைது செய்ததாக திருகோணமலை தலைமையக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சந்தேக நபரை பொலிஸார் திருகோணமலை நீதிமன்ற நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தியபோதே விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.



தமிழக மீனவர்களின் பாரம்பரிய உரிமையினை நிலைநாட்டும் வகையில், கச்சதீவை மீட்பதற்கு இதுவே உகந்த தருணம் என தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அண்மையில் தெரிவித்தமை அரசியல் அரங்கின் பிரதான பேசுபொருளாக மாறியுள்ளது.

கச்சதீவை மீட்டெடுப்பது தமிழக அரசின் முதன்மைக் குறிக்கோளாக உள்ளதாக தமிழக அரசின் மீன்வளத்துறை கொள்கை விளக்கக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன், கச்சதீவு மீதான இந்தியாவின் இறையாண்மையை மீட்டெடுப்பதன் மூலம் பாரம்பரிய மீன்பிடிக்கும் உரிமையைத் திரும்ப பெற முடியும் என்று தமிழக அரசு தொடர்ந்தும் வலியுறுத்துவதாகவும் அந்த கொள்கை விளக்கக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அண்மையில் டெல்லியில் பாரதப் பிரதமரை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்திய தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின், தனது 14 அம்சக் கோரிக்கைகளில் கச்சதீவு மீட்பு தொடர்பிலும் வலியுறுத்தியிருந்தார்.

இதனிடையே, பாரதிய ஜனதா கட்சியின் தமிழக மாநிலத் தலைவர் குப்புசாமி அண்ணாமலையின் அண்மைய இலங்கை விஜயத்தின்போது, கட்சியின் தேசியத் தலைவர் ஜகத் பிரகாஷ் நட்டாவுடன் தொலைபேசியில் கச்சதீவு மீட்பு தொடர்பில் அவர் உரையாடியதாக தமிழக ஊடகமொன்று செய்தி வெளியிட்டிருந்தது.

இலங்கைத் தமிழர்கள், தமிழகத்தில் உள்ள தமிழர்கள் மட்டுமல்லாது, உலகம் முழுதும் உள்ள தமிழர்களிடம் பெரும் செல்வாக்கைப் பெற வேண்டுமானால், கச்சதீவை இந்தியா 99 ஆண்டுகள் குத்தகைக்கு பெற வேண்டும் என இதன்போது அவர் கூறியதாக அந்த செய்தியில் குறிப்பிடப்பட்டிருந்தது.

இதனிடையே, இந்திய மத்திய அரசின் 31,400 கோடி இந்திய ரூபா செலவிலான 11 மக்கள் நலத் திட்டங்களை பிரதமர் நரேந்திர மோடி அண்மையில் தமிழகத்தில் அங்குரார்ப்பணம் செய்து வைத்தபோது, இந்திய மத்திய அரசு கச்சதீவினை மீட்டெடுத்து தமிழக பாரம்பரிய மீனவர்களின் மீன்பிடி உரிமையை நிலைநாட்ட நடவடிக்கை எடுக்க வேண்டுமென தமிழக முதல்வர் பாரதப் பிரதமரிடம் கோரிக்கை விடுத்திருந்தார்.

தமிழக முதல்வரின் வேண்டுகோள் தொடர்பில் பாரதப் பிரதமர் குறித்த நிகழ்வில் எந்தவொரு கருத்தும் தெரிவிக்கவில்லை. இந்நிலையில், கச்சதீவை மீளப்பெறும் திட்டம் தொடர்பில் வட மாகாண கடற்றொழிலாளர் இணையம் அதிருப்தி வெளியிட்டது.

"பசித்தவனுக்கு சாப்பாடு கொடுத்துவிட்டு கிட்னியை எடுத்த மாதிரிதான் இந்த நடவடிக்கை. ஒரு வாரத்திற்கு சாப்பாடு கொடுப்பதால் வட பகுதி மக்களோ, இலங்கையில் உள்ள மக்களோ வாழ முடியுமா? நன்மை செய்யாவிடினும் துரோகம் செய்யாதீர்கள். இந்தியா தொப்புள்கொடி உறவு என்று நாங்கள் சொல்லும்போது, இன்று இந்தியா கிட்னியை பறிக்கும் வேலையை செய்கிறது" என கடற்றொழிலாளர் இணையத்தின் காத்தலிங்கம் அண்ணாமலை தெரிவித்திருக்கிறார். அவர் கூற்றிலும் ஒரு நியாயப்பாடு இருக்கிறது.

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42,
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com
2022, ஜூன் 02ஆம் திகதி, வியாழக்கிழமை

# வேண்டாமொரு அவப்பெயர்!

1974 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 26 ஆம் திகதி இந்தியாவின் முன்னாள் பிரதமர் இந்திரா காந்திக்கும், இலங்கையின் முன்னாள் பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்கவிற்கும் இடையில் ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட ஒப்பந்தம் ஊடாக இலங்கையிடம் கச்சதீவு கையளிக்கப்பட்டது.

கச்சதீவு ஒப்பந்தத்தின் பிரகாரம், இந்திய மீனவர்கள் கச்சதீவில் மீன்பிடி வலைகளை உலர்த்திக்கொள்ளவும், கச்சதீவு புனித அந்தோனியார் ஆலய உற்சவத்தில் இந்தியர்கள் பங்கேற்கவும் உரிமை வழங்கப்பட்டுள்ளது. எனினும், இந்திய மீனவர்களுக்கு மீன்பிடிப்பதற்கான உரிமை தொடர்பில் அதில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

தமிழகத்தின் இராமநாதபுரத்தில் இருந்து 12.4 கடல் மைல் தொலைவிலும் நெடுந்தீவில் இருந்து 10.5 கடல் மைல் தொலைவிலும் கச்சதீவின் அமைவிடமுள்ளது. கச்சதீவில் இருந்து மேற்குத் திசையில் ஒரு கடல் மைல் தொலைவில் இந்திய கடற்பரப்பு அமைந்துள்ள நிலையில், குறித்த பகுதியூடாக இலங்கைக் கடற்பரப்பில் தொடர்ச்சியாக அத்துமீறி நுழையும் இந்திய மீனவர்கள், நாட்டின் கடல் வளத்தினை கபளீகரம் செய்து வருவதான குற்றச்சாட்டு பலகாலம் இருந்துவருகிறது.

1920 ஆம் ஆண்டில் கச்சதீவு எங்களுக்குத்தான் சொந்தம் என்று இலங்கை அரசு கூற ஆரம்பித்தது.

இந்தியா 1956ஆம் ஆண்டிற்குப் பின்னால் தன்னுடைய கடல் எல்லை கோட்டை 3 கடல் மைல்களில் இருந்து 6 கடல் மைல்களாக விரிவுபடுத்தியது. அத்துடன் மீன்பிடிக்கும் உரிமையை 100 கடல் மைல்கள் தூரத்திற்கு விரிவுபடுத்தியது. கச்சதீவைக் கைப்பற்ற இந்தியா எடுக்கும் முயற்சி என்று இதனை இலங்கை அரசு கருதி போட்டியாக 1970 இல் அதேபோன்ற ஒரு அறிவிப்பை இலங்கை வெளியிட்டது.

1973 ஆம் ஆண்டு அன்றைய பிரதமரான இந்திராகாந்தி இலங்கை வந்தார். 1974 ஆம் ஆண்டு இலங்கை பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்க இந்தியா சென்றார். இந்திராவும், சிறிமாவோவும் நடத்திய பேச்சுவார்த்தையில் தமிழகத்தை கேட்காமலேயே கச்சதீவு கைமாறியது. 28.06.1974 இல் கச்சதீவை இந்தியா இலங்கைக்கு தாரைவார்த்து, அந்த ஒப்பந்தத்தில் இந்திய மற்றும் இலங்கைப் பிரதமர்கள் கையெழுத்திட்டனர்.

கச்சதீவு யாருக்கு சொந்தம் என்பது குறித்து இப்போது அவசர அவசரமாக பேசுவது முறைதானா என்று எண்ணத்தோன்றுகிறது. இலங்கையின் பொருளாதார நெருக்கடியால் மக்கள் அல்லலுறும் சூழ்நிலையில் அவர்களுக்கு நிவாரண உதவிகளை செய்துவரும் தமிழக அரசு, இக்கட்டான இந்த நேரத்தில் கச்சதீவைப் பற்றிப் பேசுவது நயமான, நாகரீகமான விடயமல்ல. கச்சதீவைப் பெறும் உள்நோக்கத்துடன்தான் இலங்கை மக்களுக்கு தமிழக அரசு உதவியதாக ஒரு அபிப்பிராயம் இலங்கை மக்களுக்கு வந்து விடக்கூடாது.

அதுவும் குறிப்பாக சிங்கள மக்களிடம் அப்படியொரு கருத்து உருவானால் அது இந்த நல்லெண்ண முயற்சிகளையே பாதித்துவிடும். ஏற்கனவே இலங்கையில் சிங்கள ஊடகங்கள் இதனை பெருப்பித்துக் காட்ட ஆரம்பித்துவிட்டன.

எனவே, கச்சதீவை மீளப்பெறும் நடவடிக்கை தொடர்பான பேச்சுகளை தமிழக அரசு சற்று பிற்போடவேண்டும். எரிகிற வீட்டில் பிடுங்கும் மட்டும் இலாபமென நடக்கிறார்களென்கின்ற அவப்பெயர் தமிழ்ச் சமூகத்துக்கு வேண்டாமே!

# பொருளாதாரம் ஸ்திரமடைய முன்னரே வயோதிபர்களாகும் இலங்கையர்கள்!

இலங்கையில் பதவியில் இருந்துவந்த அரசாங்கங்கள் பல தசாப்தங்களாக பொருளாதாரத்தை முகாமைசெய்வதில் கடைப்பிடித்த தவறான கொள்கைகளினால் தங்கள் வாழ்நாளில் சிக்கலான பொருளாதார சூழ்நிலைகளை சமாளிக்க நிர்ப்பந்திக்கப்படுகின்ற மக்கள் பொருளாதாரத்தில் ஒரு நன்னிலையை எட்டுவதற்கு முன்னதாகவே வயோதிபர்களாகி விடுகின்றார்கள்.



2019 இறுதியளவில் இலங்கை மக்கள்தொகையில் 17.9 சதவீதத்தினர் 59 வயதைக் கடந்தவர்களாக இருந்தனர் என்றும், தெற்காசியாவில் மிகவும் உயர்ந்த வயோதிபர் சதவீதத்தைக் கொண்ட நாடாக இலங்கை விளங்குகிறது என்றும் Charts.lk என்ற பொருளாதாரத் தரவுத் தளம் மூலம் அறியக்கூடியதாக இருக்கிறது.

இலங்கையின் மூன்று தசாப்தகால உள்நாட்டுப்போர் முடிவுக்குக் கொண்டு வரப்பட்ட 2009/10 காலகட்டத்தில் 59 வயதைக் கடந்தவர்களின் தொகை 12 சதவீதமாகவே இருந்தது. அதனுடன் ஒப்பிடும்போது இது கடுமையான அதிகரிப்பாகும். இலங்கையின் பொருளாதாரம் தாராளமயமாக்கப்பட்டு மக்களின் வாழ்க்கைத்தரம் மேம்படும் என்று நம்பப்பட்ட 1978/79 காலகட்டத்தில் இந்த சதவீதம் வெறுமனே 9 ஆக இருந்தது.

மேற்படி பொருளாதாரத் தரவுத் தளத்தின் தகவல்களின் பிரகாரம் 1963 ஆம் ஆண்டில் 59 வயதைக் கடந்தவர்கள் 7 சதவீதத்தினராக மாத்திரமே காணப்பட்டனர். இன்றைய நிலைமையுடன் ஒப்பிடும்போது அன்று இலங்கை மக்கள்தொகை மிகவும் இளமையானதாக இருந்தது.

குடிசனமதிப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம் அண்மையில் 2019 ஆம் ஆண்டுக்கான குடும்ப வருமானம் மற்றும் செலவின ஆய்வு அறிக்கையை வெளியிட்டது. இந்த அறிக்கை வயது அடிப்படையில் இலங்கையின் குடிப்பரம்பல் பற்றிய விபரங்களையும் உள்ளடக்கியிருக்கிறது.

அந்த அறிக்கையை ஆராய்ந்த பொருளாதாரத் தரவுத் தளம் ஊழல், செயல்திறனின்மை மற்றும் பொதுவளங்கள் சூறையாடல் ஆகியவற்றுக்கு மத்தியில் வெளிநாடுகளிடம் இருந்து பெற்ற கடன்களினூடாக வசதிக்கும் வழிவகைகளுக்கும் அப்பால் பல தசாப்தங்களாக வாழ்ந்ததன் விளைவாக ஏற்பட்ட பொருளாதார வீழ்ச்சியில் இருந்து மீள்வதற்குத் தடுமாறிக்கொண்டிருக்கும் இலங்கை எதிர்நோக்கப்போகின்ற புதிய சவால்களையும் பட்டியலிட்டிருக்கிறது.

வேலைபார்க்கக்கூடிய (Working age) வயதையுடைய மக்கள்தொகை வீதம் சுருங்கிக்கொண்டு போகின்ற அதேவேளை, அதில் தங்கியிருப்பவர்களின் வீதம் விரைவாக அதிகரிக்கிறது. இது நிலைவரத்தை மேலும் மோசமடையச் செய்கிறது.

உதாரணமாக, வேலைபார்க்கக்கூடிய வயது என்று நோக்கும்போது அது 15-59 க்கு இடைப்பட்டதாகும். அந்த வயதெல்லையில் இருப்பவர்களின் சதவீதம் 2009/10 இல் 62 ஆக இருந்தது. 2019 இல் அது 59 சதவீதமாக வீழ்ச்சி கண்டிருக்கிறது.

கொரோனா வைரஸ் பெருந்தொற்று கடுமையான பாதிப்பை ஏற்படுத்திய 2020 - 2021 காலகட்ட தகவல்கள் வெளிவரும்போது நிலைவரம் மேலும் அதிர்ச்சியூட்டுவதாக இருக்கும்.

அந்த இரு வருடங்களிலும் நடைமுறைப்படுத்தப்பட்ட பொதுமுடக்கம் மற்றும் கட்டுப்பாடுகள் காரணமாக வேலைபார்க்கும் வயதில் இருந்த பலர் தொழிற்சந்தையை விட்டு வெளியேறினார்கள். மேலும், பலர் சுயவிருப்பில் ஓய்வுபெற்றுக்கொண்டார்கள்.

அதேவேளை, அண்மைக்காலங்களில் நாட்டைவிட்டு வெளியேறுவோரின் எண்ணிக்கையும் கடுமையாக அதிகரித்திருக்கிறது. இந்தக் குடியகல்வு தேர்ச்சிபெற்ற ஊழியர்களுக்கு நிலவும் பற்றாக்குறையினால் ஏற்கெனவே பாதிக்கப்பட்டிருக்கும் இலங்கையின் பொருளாதாரத்துக்கு மேலும் மோசமான பாதிப்பைக் கொண்டுவரும்.

சுமார் 15 இலட்சம் பேர் முச்சக்கரவண்டி செலுத்துகின்ற அதேவேளை, இன்னொரு 15 இலட்சம் பேர் அரசாங்க சேவையாளர்களாக இருக்கிறார்கள். இவர்கள் இரு தரப்பினரும் சேர்ந்து இலங்கையின் தொழிலாளர் பட்டாளத்தில் சுமார் 40 சதவீதத்தினராக அமைகிறார்கள்.

அதனால், பொருளாதாரச் செயற்பாடுகளை ஊக்குவிக்கக்கூடிய இளமையும், வலிமையும் கொண்ட மக்கள்தொகை போதுமானதாக இல்லாமல் போகக்கூடிய நிலையில், கொள்கை வகுப்பாளர்களும், மக்களும் தங்களது எண்ணப்போக்குகளையும், நடத்தை முறைகளையும் மாற்றிக்கொள்ளாத பட்சத்தில் எந்தவிதமான பொருளாதார மேம்பாட்டையும் அடைவது சாத்தியமில்லாமல் போகலாம்.

பொருளாதார நிபுணர்களும், குடிப்பரம்பலியல் நிபுணர்களும் 2012 ஆம் ஆண்டளவில் விடுத்த முன்னெச்சரிக்கைகளை அடுத்தடுத்து பதவிக்குவந்த அரசாங்கங்கள் காதில் வாங்கிக் கொள்ளவில்லை. ஓய்வுபெறும் வயதெல்லையை 55 இல் இருந்து 65 ஆக இரு தடவைகள் உயர்த்தியதைத் தவிர அரசாங்கங்கள் இது விடயத்தில் வேறு எதையும் செய்யவில்லை.

(நன்றி: இணையம்)

## நக்கல் நமசிவாயம்

துமிந்த சில்வான்ர பாஸ்போர்ட்ட பறிக்கச் சொல்லியிருக்குதாம் நீதிமன்றம்... உப்படியெல்லாம் பிரச்சின வருமென்று தெரிஞ்சுதான் விமலின்ர மனுசிக்காரி சசி, ரெண்டு பாஸ்போர்ட் வச்சிருந்திருக்கிறா போலக் கிடக்குது..!



# கொழுப்பை உறிஞ்சும் அன்னாசி இலை!



அப்படியே குப்பைக்குப் போகக் கூடியவை அன்னாசி இலைகள். ஆனால், அவை உடலில் அதிகம் கொழுப்பு சேராமல் தடுக்கும் என சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழக விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளனர்.

அன்னாசி இலைகளை உலர்த்தி, பொடியாக்கி மாத்திரையாக்கினர் விஞ்ஞானிகள். பின்னர், மனித ஜீரண அமைப்பின் மாதிரியை உருவாக்கி, அதில் மாத்திரைகளை செலுத்தினர். அந்த மாதிரியில் செரிமான அமிலம் உள்ளிட்டவை இருந்தன. இதன் ஊடாக, மாத்திரைகள் நகரும்போது ஒரு அதிசயம் நடந்தது.

சமைத்த கொழுப்பு உணவுகளில் இருக்கும் கொழுப்பை அந்த மாத்திரைகள் உறிஞ்சிக் கொண்டன. எவ்வளவு தெரியுமா? ஒரு கிராம் அன்னாசி இலைப்பொடி, 45.1 கிராம் அளவு கொழுப்பை உறிஞ்சின. பிறகு அந்த மாத்திரைகள், கொழுப்பு கலந்த உருண்டையாக மாறி, ஜீரண உறுப்பைக் கடந்து வெளியேறின. இன்னும் இக்கண்டுபிடிப்பு மனிதர்கள் மீது பரிசோதிக்கப்படவில்லை. ஆனால், இந்த மாத்திரைகள் சந்தைக்கு வந்தால், உடல் பருமனைக் குறைக்க உதவும்.



## இன்றைய நாளில்...

* 1896 – மார்க்கோனி தான் புதிதாகக் கண்டுபிடித்த கம்பியில்லாத் தந்திக்கான காப்புரிமத்தைப் பெற்றார்.
* 1953 – இரண்டாம் எலிசபெத் ஐக்கிய இராச்சியத்தின் மகாராணியாக முடிசூடினார். தொலைக்காட்சியில் நேரடியாக ஒளிபரப்பப்பட்ட முதலாவது பெரிய பன்னாட்டு சர்வதேச நிகழ்வு இதுவாகும்.
* 1964 – பலஸ்தீன விடுதலை இயக்கம் அமைக்கப்பட்டது.
* 1966 – நாசாவின் சேர்வெயர்-1 விண்கலம் சந்திரனில் இறங்கியது. சந்திரனில் மெதுவாக இறங்கிய முதலாவது அமெரிக்க விண்கலம் இதுவாகும்.
* 1999 – பூட்டானில் முதல் தடவையாக தொலைக்காட்சி அறிமுகப்படுத்தப்பட்டது.
* 2014 – தெலுங்கானா அதிகாரபூர்வமாக இந்தியாவின் 29ஆவது மாநிலமாக அறிவிக்கப்பட்டது.

# எலும்பும் சதையும்!



சத்தமில்லாமல் ஒரு கிராபிக்ஸ் புரட்சியைப் படைத்திருக்கிறது பேஸ்புக் சார்ந்த நிறுவனமான மெட்டா. மையோசூட் என்ற அந்த கிராபிக்ஸ் மென்பொருள், செயற்கை நுண்ணறிவால் இயங்கக்கூடியது. மனித உடலின் எலும்பு மண்டலம் மற்றும் தசை மண்டலங்களின் இயக்கத்தைத் துல்லியமாகக் காட்டும் திறன் படைத்தது மையோசூட்.

அறுவை சிகிச்சை, செயற்கை அங்கங்கள் மற்றும் மெய்நிகர் உலகமான மெட்டாவெர்ஸில் உலாவரும் அவதார் என்று பல வகைகளில் மையோசூட் உதவிகரமாக வலம் வரவிருக்கிறது.

மருத்துவர்கள், ஒருவருக்குக் கிழிந்த தசை நார்களை சரிசெய்யும் அறுவை சிகிச்சை செய்தபிறகு, அவர் எப்படி நடப்பார் என்பதை, மையோசூட் மூலம் ஒத்திகை பார்த்து தெரிந்துகொள்ள முடியும். மெட்டாவெர்ஸிற்குள், ஒருவர் தனது சார்பில் வலம்வர ஏவிவிடும் அவதாரை, மிகவும் துல்லியமாக தன்னைப் போலவே வடிவமைத்துக்கொள்ள மையோசூட் பயன்படும்.

# நாட்டின் பல்வேறு பகுதிகளில் பெய்த அடைமழையால் பொதுமக்கள் பாதிப்பு



தாழ்நிலங்கள் வெள்ளத்தில் மூழ்கின

பல இடங்களில் மண்சரிவு

சிரமங்களை எதிர்நோக்கிய பாடசாலை மாணவர்கள்

**(நமது நிருபர், அருண் யுகேஷ், சிவா ஸ்ரீதரராவ், ரவீந்திர லால், யூ.எம். திலக்கரத்ன, சோமரத்ன பொத்தெனிய, நெவிந்து தினயன, இசுறு அசங்க, சமன் தேவப்பிரிய, சுனில் பியதிலக்க)**

நாட்டின் பல்வேறு பகுதிகளில் நேற்றுமுன்தினமும் நேற்றும் பெய்த அடைமழை காரணமாக பல தாழ்நிலங்கள் வெள்ளத்தில் மூழ்கியதுடன் மலையகப் பகுதிகளில் மண்சரிவு ஏற்பட்டது. இதன் காரணமாக பொதுமக்களும் பாடசாலை மாணவர்களும் அன்றாட தேவைகளுக்காக பயணிப்போரும் பெரும் சிரமங்களை எதிர்நோக்கினர்.

வானிலை அவதான நிலையத்தின் அறிக்கையின் பிரகாரம் நேற்றுமுன்தினம் முற்பகல் காலை 8.30 மணிக்கு நிறைவடைந்த 24 மணித்தியாலங்களில் காலி மாவட்டத்திலேயே அதிக மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளது. அங்கு 192 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சி பதிவாகியிருந்தது. இரத்தினபுரியில் 160 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சி பதிவாகியிருந்தது.

மேலும் களுத்துறையில் 132 மில்லிமீற்றரும் கம்பஹாவில் 130 மில்லிமீற்றரும் அவிசாவளையில் 121 மில்லிமீற்றரும் மழைவீழ்ச்சி பதிவானது.

### கொழும்பு

கொழும்பில் பெய்த அடைமழை காரணமாக பொரளை சீ.டபிள்யூ.டபிள்யூ. கன்னங்கர பாடசாலையின் பல்வேறு கட்டடங்கள் நேற்றுமுன்தினம் நீரில் மூழ்கின. இந்நிலையில் அங்கு பரீட்சைகளை நடத்துவதில் சிரமம் ஏற்பட்டது. கொழும்பு மாநகர சபையினர், அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தினர், படையினர் இணைந்து பரீட்சையை நடத்துவதற்கான ஏற்பாடுகளை செய்தனர்.

இதேவேளை, கொழும்பின் பல்வேறு பகுதிகள் நீரில் மூழ்கியதுடன் போக்குவரத்து நெரிசலும் காணப்பட்டது.

### கோட்டா கோ கம

ஜனாதிபதியையும் அரசாங்கத்தையும் உடனடியாக பதவி விலகுமாறு வலியுறுத்தி காலி முகத்திடலில் போராட்டக்காரர்களால் கோட்டா கோ கமவில் அமைக்கப்பட்டிருந்த கூடாரங்கள் அனைத்தும் கடும் காற்றினால் சேதமாயின.

### இரத்தினபுரி

இரத்தினபுரி மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் வெள்ளம் ஏற்பட்டதால் மக்கள் அசௌகரியங்களுக்கு உள்ளாகினர். குறிப்பாக கலவானை, பொத்துப்பிட்டிய வீதி, தெல்கொட பாலம் நீரில் மூழ்கியது. அங்கு வருகைதந்த கடற்படையினர் நிர்க்கதிக்குள்ளான பொதுமக்களுக்கும் மாணவர்களுக்கும் உதவிகளை நல்கினர்.

கிரியெல்ல, இடங்கொடவில் பாரிய மண்சரிவு ஏற்பட்டிருந்ததுடன் போக்குவரத்தும் முற்றாக தடைபட்டிருந்தது.

### கம்பஹா

தெக்கட்டன, பியகம வீதி, மல்வானை நகரம், மல்வானையில் உள்ள பழைய கூட்டுறவுச் சங்கம் ஆகியன கடும் மழை காரணமாக வெள்ளத்தில் மூழ்கின. கம்பஹா நகரத்திலும் வெள்ளம் காரணமாக போக்குவரத்து நெரிசல் காணப்பட்டது.

### களுத்துறை

களுத்துறை மாவட்டத்தில் புளத்சிங்ஹல, பாலிந்தநுவர, வலல்லாவிட்ட, மதுராவளை ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளில் பெரும்பாலான இடங்களில் வெள்ளம் நிரம்பியிருந்தது. அங்கு இராணுவத்தினர் உதவி நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.

மோல்காவ, ஹெடிகல்ல, பாலிந்தநுவர ஆகிய பகுதி பாடசாலைகளில் அமைக்கப்பட்டிருந்த பரீட்சை மத்திய நிலையங்களில் மழை காரணமாக பாதிப்புகள் ஏற்பட்டன.

### நுவரெலியா

நுவரெலியா மாவட்டத்தில் கடந்த 30ஆம் திகதி காலை முதல் அடைமழை பெய்தது. பொகவந்தலாவை, கொட்டியாகலை ஓயா பெருக்கெடுத்ததன் காரணமாக தாழ்நிலங்கள் வெள்ளத்தில் மூழ்கின.

மேலும், பொகவந்தலாவை சென்மேரீஸ் பாடசாலை வளாகத்தில் வெள்ளநீர் நிரம்பியிருந்தது. நுவரெலியா மாவட்டத்தில் மண்சரிவு அபாயம் உள்ளதாகவும் அவதானமாக செயற்படுமாறும் அந்த மாவட்டத்தின் அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தில் உதவி பணிப்பாளர் ரஞ்சித் அலககோன் தெரிவித்துள்ளார்.

அத்துடன் காசல்றீ, மவுசாக்கலை ஆகிய நீர்த்தேக்கங்களின் நீர்மட்டமும் அதிகரித்திருந்தது.

### கேகாலை

கேகாலை மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் மண்சரிவு ஏற்பட்டிருந்தது. தெரணியகலையில் சீத்தாவாக்க ஆறு பெருக்கெடுத்ததன் காரணமாக வெள்ளம் ஏற்பட்டது. அவிசாவளையிலிருந்து தெரணியகலை செல்லும் வழி முற்றாக தடைபட்டிருந்தது.

### காலி

காலி நகரம் உள்ளிட்ட பல்வேறு பகுதிகள் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டன. உடுகம-அக்குரஸ்ஸ வீதியில் அமைந்துள்ள மல்லிகா வித்தியாலயத்துக்கு வருகை தந்த மாணவர்கள் 40 பேரை கடற்படையினர் படகில் அழைத்துச் சென்றனர்.

## 01.06.2022 நாணய மாற்று வீதம்

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

| நாணயம் | கொள்வனவு வீதம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் | 141 5838 | 153 651 |
| கனேடியன் டொலர் | 168 037 | 18 2734 |
| சீன யுவான் (ரென்மின்பி) | 41 6487 | 44 263 |
| யூரோ | 270 3113 | 281 14 4 |
| ஜப்பான் யென் | 1 63 6 | 1 738 |
| சிங்கப்பூர் டொலர் | 147 3642 | 156 4055 |
| ஸ்ரேலிங் பவுன் | 334 5 37 | 350 0085 |
| சுவிஸ் பிராங்க் | 256 801 | 270 7347 |
| ஐ.அ.டொலர் | 244 0142 | 254 837 |

| நாடு | நாணயம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| பஹ்ரைன் | பஹ்ரைன் தினார் | 845 0535 |
| குவைட் | குவைட் தினார் | 0,064 6861 |
| ஓமான் | ஓமான் றியால் | 824 2310 |
| கட்டார் | கட்டார் றியால் | 87 4888 |
| சவூதி அரேபியா | சவூதி அரேபிய றியால் | 85 058 |
| ஐக்கிய அரபு இராச்சியம் | ஐக்கிய அரபு இராச்சிய திர்ஹம் | 87 304 |

## சீரற்ற காலநிலையால் பரீட்சை நிலையம் இடம்மாற்றம்

**(ஏ.ஏ.எம்.பாயிஸ்)**

இரத்தினபுரி நகரின் பல தாழ்நிலங்கள் நீரில் மூழ்கியதால் இரத்தினபுரி கங்கபட சீவலி மகா வித்தியாலயத்தில் இயங்கி வந்த க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை நிலையம் மற்றும் அங்கு இயங்கி வந்த பரீட்சை இணைப்பு நிலையம் ஆகியன இடம்மாற்றப்பட்டன.

இந்நிலைமையால் இந்தப் பரீட்சை நிலையம் மற்றும் பரீட்சை இணைப்பு நிலையம் ஆகியன சுமன பாலிகா மகா வித்தியாலயத்திற்கு மாற்றப்பட்டன.

இந்நிலைமையால் தமது பிள்ளைகள் பல்வேறு சிரமங்களுக்கும் உள ரீதியான தாக்கத்துக்கும் உட்பட்டு பரீட்சை எழுதும் நிலைமை ஏற்பட்டதாக பெற்றோர் கவலை தெரிவித்தனர்.

## ஐந்து வயது சிறுமியின் கையை முறித்த தந்தை

### கொடிகாமத்தில் சம்பவம்

**(சாவகச்சேரி நிருபர்)**

கொடிகாமம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கெற்பேலி மேற்கு மிருசுவில் பகுதியைச் சேர்ந்த 5வயது சிறுமி ஒருவர் நேற்றுமுன்தினம் இரவு தனது தந்தையின் தாக்குதலுக்கு இலக்காகி கை முறிந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இது குறித்த மேலும் தெரியவருவதாவது, சிறுமியின் தாய் வீட்டில் இல்லாத சமயம் மதுபோதையில் வந்த தந்தை தனது 5வயதுச் சிறுமி மீது காட்டுமிராண்டித்தனமாக தாக்குதல் நடத்தியுள்ளார். இதன்போது சிறுமி கை உடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்.

குறித்த தாக்குதல் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கொடிகாமம் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

## மின்சார சபை அடுத்த வாரம் கோப் குழு முன்னிலையில்

இலங்கை மின்சார சபை எதிர்வரும் 09ஆம் திகதி அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய (கோப்) குழுவுக்கு அழைக்கப்பட்டுள்ளது.

இலங்கை மின்சார சபையின் 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளுக்கான கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை மற்றும் தற்போதைய செயலாற்றுகை தொடர்பில் இதன்போது ஆராயப்படவுள்ளது.

இதற்கு மேலதிகமாக எதிர்வரும் 07ஆம் திகதி நகர அபிவிருத்தி அதிகார சபை, 08ஆம் திகதி மொறட்டுவைப் பல்கலைக்கழகம் என்பனவும் கோப் குழு முன்னிலையில் அழைக்கப்பட்டுள்ளன. கோப் குழு அதன் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் (பேராசிரியர்) சரித ஹேரத் தலைமையில் கூடவுள்ளது.

அதேபோன்று, அரசாங்கக் கணக்குகள் பற்றிய (கோபா) குழுவின் சில கூட்டங்களும் அடுத்த வாரம் இடம்பெறவுள்ளன. எதிர்வரும் 07ஆம் திகதி கமத்தொழில் அமைச்சு, 08ஆம் திகதி இறக்குமதி ஏற்றுமதிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம், 09ஆம் திகதி கடற்றொழில் அமைச்சு என்பன கோப் குழுவுக்கு அழைக்கப்பட்டுள்ளன.

அதற்கு மேலதிகமாக எதிர்வரும் 10ஆம் திகதி நாட்டில் நிலவும் உணவுத் தட்டுப்பாடு தொடர்பான விசேட கலந்துரையாடல் வர்த்தக, வாணிப மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சு, கமத்தொழில் அமைச்சு, உணவு ஆணையாளர் திணைக்களம், கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களம், சதொச நிறுவனம், பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபை, தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவகம், இலங்கை அரச (பொது) வர்த்தகக் கூட்டுத்தாபனம் என்பவற்றின் அதிகாரிகளின் பங்குபற்றலில் நடைபெறவுள்ளது. கோப் குழு அதன் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண தலைமையில் கூடவுள்ளது.



இலங்கை இராணுவத்தின் 24ஆவது தளபதியாக லெப்டினன் ஜெனரல் எச்.எல்.வி.எம். விக்கும் லியனகே இராணுவத் தலைமையகத்தில் தனது கடமைகளை நேற்று (01) பொறுப்பேற்றுக்கொண்டார். அவர் இராணுவத்தினரால் வரவேற்கப்படுவதையும் பதவியை பொறுப்பேற்பதையும் இராணுவ உயர் அதிகாரிகளையும் நிகழ்வில் கலந்துகொண்டோரையும் படங்களில் காணலாம்.

## ரயிலுடன் கார் மோதி விபத்து

காலி, பூஸ்ஸ-வெல்லபட புகையிரத கடவையில் நேற்று (01) காலை காலியில் இருந்து கொழும்பு நோக்கி பயணித்த சாகரிகா கடுகதி புகையிரதத்தில் கார் ஒன்று மோதி விபத்துக்குள்ளானது.

காரில் கராப்பிட்டிய வைத்தியசாலையின் தாதி ஒருவரும் மற்றுமொரு பெண்ணும் பயணித்துள்ளதுடன் அவர்கள் காயமின்றி உயிர்த் தப்பியுள்ளனர்.

கார் சேதமடைந்துள்ளதுடன், புகையிரத கடவையில் உள்ள மணி மற்றும் சமிக்ஞை விளக்குகள் பல மாதங்களாக இயங்கவில்லை எனவும் அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர். இதனால் இந்த ரயில் கடவையில் விபத்துகள் ஏற்பட வாய்ப்புகள் அதிகம் என அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.




# யாழ். பொது நூலகம் எரிக்கப்பட்டமையின் 41ஆவது ஆண்டு நினைவேந்தல் அனுஷ்டிப்பு





(யாழ். நிருபர்)

யாழ்ப்பாணம் பொது நூலகம் தீயூட்டி எரிக்கப்பட்டமையின் 41ஆவது ஆண்டு நினைவேந்தல் நேற்று அனுஷ்டிக்கப்பட்டது.

யாழ். மாநகர சபையின் ஏற்பாட்டில் நேற்றுக் காலை 9.30 மணியளவில் யாழ்ப்பாணம் பொது சன நூலகத்தில் இந்த நினைவேந்தல் இடம்பெற்றது.

நினைவேந்தலின்போது யாழ்ப்பாண பொது நூலகத்தை உருவாக்குவதற்கு காரணகர்த்தாவாக விளங்கிய செல்லப்பாவுக்கும், யாழ்ப்பாண பொது நூலகம் எரியூட்டப்பட்டதை அறிந்து உயிரிழந்த தாவீது அடிகளாருக்கும் அஞ்சலி செலுத்தப்பட்டது.

இந்த நினைவேந்தலின்போது யாழ். மாநகர முதல்வர் வி.மணிவண்ணன், பிரதி முதல்வர் து.ஈசன், ஆணையாளர் ஜெயசீலன், யாழ்ப்பாணப் பொது நூலக பிரதம நூலகர், யாழ். மாநகர சபை உறுப்பினர்கள், வாசகர்கள், பொதுமக்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

யாழ்ப்பாண பொதுநூலகம் 1981ஆம் ஆண்டு ஜூன் மாதம் 1ஆம் திகதி வன்முறைக் குழுவொன்றினால் தீயூட்டப்பட்டது. நூலகம் எரிக்கப்பட்ட காலத்தில், அங்கு சுமார் 97,000 அரிய நூல்கள் இருந்ததுடன், தென் கிழக்காசியாவிலேயே மிகப்பெரிய நூலகமாகவும் திகழ்ந்தது.

# சிறுமி ஆயிஷாவுக்கு நீதி கோரி போராட்டம்



(யாழ். நிருபர்)

அட்டுலுகம சிறுமி ஆயிஷாவின் மரணத்திற்கு நீதி கோரி யாழில் நேற்று முன்தினம் கவனயீர்ப்பு போராட்டமொன்று இடம்பெற்றது.




வடக்கு, கிழக்கு பெண்கள் ஒன்றியம் மற்றும் பொது அமைப்புகளின் ஏற்பாட்டில் யாழ். மாவட்ட செயலகத்துக்கு முன்பாக நேற்று முன்தினம் காலை 10 மணியளவில் ஒன்றுகூடிய போராட்டக்காரர்கள் ஆயிஷாவின் மரணத்துக்கு நீதி கோரி கோஷங்களை எழுப்பினர்.

வடக்கு, கிழக்கு தழுவிய ரீதியில் ஆயிஷாவிற்கு நீதி கோரி இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# வடமாகாணத்திற்கு 138 வைத்திய அதிகாரிகள் நியமனம்

(யாழ். நிருபர்)

வடமாகாணத்திற்கு 138 வைத்திய அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ள நிலையில், 132 வைத்திய அதிகாரிகள் இதுவரை தமது கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளார்கள் - என வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

வைத்திய அதிகாரிகள் நியமனம் தொடர்பாக வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் அந்த அறிக்கையில், மத்திய சுகாதார அமைச்சினால் உள்ளகப் பயிற்சியை நிறைவுசெய்த வைத்திய அதிகாரிகளுக்கு மே மாதம் 30ஆம் திகதிமுதல் நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

வடமாகாணத்திற்கு 138 வைத்திய அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளார்கள். இவர்களில் 132 வைத்திய அதிகாரிகள் இதுவரை தமது கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளார்கள்.

இதில் யாழ். மாவட்டத்திற்கு 23 வைத்திய அதிகாரிகளும், கிளிநொச்சி மாவட்டத்திற்கு 22 வைத்திய அதிகாரிகளும், வவுனியா மாவட்டத்திற்கு 22 வைத்திய அதிகாரிகளும், மன்னார் மாவட்டத்திற்கு 35 வைத்திய அதிகாரிகளும், முல்லைத்தீவு மாவட்டத்திற்கு 31 வைத்திய அதிகாரிகளும் கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளார்கள் - என்றுள்ளது.

# ‘யாழ்ப்பாணக் கல்லூரியை பாதுகாப்போம்’; 4ஆம் திகதி கவனயீர்ப்புப் போராட்டம்

(யாழ். நிருபர்)

‘யாழ்ப்பாணக் கல்லூரியை பாதுகாப்போம்’ என்ற தொனிப்பொருளில் கல்லூரி பழைய மாணவர்களின் அமைப்பால் 4ஆம் திகதி சனிக்கிழமை காலை கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணக் கல்லூரியின் ஆளுநர் சபையில் இடம்பெறும் மோசமான யாப்பு மீறல்களைக் கண்டிக்கும் வகையிலும், கல்லூரியின் நிர்வாகத்தில் ஆளுநர் சபையின் தலைவர் மேற்கொண்டு வரும் முறையற்ற தலையீடுகளை எதிர்க்கும் வகையிலும், யாழ்ப்பாணக் கல்லூரி நிதிகளின் தர்மகர்த்தா சபைக்கு எதிராக ஆளுநர் சபையினால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு விலக்கிக்கொள்ளப்பட வேண்டும் போன்ற கோரிக்கைகளை முன்வைத்து இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

4ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்கு முன்பாக, தெல்லிப்பழை வீதியின் இருமருங்கிலும் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்படும் என்று ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர்.

இந்தப் போராட்டத்தில் யாழ்ப்பாணக் கல்லூரியின் நிர்வாகிகள், ஆசிரியர்கள், பழைய மாணவர்கள், சமய – சமூகத் தலைவர்கள், அரசியல் தலைவர்கள், கல்வியாளர்கள், சட்டத்தரணிகள், சமூகச் செயற்பாட்டாளர்கள், பெண்ணியச் செயற்பாட்டாளர்கள் மற்றும் கல்லூரிக்கு அருகில் இருக்கும் கிராமங்களைச் சேர்ந்த மக்கள், நாடு முழுவதிலும் இருக்கும் யாழ்ப்பாணக் கல்லூரியின் நலன்விரும்பிகள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் அழைப்பு விடுத்துள்ளனர்.

“யாழ்ப்பாணத்தின் மிகவும் பிரசித்திபெற்ற கல்லூரிகளில் ஒன்றாகவும், வரலாற்று ரீதியாக வடக்குப் பிரதேசத்தின் கல்வி வளர்ச்சிக்கும், சமூக முன்னேற்றத்துக்கும், ஜனநாயக சமூக உருவாக்கத்துக்கும், சமூக நீதிக்குமாக அளப்பரிய பணிகளை ஆற்றிய யாழ்ப்பாணக் கல்லூரி, அதனது தற்போதைய ஆளுநர் சபையின் தலைவர் அதிவணக்கத்துக்குரிய கலாநிதி டானியல் தியாகராஜாவின் எதேச்சாதிகார நடவடிக்கைகளினால் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது.

இந்நிலைமையிலிருந்து கல்லூரியை மீட்டெடுத்து ஜனநாயகத்திற்கும், நல்லாட்சிக்கும் முக்கியத்துவம் கொடுக்கும் ஒரு கல்வி நிறுவனமாக யாழ்ப்பாணக் கல்லூரியினை மாற்றும் நோக்குடன் இந்தப் போராட்டம் இடம்பெறும்” என்று யாழ்ப்பாணக் கல்லூரியினை பாதுகாப்போம் அமைப்பினர் அழைப்பு விடுத்துள்ளனர்.

# மன்னார் குடும்பஸ்தர்களின் மரணத்திற்கு மதுபானம் – போதைப்பொருளே காரணம்

(மன்னார் நகர் நிருபர்)

மன்னாரில் கடந்த திங்கட்கிழமை (30) இரவு காரினுள் மர்மமான முறையில் உயிரிழந்த இரண்டு இளம் குடும்பஸ்தர்களும் மதுபானம் மற்றும் போதைப்பொருள் பயன்படுத்திய நிலையில் ஏற்பட்ட ஒவ்வாமை காரணமாகவே உயிரிழந்துள்ளதாக மன்னார் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

உயிரிழந்தவர்கள் பேசாலையைச் சேர்ந்த எம்.பிரதீப் (வயது 26) மற்றும் காட்டாஸ்பத்திரியை சேர்ந்த எம்.மசூர் (வயது 35) என பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த 30ஆம் திகதி இரவு மன்னாரிலிருந்து கொழும்பு நோக்கி காரில் பயணித்த இரண்டு இளம் குடும்பஸ்தர்களின் பிரேதப் பரிசோதனை யாழ். வைத்தியசாலையில் இடம்பெற்றுள்ளது.

இதன்போதே மதுபானம் மற்றும் போதைப்பொருள் பயன்படுத்தியமையினால் ஏற்பட்ட ஒவ்வாமையே உயிரிழந்தமைக்கான காரணம் என தெரியவந்துள்ளதாக மன்னார் பொலிஸார் தெரிவித்தனர்.

சடலங்கள் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன், மன்னார் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# தொழில்நுட்ப விவசாய முறைமையை ஏற்படுத்த இளைஞர்கள் ஒன்றுபடவேண்டும்

## மத்திய மாகாண ஆளுநர் வேண்டுகோள்

(கண்டி நிருபர்)

மத்திய மாகாணத்தில் விவசாய மறுமலர்ச்சிக்காக தொழில்நுட்பத்துடன் இணைந்த ஒரு விவசாய முறைமையை ஏற்படுத்த, இளைஞர்கள் ஒன்றுபடவேண்டும் என மத்திய மாகாண ஆளுநர் லலித் யூ கமகே வேண்டுகோள் விடுத்துள்ளார்

மத்திய மாகாண ஆளுநரின் ‘கிருஷி நவோதய’ வேலைத்திட்டத்தின் கீழ் கண்டி ஆளுநர் காரியாலயத்தில் நேற்றுமுன்தினம்(31) இடம்பெற்ற கூட்டத்தில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தற்போதைய சவாலான பொருளாதாரச் சூழலில், எதிர்காலத்தில் விவசாய உற்பத்திகளை பொதுமக்களிடம் கொண்டு சேர்க்கும் நோக்கில் இவ்வேலைத்திட்டம் மேற்கொள்ளப்படுகிறது. அதில் ஒருகட்டமாக தும்பறை விவசாய சுற்றுலா கலாசார கிராமத் திட்டம் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

கடந்த காலங்களில் நகர மத்தியில் காணப்பட்ட சுவர்களுக்கு வர்ணம் பூசி அழகுபடுத்திய இளைஞர்களை கொண்டு திறமையான விவசாய நடவடிக்கைகளை ஊக்குவிக்கும் வகையில்



இத்திட்டம் செயல்படுத்தப்படவுள்ளது. மேலும் குறித்த வேலைத்திட்டத்திற்கு மாகாண அரச நிறுவனங்கள் கைகோர்த்துள்ளதுடன் தேவையான வழிகாட்டல்களை மாகாண அமைச்சுகள் வழங்கி வருவதாகவும் தெரிவித்தார்.

செழிப்பான நிலங்களின் மீள் எழுச்சிக்கு உள்ளூர் விவசாயத்தின் எழுச்சி இன்றியமையாதது எனவும், அதற்காக இளைஞர்களை அணிதிரட்டல், மனோபாவத்தை விருத்தி செய்தல் மற்றும் தொழில்நுட்பத்துடன் இணைந்த ஒரு விவசாய முறைமையை ஏற்படுத்த வேண்டும் எனவும் மத்திய மாகாண ஆளுநர் தெரிவித்தார்.

இக்கலந்துரையாடலில் குண்டசாலை பிரதேச சபையின் தலைவர் ரஞ்சன அக்மீமன, ஆளுநரின் செயலாளர் அன்டன் திலகரத்ன, பிரதம அமைச்சின் செயலாளர் அஜித் பிரேமசிங்க, மாகாண அமைச்சுகளின் செயலாளர்கள் மற்றும் அரச அதிகாரிகள், இளைஞர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

# இரத்தினபுரி மாவட்டத்துக்கு சிவப்பு எச்சரிக்கை

(ஏ.ஏ.எம்.பாயிஸ்)



இரத்தினபுரி மாவட்டத்தில் கடந்த சில தினங்களாக பரவலாக பெய்துவரும் கடும் மழை காரணமாக தாழ்நிலங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ள நிலையில் இம்மாவட்டத்தின் 5 பிரதேச செயலகப் பிரிவுகளில் மண்சரிவு அபாயம் காரணமாக சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக கட்டிட ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது.

அத்துடன் பெல்மதுளை, நிவித்திகல, கிரியெல்ல, அயகம ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகளில் இரண்டாம் கட்ட மண்சரிவு அபாய எச்சரிக்கை நிலவுவதாகவும் இந்நிறுவனத்தின் இரத்தினபுரி காரியாலய அதிகாரி தெரிவித்தார்.

மேலும், மழை ஓரளவு ஓய்ந்துள்ள போதிலும் தாழ்நிலங்களில் நீர் முற்றாக வற்றாததால் பொது மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது. கலவான குகுலேகங்க நீர்த்தேக்கத்தின் நீர்மட்டம் சடுதியாக உயர்வடைந்துள்ளதால் அதன் இரண்டு வான்கதவுகளும் திறக்கப்பட்டுள்ளதாக நீர்ப்பாசனத் திணைக்களம் அறிவித்துள்ளது.

இதேநேரம் இப்பிரதேசத்தில் கடந்த காலப் பகுதியில் டெங்கு பரவும் அபாயம் நிலவியமையால் மழையின் பின் நீர் வடிந்து செல்லும் தினங்களிலும் அதன் பின்னரும் டெங்கு தடுப்பு நடவடிக்கைகளில் அதிக கவனம் செலுத்துமாறு சுகாதாரத்துறையினரும் கிராம சேவகர்களும் மக்களை கேட்டுக் கொண்டுள்ளனர்.

எஹலியகொடை - கிரியெல்ல வீதியில் நேற்று ஹிங்குரங்கல பிரதேசத்தில் மண்திட்டுகள் சரிந்து வீதி போக்குவரத்து தடைப்பட்டிருந்தது.

# மருந்துகளின் விலை அதிகரிப்பால் ஓய்வூதியதாரர்கள் அசௌகரியம்

(மாத்தளை நிருபர்)

மாத்தளை நகரிலும் நகரை சூழவுள்ள உப நகரங்களிலும் இயங்கிக் கொண்டிருக்கும் மருந்தகங்களில் அத்தியாவசிய மருந்து வகைகளின் விலைகள் அதிகரிப்பு காரணமாகவும் தட்டுப்பாடு காரணமாகவும் தாங்கள் பெரும் அசௌகரியங்களுக்கு முகங்கொடுத்து வருவதாக மாத்தளை மாவட்ட ஓய்வூதியகாரர்கள் தெரிவிக்கின்றனர்.

மாத்தளை, இரத்தோட்டை, நாவுல, தம்புள்ளை, கலேவல ஆகிய முக்கிய நகரங்களிலும் ஏனைய பகுதிகளில் இயங்கும் மருந்தகங்களிலும் மருந்து வகைகளுக்கு மாபெரும் தட்டுப்பாடு நிலவுகின்றது. இதே மருந்து வகைகள் நாளுக்கு நாள் விலை அதிகரித்துச் செல்வதால் தங்களது ஓய்வூதிய பணம் மருந்து மாத்திரைகளுக்கு மாத்திரமே செலவாகி விடுவதால் தங்களது ஏனைய அன்றாட தேவைகளை பூர்த்தி செய்து கொள்ள முடியாத நிலையில் தாங்கள் பெரும் பாதிப்புக்குள்ளாகி வருகின்றனர்.

தங்களுக்கு இருக்கும் நோய்கள் சம்பந்தமாக மாவட்ட அரச வைத்தியசாலைகளை நாடிச் சென்றால் அங்கும் பாரிய மருந்து தட்டுப்பாடு நிலவுவதால் பலவருட காலமாக அரச சேவையில் ஈடுபட்டு ஓய்வு பெற்ற பின்னால் மருந்து தட்டுப்பாடு காரணமாகவும் விலை அதிகரிப்பு காரணமாகவும் கிடைக்கப் பெறும் ஓய்வூதிய பணம் பற்றாக்குறை காரணமாக தங்களது எதிர்காலம் கேள்விக்குறியாக சென்று கொண்டிருக்கின்றது.

தற்பொழுது நாட்டில் நிகழும் பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் அசுர வேகத்தில் அதிகரித்துச் செல்வதால் தங்களுக்கு கிடைக்கப்பெறும் அற்பசொற்ப ஓய்வூதிய பணத்தை வைத்துக் கொண்டு எமது வாழ்க்கைப் பயணத்தை கொண்டு செல்வது இயலாத காரியமாகவுள்ளது.

அரசு ஓய்வூதியர்களாகிய தங்களுக்கு தங்களது வாழ்க்கையை நடத்திச் செல்ல மாற்று வழியை அல்லது ஓர் சலுகை அடிப்படையை பெற்றுத்தருமாறு மாத்தளை மாவட்ட அரச ஓய்வூதியகாரர்கள் அரசிடம் கோரிக்கை விடுக்கின்றனர்.

# தமிழக நிவாரணப் பொருட்கள் இரத்தினபுரிக்கும் கிடைக்க வேண்டும்

(சிவா ஸ்ரீதரராவ்)

**மக்கள் கோரிக்கை**

தமிழகத்திலிருந்து இலங்கைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள நிவாரணப் பொருட்கள் மற்றும் உலருணவுப் பொருட்கள் இரத்தினபுரி மாவட்டத்தில் குறைந்த வருமானம் பெறும் மக்களுக்கும் வழங்கப்பட வேண்டும் என இரத்தினபுரி மாவட்டத்தில் குறைந்த வருமானம் பெறும் மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

இரத்தினபுரி மாவட்டத்தில் கிராமப் புறங்களில் குறைந்த வருமானம் பெறும் மக்கள் வாழ்ந்து வருகின்றார்கள். இம்மக்களுக்கும் தமிழ்நாட்டினால் வழங்கப்பட்ட நிவாரணப் பொருட்கள் வழங்கப்பட வேண்டும்.

மேற்படி பொருட்கள் பகிர்ந்தளிக்கும் விடயத்தில் பாகுபாடு இன்றி செயல்படுமாறு சம்பந்தப்பட்டவர்களிடம் மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

# இராகலை தோட்ட வைத்தியசாலைகள் பூட்டப்பட்டுள்ளதால் மக்கள் சிரமம்

நுவரெலியா மாவட்டம் வலப்பனை பிரதேச சபைக்குட்பட்ட இராகலை பிரதேச தோட்டப்பகுதிகளில் இயங்கி வந்த தோட்ட வைத்தியசாலைகளின் செயற்பாடுகள் குறைந்து வருவதுடன் சில தோட்டப்பகுதிகளில் வைத்திய சேவைகள் நிறுத்தப்பட்டும் வருகின்றன.

இது திட்டமிட்ட செயலா என்ற கேள்வி தற்போது எழுந்துள்ளதாக வலப்பனை பிரதேச சபையின் தேசிய தொழிலாளர் முன்னணி உறுப்பினர் பெருமாள் சண்முகம் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

கடந்த சில மாதங்களாக இராகலை பிரதேசத்தில் தோட்டங்களில் முறையாக முன்னெடுக்கப்பட்டு வந்த தோட்ட வைத்தியசாலைகளின் வைத்திய சேவை செயற்பாடுகள் குறைந்தும் பின் முற்றாக நிறுத்தப்பட்டும் வருகின்றது.

இதன் காரணமாக தோட்டத் தொழிலாளர்கள் தோட்ட வைத்தியசாலைகள் ஊடாக பெற்றுக்கொள்ளக்கூடிய வைத்திய சேவைகள் உள்ளிட்ட பிறப்பு, இறப்பு தொடர்பான ஆவணங்களை பெற்றுக்கொள்ள பாரிய சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

அதனடிப்படையில், இராகலை மத்திய பிரிவு தோட்டம், சென் லெனாட்ஸ் தோட்டம், லிடேஸ்டல் தோட்டம், டெல்மார் தோட்டம் மற்றும் ஹைபொரஸ்ட் தோட்ட மக்கள் தோட்ட வைத்தியசாலைகள் ஊடாக பெற்றுக்கொள்ளக்கூடிய சேவை பிரச்சினைகளுக்கு நாள்தோறும் பிரச்சினைகளை அனுபவிக்க நேரிட்டுள்ளது.

அத்துடன், இராகலை நடுக்கணக்கு தோட்டத்தில் புனரமைக்கப்பட்டுள்ள மகப்பேற்று வைத்தியசாலை கட்டடத்தில் கர்ப்பிணிகளுக்கான சிகிச்சைகள் நிறுத்தப்பட்டுள்ளன.

மேலும் வைத்தியர் ஒருவர் இல்லாத நிலையில் இராகலை மத்திய பிரிவு இலக்கம் (01) தோட்ட வைத்தியசாலை இழுத்து மூடப்பட்டுள்ளதால் இத் தோட்ட வைத்தியசாலை ஊடாக சேவையை பெற்று வந்த ஐந்து தோட்ட மக்கள் இன்று பாரிய பிரச்சினைக்கு முகம் கொடுத்துள்ளனர் என்றார்.

இந்த நிலையில் பெருந்தோட்ட மக்கள் அதிகமாக வசிக்கும் பிரதேசங்களில் இயங்கும் தோட்ட மற்றும் பிரதேச வைத்தியசாலைகளில் குறைபாடுகளை நிவர்த்திக்காது படிப்படியாக செயற்பாடுகளை முடக்கி மூடிவிடும் முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்றும் அவர் தெரிவித்தார்.

இது குறித்து கடந்த வெள்ளிக்கிழமை வலப்பனை பிரதேச சபை அமர்வில் சபையின் கவனத்துக்கு கொண்டு வந்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

# ஆபத்தைக் கருத்திற்கொள்ளாத கும்பலால் நாடு அதலபாதாளத்தில்

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் குற்றச்சாட்டு

நாளுக்கு நாள் நாடு அதலபாதாளத்தை நோக்கிச் சென்றுகொண்டிருப்பதாக சர்வதேச தர வரிசைப்படுத்தல் நிறுவகங்களிலிருந்து எச்சரிக்கை விடுக்கப்பட்டாலும் இந்த விடயத்தை கருத்திற்கொள்ளாத கும்பலாலேயே நாடு இன்று கடும் பேரழிவுக்குள்ளாகியுள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

தன்னிச்சையான தனிநபர் சர்வாதிகாரம் மற்றும் அதற்கு சார்பான கும்பலால் எடுக்கப் பட்ட தீர்மானங்கள் மற்றும் முடிவுகளாலேயே நாட்டுக்கு இந்நிலை ஏற்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் (31) இடம்பெற்ற அரச நிர்வாக சேவையை பிரதிநிதித்துவப்படுத்தும் அதி காரிகள் குழுவுடனான சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தனிநபர்களை இலக்காக்கொண்டு அரசிய லமைப்புத் திருத்தங்கள் மேற்கொள்ளக்கூடாது என தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், அதிகாரங் களை கட்டுப்படுத்தும் தடைகள் மற்றும் சமன்பாடுகள் முறைமைக்கேற்ப வேலைத்



திட்டத்தை உருவாக்குவதே ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் ஐக்கிய மக்கள் கூட்டணியின் நோக்கம் எனவும் அவர் தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தி, 21ஆவது திருத்தத்திற்கு எதிரானதென சில வங்குரோத்து குழுக்கள் பிரசாரத்தை மேற்கொண்டு வருவதாக தெரிவித்த எதிர்க்கட்சித் தலை வர், 21ஆவது திருத்ததை நாட்டுக்கு அறிமுகப் படுத்திய ஐக்கிய மக்கள் சக்தி அதை என்ன காரணத்திற்காக எதிர்க்க வேண்டும் எனவும் அவர் கேள்வி எழுப்பினார்.

பத்தொன்பதாவது திருத்தத்தை மீண்டும் கொண்டுவருவதற்கும், அதற்கு பொருத்தமான முற்போக் கான முன்மொழிவுகளை முன்வைக் கவும், ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் ஐக்கிய மக்கள் கூட்டணி செயற்பட்டதாக தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், அதனூடாக 21ஆவது திருத்தத்தை அமுல்படுத்துவதே தமது நோக்கம் எனவும் அவர் தெரிவித்தார்.

# வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் பீரிஸ் ஜப்பானிய பிரதித் தூதுவருடன் சந்திப்பு

இலங்கை எதிர்கொள்ளும் தற்போதைய பொருளாதார சவால்களை வெற்றிகொள்வதில் இருதரப்பு ஈடுபாடுகள், உள்நாட்டு அபிவிருத்திகள் மற்றும் சர்வதேச சமூகத்தின் உதவிகள் தொடர்பான விடயங்கள் குறித்து கலந்துரையாடுவதற்காக ஜப்பான் பிரதித் தூதுவர் கட்சுகி கோட்டாரோ வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸை கடந்தவாரம் சந்தித்தார்.

குறிப்பாக கொவிட்-19 உலகளாவிய தொற்றுநோயின் உச்சக்கட்டத்தின்போது சவால்களைத் தணிக்க இருதரப்பு மற்றும் பலதரப்பு வழிகளின் மூலம் ஜப்பானிடம் தொடர்ந்து ஆதரவைக் கோரினார். சர்வதேச நாணய நிதியத்துடன் கடன் மறுசீரமைப்புத் திட்டத்தை உருவாக்குவதற்கு இலங்கை அரசாங்கம் தீர்மானித்ததைத் தொடர்ந்து, இலங்கை அரசாங்கம் பரிஸ் கிளப் கடன் வழங்குநர்கள், ஜி 7 நாடுகள் மற்றும் ஏனைய கடன் வழங்குநர்களிடமிருந்து உதவியைப் பெறுவதாக அமைச்சர் பீரிஸ் விளக்கினார்.

இலங்கையுடன் சர்வதேச சமூகம் தொடர்ந்து



ஜப்பான் அரசாங்கம் வழங்கிய தாராளமான உதவி மற்றும் ஆதரவைப் பாராட்டிய வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் பீரிஸ், இலங்கையின் பொருளாதார ஈடுபடுவதே பொருளாதார நெருக்கடியை சமாளிப்பதற்கான திறவுகோல் எனக் குறிப்பிட்ட இரு தரப்பினரும் மேலும் ஒத்துழைப்பை எவ்வாறு பலப்படுத்துவது என்பது குறித்து கலந்துரையாடப்பட்டது. இந்நிலையில், இலங்கையின் பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்துவதற்கு நிலையான தீர்வுகளைக் காண்பதில் ஜப்பானிய அரசாங்கத்தின் ஆதரவை ஜப்பான் தூதுவர் மீண்டும் வலியுறுத்தினார்.

இந்தச் சந்திப்பின்போது வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் சிரேஷ்ட அதிகாரிகள் மற்றும் ஜப்பான் தூதரகத்தின் அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

## துளிச் செய்திகள்

★ நாட்டில் தினமும் பொருட்களின் விலைகள் சடுதியாக அதிகரிப்பதன் காரண மாக ஒருசில அத்தியாவசியப் பொருட் களுக்கேனும் கட்டுப்பாட்டு விலையை அறி முகப்படுத்துமாறு பொதுமக்கள் உரிமை களைப் பாதுகாக்கும் தேசிய இயக்கம் அரசாங் கத்திடம் வேண்டுகோள் முன்வைத்துள்ளது.

★ எலபாத்த பொலிஸ் பிரிவுக்குட்பட்ட உடனிரியெல்ல பகுதியில் வீட்டில் தனி மையில் இருந்த பெண்ணொருவரை கூரிய ஆயுதத்தால் தாக்கிக் கொலைசெய்த 26 வயதான சந்தேக நபர் ஒருவரை நேற்று முன்தினம் (31) பொலிஸார் கைதுசெய் துள்ளனர்.

★ ஐஸ் போதைப்பொருளை தம்வசம் வைத்திருந்த 36 வயதுடைய இந்தியப் பிரஜையொருவரை கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து பொலிஸார் நேற்று முன்தினம் (31) கைதுசெய்துள்ளனர்.

★ நாட்டின் பல்வேறு பகுதிகளில் பொலிஸார் நேற்றுமுன்தினம் மேற் கொண்ட விசேட சுற்றிவளைப்புநடவடிக்கை களின்போது ஹெரோயின் போதைப் பொருளுடன் அறுவர் கைதுசெய்யப்பட் டுள்ளனர்.

★ களுத்துறை ஹீனடியங்கலவில் தந்தையும் மகளும் வீட்டில் சடலமாக மீட்கப்பட்ட சம்பவம் தொடர்பில் பல்வேறு கோணங்களில் விசாரணைகள் முன்னெடுக் கப்பட்டுள்ளன.

★ காலிமுகத்திடலில் கோட்டா கோ கம, மைனா கோ கம ஆகியவற்றின் மீது கடந்த 09ஆம் திகதி தாக்குதல் மேற்கொண்டதாக கைதுசெய்யப்பட்ட பொரலஸ்கமுவ நகர சபையின் தலைவருக்கு கோட்டை நீதவான் நீதிமன்றத்தினால் விளக்கமறியல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

★ அநுராதபுர பாடசாலையொன்றில் கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையில் தோற்றிய மாணவி மீது பாலியல் குற்றம் புரிய முயன்ற மேலாளர் தொடர்பில் வடமத்திய மாகாண கல்விப் பணிப்பாளரிடம் கல்வி அமைச்சு அறிக்கை யொன்றை கோரியுள்ளது.

★ மொனராகலை பொலிஸ் பிரிவுக் குட்பட்ட பொத்துவில்பார புபுது மாவத்தை யிலுள்ள வீடொன்றை உடைத்து பணம், தங்க நகைகளைக் கொள்ளையிட்ட சந்தேக நபர் ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர். வீட்டிலிருந்த 14 ஆயிரம் ரூபா பணமும் பெறுமதியான தங்க நகைகளும் சந்தேக நபரால் களவாடப் பட்டுள்ளன.

★ தனமல்வில, கிவுல்ஆர பகுதியில் உயிரிழந்த நிலையில் யானையின் சடலம் ஒன்று மீட்கப்பட்டுள்ளது. இது தொடர் பிலான மரண விசாரணைகளை உடவலவ மிருக வைத்தியர்கள் மேற்கொண் டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

★ லுணுகலை காட்டுப்பகுதியில் நேற்றுமுன்தினம் (31) ஏற்பட்ட காட்டுத் தீயில் சுமார் 20 ஏக்கர் வனப்பரப்பு முற்றாக அழிவடைந்துள்ளதாக பொலி ஸார் தெரிவித்தனர். காட்டுக்கு தீ வைக்கப்பட்டதா என்பது தொடர்பில் பொலிஸாரால் விசாரணைகள் முன்னெடுக் கப்பட்டு வருகின்றன.

# எரிபொருள் நெருக்கடி நிலைமையை தவிர்க்க துறைமுக அதிகாரசபைக்கு சைக்கிள்கள்

## உள்ளக ஊழியர்களின் பயன்பாட்டுக்கு அறிமுகம்

(நமது விசேட செய்தியாளர்)

எரிபொருள் நெருக்கடியை தவிர்ப்பதற்கு இலங்கை துறைமுக அதிகாரசபை அதன் ஊழியர்களுக்கு நூறு சைக்கிள்களை வழங்கத் தீர்மானித்துள்ளது. உள்ளக ஊழியர்களின் பயன்பாட்டுக்கு இந்த சைக்கிள்கள் பயன் படும் எனஅதிகாரசபை அறிவித்துள்ளது.



துறைமுக அதிகார சபையானது நெருக் கடி நிலையை தவிர்ப் பதற்கு நீண்ட கால திட்டமிடல்களை மேற்கொண்டுள்ளதாக அதன் தலைவர் பிரசன்ன ஜயமான்ன தெரிவித்தார்.

நாட்டில் டொலர் பற்றாக்குறை காரண மாக பல்வேறு தொழிற் றுறைகள் முடங்கி யுள்ள போதிலும் துறைமுக அதிகார சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக முன்னெடுக் கப்பட்டு வருகின்றன. துறைமுகங்கள், விமான நிலையங்கள் மற்றும் வைத்தியசாலைகளுக்கு தொடர்ச்சியாக மின்சாரத்தை வழங்க இலங்கை மின்சார சபை உறுதியளித்துள்ளது. ஒக்டோபர்வரை மின்சாரம் தடையின்றி கிடைக்கும் என அதிகாரசபையின் உத்தியோகத்தர் ஒருவர் தெரிவித்தார்.

இதேவேளை, துறைமுக ஊழியர்களுக்கும் தடையின்றி எரிபொருளை பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இந்நிலையில், துறைமுக ஊழியர்களின் நலன்கருதியும் செயற்பாடுகளை தடையின்றி முன்னெடுத்துச் செல்லவும் இலங்கை கப்பல் முகவரகங்களின் சங்கத்தினால் 100 சைக்கிள்கள் அதிகாரசபைக்கு வழங்கப்பட்டுள்ளன.

# மருந்து வகைகளுக்கு பாரிய தட்டுப்பாடு

## மருத்துவ அதிகாரிகள் மீண்டும் சுட்டிக்காட்டு

நாடு முழுவதும் அத்தியாவசிய மருந்து களுக்கு பாரிய தட்டுப்பாடு நிலவுவதாக அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் மீண்டும் சுட்டிக் காட்டியுள்ளது.

அதனடிப்படையில் 12 முதல் 20 வகையான அத்தியாவசிய மருந்துகள் எந்த வைத்தியசாலையிலும் இல்லையென அச்சங்கம் தெரிவித்துள்ளது. மேலும் அத்தியாவசியமற்ற 120 முதல் 150 வகையான மருந்துகளுக்கு தட்டுப்பாடு நிலவுகிறது.

இது தொடர்பில் அரசாங்கம் உரிய அவ தானத்தை செலுத்த வேண்டும் என அச்சங் கம் அரசாங்கத்திடம் உத்தியோகபூர்வமாக மீண்டும் கோரிக்கை விடுத்துள்ளது.




# மே 09 வன்முறைக்கு காரணமான 175 போலி பேஸ்புக் கணக்குகள்

(திஸ்ஸ ரவீந்திர பெரேரா)

நாடு முழுவதும் கடந்த மே மாதம் 09ஆம் திகதி வன்முறைச் சம்பவங்களைத் தூண்டிய, அவற்றுக்குக் காரணமான 175 போலியான பேஸ்புக் கணக்குகள் தொடர்பில் பொலிஸார் அவதானம் செலுத்தியுள்ளனர்.

இவை அனைத்தும் போலியானவையென பொலிஸ் விசாரணைகளிலிருந்து தெரிய வந்துள்ளது. மே 09ஆம் திகதி வன்முறைச் சம்பவங்கள் தொடர்பில் பொலிஸ் மா அதிபருக்கு 225 பேஸ்புக் கணக்குகள் குறித்து முறைப்பாடுகள் பதிவாகியிருந்தன.

அதனடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் அவற்றில் 175 கணக்கு கள் போலியானவை என தெரியவந்துள் ளது. அவற்றில் 50 கணக்குகளின் உரிமை யாளர்கள் தொடர்பில் தகவல் திரட்டியுள்ள பொலிஸார், அவர்களை அழைத்து விசாரணை மேற் கொள்ள நடவடிக்கை மேற் கொண்டு வருகின்றனர்.




# இரு விமான நிலையங்கள் மூடப்படும் அபாயத்தில்!



கடும் நிதி நெருக்கடி காரணமாக மத்தள சர்வதேச விமான நிலையம், இரத்மலானை சர்வதேச விமான நிலையம் ஆகியன மூடப்படும் அபாயத்தை எதிர்நோக்கியுள்ளன,

எரிபொருள் நெருக்கடி மற்றும் போதிய எண்ணிக்கையிலான விமானங்கள் வருகை தராமையால் இந்த நிலைமை உருவாகியுள்ளதாக உயர் அதிகாரியொருவர் தெரிவித்தார். குறிப்பாக, இவ்விரு விமான நிலையங்களிலும் ஊழியர்களுக்கான செலவீனங்கள் அதிகரித்துள்ளமையை அவர் சுட்டிக்காட்டினார்.

இதேவேளை, இரத்மலானை விமான நிலையம் சேவைகள் எதுவுமின்றி பாழடைந்து காணப்படுவதாக அங்கு கடமையாற்றுவோர் தெரிவித்துள்ளனர். இந்த விமான நிலையம் கடந்த மார்ச் மாதம் 27ஆம் திகதி உத்தியோகபூர்வமாக திறந்துவைக்கப்பட்டது. அதற்கென 80 இலட்சம் ரூபா செலவாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையிலேயே இவ்விரு விமான நிலையங்களும் நிதி நெருக்கடியை எதிர்நோக்கியுள்ளன. குறிப்பாக, வெளிநாடுகளிலிருந்து விமான சேவைகள் இடம்பெறாத காரணத்தினால் வருமானம் இழக்க வேண்டிய நிலைக்கு உள்ளாகியுள்ளன.

மேலும், கட்டுநாயக்கவிலிருந்து மத்தள விமான நிலையத்துக்கான போக்குவரத்து, பொருள் பரிமாற்றம் ஆகியவற்றுக்கு பெருந்தொகை நிதி செலவாகுவதாக அதிகாரிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

பல்வேறு உலக நாடுகள் இலங்கையின் நெருக்கடியை சுட்டிக்காட்டி பயண எச்சரிக்கை விடுத்திருந்தன. சுற்றுலாப் பயணிகள் வருகை தராமைக்கு இதுவும் ஒரு காரணமாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

திகதி 31.05.2022 செவ்வாய்க்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk NLB

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம்: 4772
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 8,009,410.00
ஆங்கில எழுத்து T வெற்றி இலக்கங்கள் 1 9 6 4 7 3
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 13,512,061.00

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3014
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 3,688,680.00
ஆங்கில எழுத்து F வெற்றி இலக்கங்கள் 02 23 28 40
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 66,107,770.56

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் : 802
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,015,940.00
B 07 14 19 22
வெற்றி இலக்கினம் வெற்றி இலக்கங்கள்
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 112,496,221.20

ராசீ சுப பலன் Handahana
சீட்டிழுப்பு இலக்கம் : 0081
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 4,460,800.00
இலக்கினம் கும்பம் வெற்றி இலக்கங்கள் 19 33 44 62
விசேட இலக்கினம் கும்பம்
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 2,646,243.00

கோடி 25+ Mega POWER மெகா பவர்
சீட்டிழுப்பு இலக்கம் 1120
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 3,038,600.00
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 253,937,010.00
C 22 05 08 28 66
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

தேசிய லொத்தர் சபை National Lotteries Board
தொலைபேசி: 011-4607000, 011 - 4607001 - 2 Email : info@nlb.lk
பெக்ஸ்: 011-4669475 Web : www.nlb.lk
இலக்கம் 32, தேஷமான்ய N.U. முதலிகே மாவத, கொழும்பு 01

# சமையல் எரிவாயு கோரி திருமலையில் வீதியை மறித்து மக்கள் ஆர்ப்பாட்டம்







(ரவ்பீக் பாயிஸ்)

லிட்ரோ நிறுவனத்தினால் நேற்று (01) முதல் சமையல் எரிவாயு விநியோகம் ஆரம்பிக்கப் பட்டதாக அறிவித்ததையடுத்து, நாட்டில் பெரும்பாலான பிரதேசங்களில் சமையல் எரிவாயு கொள்வனவிற்காக வாடிக்கையாளர்கள் நீண்ட வரிசையில் காத்திருந்து ஏமாற்றத்துடன் திரும்பிச் செல்வதை எம்மால் அவதானிக்கக்கூடியதாக இருந்தது.

அந்தவகையில், திருகோணமலை துவரங்காடு பிரதேசத்தில் அமைந்துள்ள லிட்ரோ நிறுவனத்தின் களஞ்சியசாலைக்கு முன்பாக வீதியை மறித்து சமையல் எரிவாயு கோரி நேற்று (01) பொதுமக்கள் ஆர்ப்பாட்டமொன்றை முன்னெடுத்திருந்தனர்.

குறித்த பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் இரவுமுதல் நீண்ட வரிசையில் வெற்று சிலிண்டர்களுடன் எரிவாயு கொள்வனவுக்காக காத்திருந்ததாகவும் நேற்றுக் காலை சமையல் எரிவாயு திருகோணமலை விநியோகஸ்தரின் களஞ்சியசாலைக்கு வருகை தந்ததன் பின்னர் வரிசையில் காத்திருந்த வாடிக்கையாளர்களில் முதல் 400 பேருக்கு மாத்திரமே சமையல் எரிவாயு விநியோகிக்கப்பட்டதென்றும் மிகுதி சமையல் எரிவாயு சிலிண்டர்கள் அனைத்தும் கடைகளுக்கு விநியோகம் செய்ய கொண்டுசெல்ல முற்பட்டபோது அவ்விடத்தில் அமைதியின்மை ஏற்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

பின்னர் குறித்த பிரதேசத்திற்கு பொலிஸார் வரவழைக்கப்பட்டு நிலைமையை கட்டுப் பாட்டுக்குள் கொண்டுவந்தனர்.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

நேற்றைய தினம் வருகைதந்த சமையல் எரிவாயு சிலிண்டர்களில் வரிசையில் நின்றவர்களுக்கு விநியோகிக்கப்பட்டது போக, மிகுதியை ஏனையவர்களுக்கு விநியோகிக்க முடியாது எனவும் அவை அனைத்தும் வேறு பிரதேசத்தின் கடைகளுக்கு விநியோகம் செய்ய வேண்டும் எனவும் திருகோணமலை பிராந்திய லிட்ரோ நிறுவனத்தின் விநியோகஸ்தர் மற்றும் பிராந்திய முகாமையாளரால் பொதுமக்களுக்கு தெளிவுபடுத்தப்பட்டதாகவும் பின்னர் குறித்த விநியோகஸ்தரின் களஞ்சியசாலையில் வைத்து இவ்வாறு சமையல் எரிவாயு சிலிண்டர்கள் விற்பனை செய்யப்பட்டதாகவும் வரிசையில் காத்திருக்கும்போது இவ்வறிவித்தலை முன்வைக்காமல் களஞ்சியசாலையின் பிரதான வாயிலில் சமையல் எரிவாயு சிலிண்டர்கள் இவ்விடத்தில் விற்பனை செய்யப்படாது என துண்டுப்பிரசுரம் ஒட்டப்பட்டதையடுத்து அவ்விடத்தில் அமைதியின்மை ஏற்பட்டதாகவும் வாடிக்கையாளர்கள் பொலிஸாருக்கு தெளிவுபடுத்தினர்.

பின்னர், பொலிஸாரின் தலையீட்டினால் மிகுதி சிலிண்டர்கள் அவ்விடத்தில் வரிசையில் காத்திருந்த வாடிக்கையாளர்களுக்கு விநியோகிக்கப்பட வேண்டும் என பிராந்திய முகாமையாளரிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டதையடுத்து, அவ்விடத்தில் சமையல் எரிவாயு சிலிண்டர்கள் மீண்டும் விநியோகிக்கப்பட்டன.

மேலும், இதன்பின்னர் குறித்த முகவரின் களஞ்சியசாலையில் சமையல் எரிவாயு சிலிண்டர்கள் விற்பனை செய்யப்படமாட்டாது என துண்டுப்பிரசுரம் ஒட்டப்பட்டுள்ளதுடன், இதற்கு பிற்பாடு வாடிக்கையாளர்கள் இவ்விடத்தில் சமையல் எரிவாயு கொள்வனவுக்காக வருகை தரவேண்டாம் எனவும் பிராந்திய முகாமையாளர் மற்றும் பிராந்திய விநியோகஸ்தர் ஆகியோர் வேண்டுகோள் விடுத்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

## தமிழக உலருணவுப் பொருட்கள் தம்பலகாமத்தில் வழங்கிவைப்பு





(கிண்ணியா நிருபர்)

தமிழ்நாட்டு அரசாங்கத்தால் வழங் கப்பட்ட உலருணவுப் பொருட்கள் தம்பலகாமம் பிரதேச செயலகப் பகுதியில் நேற்று (01) வழங்கப்பட்டன. தம்பலகாமம் பிரதேச செயலாளர் ஜெ.ஸ்ரீபதி தலைமையில் குறித்த உலருணவுப் பொதிகள் வழங்கப்பட்டன.

வறுமைக்கோட்டின்கீழ் வாழும் தெரிவுசெய்யப்பட்ட பயனாளிகளுக்கு இவ்வுலருணவுப்பொருட்கள் வழங்கப்பட்டன.

தம்பலகாமம் பிரதேச செயலகப் பகுதியை உள்ளடக்கிய 12 கிராம சேவகர் பிரிவுகளுக்கும் பிரதேச செயலாளர் உரிய கிராமசேவகர் பிரிவின் பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்களிடம் கையளித்தார். மொத்தமாக 1600 பொதிகள் தம்பலகாமம் பிரதேச செயலகத்துக்கு வழங்கப்பட்டுள்ளன. குறித்த உலருணவுப் பொருட்களை பெற்றுக்கொண்ட பயனாளிகள் தமிழக அரசுக்கும் தமிழக மக்களுக்கும் தமது நன்றிகளை இதன்போது தெரிவித்தனர்.

## முன்னுதாரணமாக செயற்பட்ட மட்டக்களப்பு மாவட்ட செயலகம்









(கல்லடி விசேட நிருபர்)

நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலை காரணமாக எரிபொருளை மீதப்படுத்தும் நோக்கில் நேற்று (01) மட்டக்களப்பு மாவட்ட செயலக அரச உத்தியோகத்தர்கள் அனைவரும் மாவட்ட செயலகத்திற்கு பொது போக்குவரத்து மற்றும் துவிச்சக்கரவண்டி மூலமாகவும் சமுகமளித்தனர்.

தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி நிலையில் அனைத்துப் பொருட்களினதும் விலைகள் அதிகரித்துள்ளன.

எரிபொருள் விலை உச்சத்தைத் தொட்டுவிட்டது. அத்தியாவசியப் பொருட்களைக் கூட இறக்குமதி செய்வதற்கு டொலர் இல்லாமல் நாட்டின் கடன்சுமை அதிகரித்துவிட்டது.

இந்நிலைமைகளுக்கு மத்தியில் இலங்கையர்கள் என்ற அடிப்படையில் எரிபொருளை மீதப்படுத்தி நாட்டிற்கு எம்மாலான பொருளாதார பங்களிப்பை வழங்க வேண்டியுள்ளதன் அடிப்படையில், பொது நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் மற்றும் மாகாண சபைகள் அமைச்சின் மூலம் அரச திணைக்களங்களுக்கு வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களுக்கு அமைவாக மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபரின் ஆலோசனையின் பிரகாரம், எரிபொருளை மீதப்படுத்தும் நோக்கில் வாராந்தம் ஒவ்வொரு புதன்கிழமையும் மாவட்ட செயலக உத்தியோகத்தர்களை துவிச்சக்கரவண்டி மற்றும் பொதுப் போக்குவரத்தில் அலுவலகத்திற்கு சமுகமளிக்குமாறு விடுத்த பணிப்புரைக்கு அமைவாக நேற்றைய தினம் மாவட்ட செயலாளர் உள்ளிட்ட அனைத்து உயரதிகாரிகளும் உத்தியோகத்தர்களும் பஸ்களிலும், துவிச்சக்கர வண்டியிலும், நடந்தும் அலுவலகத்திற்கு வருகை தந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## போடியார் புலம்பல்!



மனிசனத்தான் பட்டினி போட்டு சாகடிக்கும் ரணில் கோட்டா அரசு என்று பார்த்தால் இப்ப தெஹிவளை மிருகக்காட்சிச்சாலை உள்ளிட்ட மிருகக்காட்சிச்சாலைகளில் உள்ள மிருகங்களுக்கு நாளாந்த உணவை வழங்குமளவுக்குக்கூட போதுமான நிதி இல்லையாம். வெட்கம் கெட்ட சனியனுகள ஆசனத்தில ஏத்தியதால மனிசனோட சேர்ந்து மிருகங்களயும், பறவைகளயும் சாகடிக்கிற பாவம் இவனுகள சும்மாவிடாது.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

## இறக்காமத்தில் உலக வங்கியின் நிதியுதவியுடன் மூன்று மாதங்களுக்கு மானியம் வழங்க நடவடிக்கை



(நூருல் ஹுதா உமர்)

தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக மக்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளதால் தற்போது அமுலிலுள்ள நலனோம்பு நிகழ்ச்சித்திட்டங்களின் கீழ் சமுர்த்தி நலனுதவி பெற்றுவரும் குடும்பங்கள் மற்றும் சமுர்த்தி காத்திருப்புப் பட்டியலிலுள்ள குடும்பங்களுக்கு உலக வங்கியின் நிதியுதவியின் கீழ் மூன்று மாதங்களுக்கு மானியம் வழங்குவதற்கான நடவடிக்கையை அரசாங்கம் மேற்கொண்டுள்ளது.

இத்திட்டத்திற்கமைய, அம்பாறை மாவட்ட இறக்காமம் பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட இறக்காமம் சமுர்த்தி வங்கியினால் சமுர்த்தி நன்மை பெற்றுவரும் குடும்பங்களுக்கான குறித்த மானியத் தொகை வழங்கும் நிகழ்வு கடந்த திங்கட்கிழமை (30) ஆரம்பித்துவைக்கப் பட்டது. இதில் இறக்காமம் சமுர்த்தி வங்கியில் மாதாந்தம் மானியம் பெற்றுவரும் சுமார் 1,800 குடும்பங்களும், சமுர்த்தி காத்திருப்புப் பட்டியலிலுள்ள 849 குடும்பங்களும் இதன் மூலம் நன்மையடையவுள்ளன.

சமுர்த்தி வங்கியின் முகாமையாளரும், சிரேஷ்ட ஊடகவியலாளருமான ரீ.கே.றஹ்மத்துல்லா தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில், இறக்காமம் பிரதேச செயலாளர் எம்.எஸ்.எம்.றஸ்ஸான் (நளீமி) விசேட அதிதியாக கலந்துகொண்டதுடன், உதவி பிரதேச செயலாளர் எம்.ஏ.சி.அகமட் நஸீல், சமுர்த்தி தலைமைப்பீட முகாமையாளர் எம்.சி.எம். தஸ்லீம், முகாமைத்துவப் பணிப்பாளர் எஸ்.செல்வகுமார், சமுர்த்தி கருத்திட்ட முகாமையாளர் பிரியந்தி வேரகொட மற்றும் சமுர்த்தி உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

## காரைதீவில் சமையல் எரிவாயு பெற மக்கள் நீண்டவரிசையில் காத்திருப்பு







(காரைதீவு நிருபர்)

அம்பாறை மாவட்ட பிரதேசத்துக்கு நீண்ட நாட்களாக சமையல் எரிவாயு வராமையால் பொதுமக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர். அதற்கமைய, மீண்டும் காரைதீவு பிரதேசத்தில் சமையல் எரிவாயு வழங்குவதாக தகவல் வெளியானதையடுத்து, அதனைப் பெற்றுக்கொள்வதற்காக பெரும் எண்ணிக்கையிலானோர் நேற்று (01) அதிகாலை முதல் காரைதீவு விபுலானந்தா மத்திய கல்லூரி விளையாட்டரங்கில் சிலிண்டர்களுடன் நீண்டவரிசையில் காத்திருந்தனர்.

## கல்முனை மீனவர்கள் வீதியை மறித்து மண்ணெண்ணெய் கோரி ஆர்ப்பாட்டம்



(நிந்தவூர் நிருபர்)

கல்முனையில் நேற்று முன்தினம் (31) காலை முதல் மாலைவரை இரண்டு எரிபொருள் நிரப்பு நிலையங்களில் பொதுமக்களுக்கு மண்ணெண்ணெய் விநியோகிக்கப்பட்டது. மாலை பொதுமக்களுக்கான விநியோகம் நிறைவடைந்ததையடுத்து மீனவர்கள் தமது வள்ளங்களுக்கான மண்ணெண்ணெயை தருமாறு பணித்தனர்.

மண்ணெண்ணெய் முடிவடைந்துவிட்டதாக எரிபொருள் நிரப்பு நிலையத்தில் தெரிவித்ததையடுத்து அங்கு பதற்றமான சூழ்நிலை ஏற்பட்டது.

அதனைத் தொடர்ந்து மீன்பிடி வள்ளங்களின் உரிமையாளர்கள் மற்றும் மீனவர்கள் தமது வள்ளம் ஒன்றினை பிரதான வீதியின் குறுக்காக நிறுத்தி போராட்டமொன்றை மேற்கொண்டனர்.

இதனைத்தொடர்ந்து கல்முனை பொலிஸாரினதும் இராணுவத்தினரினதும் தலையீட்டைத் தொடர்ந்து வீதித்தடை நீக்கப்பட்டு வாகனப் போக்குவரத்து சீர்செய்யப்பட்டது.

## அக்கரைப்பற்று பிரதேச செயலகப் பிரிவில் 5000 ரூபா கொடுப்பனவு வழங்கிவைப்பு

(அக்கரைப்பற்று நிருபர்)

உலக வங்கியின் நிவாரண உதவித் திட்டத்தின் கீழ் சமுர்த்திப் பயனாளிகளுக்கும் குறைந்த வருமானம் பெறும் காத்திருப்பு பட்டியலில் உள்ள பயனாளிகளுக்குமான 5 ஆயிரம் ரூபா கொடுப்பனவு அக்கரைப்பற்று பிரதேச செயலகப் பிரிவில் வசிக்கும் மக்களுக்கு அக்கரைப்பற்று மேற்கு மற்றும் கிழக்கு சமுர்த்தி வங்கியில் வைத்து வைபவ ரீதியாக நேற்று (01) வழங்கப்பட்டது.



அக்கரைப்பற்று உதவிப் பிரதேச செயலாளர் ஏ.கே.றொசின்தாஜ் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் சமுர்த்தி வங்கி முகாமையாளர் யூ.கே.எம்.நழீம், முகாமைத்துவப் பணிப்பாளர் எம்.ஜே.எம்.நிஹ்மத்துல்லாஹ், திட்ட முகாமையாளர் என்.ரீ.மசூர் ஆகியோர் கலந்து கொண்டு கொடுப்பனவை வழங்கினர்.

இதன்போது பிரிவுக்குப் பொறுப்பான சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களும் பொதுமக்களும் கலந்துகொண்டனர்.

அக்கரைப்பற்று பிரதேச செயலகப் பிரிவில் வாழும் 6 ஆயிரத்து 803 குடும்பங்களுக்கு 3 கோடியே நாற்பது இலட்சத்து பதினையாயிரம் ரூபா (3,40,15,000) வழங்கப்படவுள்ளது.

அவற்றில் முதற்கட்டமாக நேற்று புதன்கிழமை வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# துமிந்த சில்வாவுக்கு ஜனாதிபதியால் வழங்கப்பட்ட மன்னிப்பை இடைநிறுத்தியமை 19ஆவது திருத்தத்தின் மூலம் கிடைத்த நன்மை

## சட்டத்தரணி வை.எல்.எஸ்.ஹமீட்



(நூருல் ஹுதா உமர்)

துமிந்த சில்வாவுக்கு ஜனாதிபதியால் வழங்கப்பட்ட மன்னிப்பை இடைநிறுத்தியமை 19ஆவது திருத்தத்தின் மூலம் கிடைத்ததொரு நன்மையாகும். 20ஆவது திருத்தம் 19இன் பல விடயங்களை மாற்றியிருந்தாலும் சில விடயங்கள் மாற்றப்படவில்லை. அதில் ஜனாதிபதியின் அதிகாரப்பூர்வ செயற்பாடுகளுக்கெதிராக வழக்குத் தொடுப்பதும் ஒன்றாகும் - என அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் ஸ்தாபக செயலாளர் சட்டத்தரணி வை.எல்.எஸ்.ஹமீட் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்

19இற்கு முன், ஜனாதிபதிக்கெதிராக அவருடைய உத்தியோகபூர்வ கடமை ரீதியாகவோ, தனிப்பட்ட ரீதியாகவோ எந்த வழக்கும் தாக்கல் செய்ய முடியாது. இது 19இல் மாற்றப்படவில்லை. இன்றும் தொடர்கிறது. சுருக்கமாக, ஜனாதிபதிக்கெதிராக (அவர் பதவியில் இருக்கும்வரை) எந்த வழக்கும் தொடரமுடியாது. 1978ஆம் ஆண்டிலிருந்து இன்றுவரை அதுதான் நிலைப்பாடு.

19இற்குமுன் அவரின்கீழ் வருகின்ற அமைச்சுகளில் அவரது உத்தியோகபூர்வ செயற்பாடுகள் தொடர்பாக வழக்குத் தொடரமுடியும். ஆனால், அதில் ஜனாதிபதியை பிரதிவாதியாக குறிப்பிட முடியாது. சட்ட மா அதிபரைத்தான் பிரதிவாதியாக குறிப்பிட வேண்டும். இது 19இல் மாற்றப்படவில்லை. இன்றுவரை தொடர்கிறது.

19இற்கு முன், அவர் ஜனாதிபதி என்ற வகையில் செய்கின்ற எந்தவொரு உத்தியோகபூர்வ செயற்பாட்டிற்கெதிராகவும் வழக்குத் தொடரமுடியாது. ஆனால், 19இல் இது மாற்றப்பட்டு அவ்வாறான விடயங்கள் தொடர்பாகவும் வழக்குத் தொடர இடம் வழங்கப்பட்டது. (ஜனாதிபதியின் யுத்தம் அல்லது அமைதி பிரகடனப்படுத்தும் அதிகாரத்தைத் தவிர). இது 20இல் மாற்றப்படவில்லை. எனவே, இன்றும் அதேநிலை தொடர்கிறது.

ஜனாதிபதி ஒரு தண்டனைக் குற்றவாளிக்கு மன்னிப்பு வழங்கும் அதிகாரம் அரசியலமைப்பின் சரத்து 34(1)(a))இன் பிரகாரம் ஜனாதிபதி என்ற வகையில் வழங்கப்பட்டிருக்கின்றதே தவிர, தனக்கு கீழ்வரும் எந்த அமைச்சின் காரணமாகவும் அல்ல. அதாவது, மன்னிப்பு வழங்குவது ஜனாதிபதியின் அதிகாரம்.

இந்த அதிகாரத்தைத்தான் 19இற்கு முன் கேள்விக்குட்படுத்த முடியாத நிலை இருந்தது. 19இற்குப்பின் இன்றுவரை அந்த வாய்ப்பு இருக்கிறது. அந்த அடிப்படையிலேயே குறித்த வழக்கு தொடுக்கப்பட்டு இந்த இடைக்கால உத்தரவு வழங்கப்பட்டிருக்கிறது. எனவே, இது 19இன் மூலம் கிடைத்ததொரு நன்மையாகும் என்று தெரிவித்துள்ளார்.

# பொருளாதார நிலைமையால் கிழக்கு மாகாண நிதிச் செலவீனங்களை உடனடியாக குறைக்குக!

## அமைச்சின் செயலாளர் திருமதி முரளிதன்



(பைஷல் இஸ்மாயில்)

நாட்டில் தற்போது நிலவும் பொருளாதார மற்றும் சமூக நெருக்கடி நிலைமை, இயல்புநிலைக்குத் திரும்பும்வரை, கிழக்கு மாகாண சபையின் நிதியொதுக்கீட்டின் கீழ் நிதிச் செலவீனங்களை உடனடியாக குறைக்குமாறு கிழக்கு மாகாண சுகாதார சுதேச மருத்துவ, நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு, சமூக நலன்புரிச் சேவைகள், கிராமிய மின்சார அமைச்சின் செயலாளர் திருமதி ஜே.ஜே.முரளிதன் தனது அமைச்சின் கீழுள்ள சகல மாகாண திணைக்களத் தலைவர்களுக்கும் அறிவுறுத்தியுள்ளார்.

தனது அமைச்சின்கீழ் இயங்கும் அனைத்து திணைக்களத் தலைவர்களுடனான தொழில்நுட்ப கலந்துரையாடல் நேற்று முன்தினம் (31) கிழக்கு மாகாண சுகாதார அமைச்சில் இடம்பெற்றபோதே அவர் இந்த அறிவுறுத்தலை வழங்கினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், நாடளாவிய ரீதியிலுள்ள மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ள நிலையில், கிழக்கு மாகாண மக்களும் அதே நிலைமையை எதிர்நோக்கியுள்ளனர் - என்றார்.

இவ்வாறான நிலையில், அனைத்து நிறுவனங்களும் அத்தியாவசிய சேவைகளுக்கு மாத்திரம் தமது நிதி ஒதுக்கீட்டை மிகச் சிக்கனமாக பயன்படுத்த வேண்டும் என்ற ஆலோசனையையும் அவர் வழங்கியுள்ளார்.

தங்களது திணைக்களத்திலும், திணைக்களத்தின் கீழுள்ள நிறுவனங்களிலும் நடைபெறும் சிறப்பு நிகழ்வுகளை ஏற்பாடு செய்தல், நிகழ்வுகளுக்கான அழைப்பிதழ்களை அச்சிடுதல், அத்தியாவசியமற்ற உத்தியோகபூர்வ போக்குவரத்து நடவடிக்கைகள், இதுவரை ஆரம்பிக்கப்படாத அத்தியாவசியமற்ற திட்டங்கள் மற்றும் கட்டுமானப் பணிகளை நடைமுறைப்படுத்துவதை இடைநிறுத்துமாறும் அறிவுறுத்தியுள்ளார்.

# அம்பாறை மாவட்ட மக்களுக்கான விசேட மனிதநேய வேலைத்திட்டம்:

## இராணுவத்தால் காரைதீவில் ஆரம்பித்துவைப்பு






(நூருள் ஹுதா உமர்)

பொருளாதார நெருக்கடியிலிருந்து அம்பாறை மாவட்ட மக்களை மீட்டெடுக்கின்ற விசேட மனிதநேய வேலைத்திட்டம் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு தொண்டு அமைப்புகளின் பங்களிப்புடன் இராணுவத்தின் அம்பாறை மாவட்ட கட்டளை தலைமையகத்தால் முன்னெடுக்கப்படுகின்றது.

சிங்கப்பூர், இலங்கை ஆகிய நாடுகளைச் சேர்ந்த தொண்டு நிறுவனங்களின் 63.75 மில்லியன் ரூபா மனிதநேய நிதியில் 42,500 குடும்பங்களை இலக்குவைத்து 'எல்லைகளை கடந்த அன்பு' என்கின்ற மகுடத்திலான வெசாக் பண்டிகை கால மனிதநேய வேலைத்திட்டம் நடைமுறைப் படுத்தப்படுகின்றது.

இதன் ஆரம்ப விழாவும், காரைதீவு பிரதேச மக்களுக்கான உலருணவுப் பொதிகள் கையளிப்பு நிகழ்வும் காரைதீவு பிரதேசத்துக்கான இராணுவ முகாம் பொறுப்பதிகாரி மேஜர் சமில் நிசானின் ஒழுங்கமைப்பில் மாவட்ட கட்டளைத் தளபதி உள்ளிட்ட இராணுவ உயரதிகாரிகள், சர்வமதத் தலைவர்கள் ஆகியோரின் பங்கேற்புடன் காரைதீவு விபுலானந்தா கலாசார மண்டபத்தில் கடந்த 30ஆம் திகதி திங்கட்கிழமை இடம்பெற்றது.

இந்து சமயத்தை பிரதிநிதித்துவம் செய்து காரைதீவு சிவசக்தி குடைச்சாமி சர்வமத பீடத்தின் தலைவர் கொடைச்சாமி ஜீவாகர சுவாம்ஜி கலந்துகொண்டு இவ்வைபவத்தை ஆசீர்வதித்தார். இவர் அடங்கலான பேராளர்கள், பயனாளிகளுக்கு உலருணவு நிவாரணப் பொதிகளை வருமானம் குறைந்த மற்றும் வறிய குடும்பங்களைச் சேர்ந்த தெரிவுசெய்யப்பட்ட 500 பயனாளி குடும்பங்களுக்கு கையளித்தனர்.

# அட்டாளைச்சேனையில் கடை உடைப்பு :

## இரண்டரை இலட்சம் ரூபா பெறுமதியான உரப் பை கொள்ளை

(கனகராசா சரவணன்)

அம்பாறை, அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவிலுள்ள அட்டாளைச்சேனை ஆலங்குளம் வீதியிலுள்ள கடை ஒன்றின் கதவை உடைத்து அங்கு களஞ்சியப்படுத்தி வைக்கப்பட்டிருந்த சுமார் இரண்டரை இலட்சம் ரூபா பெறுமதியான உரப் பைகளை கொள்ளையடித்துச் சென்ற சம்பவம் நேற்று முன்தினம் (31) இரவு இடம்பெற்றுள்ளதாக அக்கரைப்பற்று பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த பகுதியிலுள்ள கடை ஒன்றில் அதன் முதலாளி நெல் அறுவடையின் பின்னர் வியாபாரத்துக்காக உரப் பையை களஞ்சியப்படுத்தி வைத்திருந்துள்ளார். இந்நிலையில் குறித்த களஞ்சியப்படுத்திய கடைக்கு சென்றபோது கடைக்கதவின் பூட்டை இரும்பு வாளால் வெட்டி கதவை உடைத்து அங்கு களஞ்சியப் படுத்தி வைக்கப்பட்டிருந்த நெல் உரப் பைகளை கொள்ளையர்கள் கொள்ளையடித்துச் சென்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.



இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# உணவு நெருக்கடியை சமாளிக்க மாற்று வேலைத்திட்டம்



(சீனக்குடா நிருபர்)

கிராமிய மட்டத்தில் பொருளாதார நெருக்கடியை முகாமை செய்வதற்கான மாற்றுச் செயற்பாடுகள் குறித்து கிராமிய மக்களுடனான கலந்துரையாடல் ஒன்று நேற்றுமுன்தினம் (31) கிண்ணியா பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட மாஞ்சோலை கிராமசேவகர் பிரிவில் இடம்பெற்றது.

இதன்போது கிண்ணியா பிரதேச செயலாளர் எம்.எச்.எம்.ஹனியினால் உணவு நெருக்கடியை சமாளிக்கும் பொருட்டு, வீட்டுத் தோட்டம் குறித்து பொதுமக்களுக்கு விளக்கமளிக்கப்பட்டதோடு, மிளகாய், கத்தரி, வெண்டி போன்ற காய்கறிச் செடிகளும் வழங்கப்பட்டன.

இந்தக் கலந்துரையாடலை மாஞ்சோலை சேனை கிராமசேவகர் ஏ.சி.அப்துல் பரிட் ஏற்பாடு செய்திருந்தார்.

# சாய்ந்தமருது தைபா மகளிர் அரபுக் கல்லூரிக்கு விண்ணப்பம் கோரல்



(சாய்ந்தமருது நிருபர்)

சாய்ந்தமருது தைபா மகளிர் அரபுக் கல்லூரிக்கு புதிய மாணவிகளை சேர்த்துக்கொள்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டிருப்பதாக கல்லூரி அதிபர் அஷ்ஷெய்க் எஸ்.எச்.ஆதம்பாவா மதனி தெரிவித்தார்.

இம்முறை க.பொ.த.சாதாரண தரப் பரீட்சை எழுதிய அல்-குர்ஆனை நன்கு ஓதத் தெரிந்த மாணவிகள் இதற்காக விண்ணப்பிக்க முடியும்.

ஆர்வமுள்ள தகுதியான மாணவிகள் இம்மாதம் 01ஆம் திகதிமுதல் 10ஆம் திகதிவரை சாய்ந்தமருது பொலிவேரியன் நகரில் அமைந்துள்ள கல்லூரியின் நிர்வாக காரியாலயத்தில் விண்ணப்பப்படிவங்களை பெற்று, அதனைப் பூர்த்திசெய்து, இதே காலப்பகுதியில் இக்காரியாலயத்தில் நேரடியாக சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

இக்கல்லூரியில் மௌலவியா பட்டத்திற்கான இஸ்லாமிய கற்கைநெறி போதிக்கப்படுவதுடன் க.பொ.த. உயர் தரப் பரீட்சைக்கும் மாணவிகள் தயார்படுத்தப் படுகின்றனர். கடந்த காலங்களில் இக்கல்லூரியில் இருந்து க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றிய பல மாணவிகள் பல்கலைக்கழக அனுமதி பெற்று, உயர்கல்வி கற்று வருகின்றனர் என்று கல்லூரி அதிபர் எஸ்.எச்.ஆதம்பாவா மதனி மேலும் குறிப்பிட்டார்.

# அல்ஜெஸீரா கல்லூரிக்கு ஜெனரேட்டர் அன்பளிப்பு




(கந்தளாய் நிருபர்)

அல்ஜெஸீரா பெண்கள் அரபுக்கல்லூரிக்கு அல்ஹித்மத்துல் உம்மா பௌண்டேசனினால் கடந்த திங்கட்கிழமை (30) மாலை ஜெனரேட்டர் அன்பளிப்பு செய்யப்பட்டது. அல்ஹித்மத்துல் உம்மா பௌண்டேசனின் தலைவரும் சமூகசேவையாளருமான கஸ்ஸாலி முகமட் பாத்திஹ், அல்ஜெஸீரா அரபுக்கல்லூரியின் தலைவரும் தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளரும் அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமாவின் திருகோணமலை மாவட்ட தலைவருமான அஷ்ஷெய்ஹ் ஏ.ஆர்.நஸாரிடம் ஜெனரேட்டரை கையளித்தார்.

மின்வெட்டுக் காலங்களில் மாணவிகள் கற்றல் நடவடிக்கைகளில் சிரமத்தை எதிர்கொள்வதாகவும் இதனை நிவர்த்திக்க தங்களுக்கு உதவுமாறும் அல்ஜெஸீரா மகளிர் அரபுக் கல்லூரியின் வேண்டுகோளை கருத்திற்கொண்டதிற்கமையவே, அல்ஹித்மத்துல் உம்மா பௌண்டேஷனினால் இவ்வுதவி மேற்கொள்ளப்பட்டது.

மாணவர்களின் நலன் கருதி கற்றல் நடவடிக்கைகளை மேம்படுத்து வதற்காகவும் மின்வெட்டுக் காலங்களில் மாணவர்கள் எதிர்கொள்ளும் அசௌகரியங்களை தவிர்ப்பதற்காகவும் திருகோணமலை மாவட்டத்தில் பல கல்வி நிலையங்களுக்கு அல்ஹித்மத்துல் உம்மா பௌண்டேஷனினால் பல ஜெனரேட்டர் அன்பளிப்பு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# திருகோணமலையில் 25 ஆயிரம் வறிய குடும்பங்களுக்கு இந்திய நிவாரணப்பொருட்களை பகிர்ந்தளிக்க தீர்மானம்

கிழக்கு செய்திகள்
easttamilan@gmail.com

(கிண்ணியா நிருபர்)

இந்திய அரசாங்கத்தால் இலங்கை மக்களுக்காக அன்பளிப்பு செய்யப்பட்ட உலருணவுப் பொருட்களின் ஒருதொகை நேற்று முன்தினம் (31) திருகோணமலை மாவட்டத்திற்கு கிடைக்கப்பெற்றது.

திருகோணமலை மாவட்ட செயலகத்திலிருந்து மாவட்டத்தின் 11 பிரதேச செயலகப் பிரிவுகளுக்கும் இந்த உலருணவுப்பொருட்கள் மாவட்ட அரசாங்க அதிபர் பி.எச்.என்.ஜயவிக்ரம தலைமையில் அனுப்பிவைக்கப்பட்டன. 2,50,000 கிலோகிராம் அரிசி, 1 கிலோகிராம் பால்மா 2,250 பக்கற்றுகளும் இதனுள் அடங்குகின்றன. இப்பொருட்கள் மாவட்டத்திலுள்ள 25,000 வறிய குடும்பங்களுக்கு பகிர்ந்தளிக்கப்படவுள்ளன.

பிரதேச செயலகங்களுக்கு உணவுப் பொதிகளை அனுப்பிவைக்கும் நிகழ்வில் மேலதிக அரசாங்க அதிபர் ஜே.எஸ்.அருள்ராஜ், மாவட்ட செயலக நிர்வாக உத்தியோகத்தர் எஸ்.ஆர்.கே.எஸ்.குருகுலசூரிய உட்பட சக உத்தியோகத்தர்களும் கலந்து+கொண்டனர்.





# ராஜபக்ஷ குடும்பத்துக்கு எதிராக அவர்களின் சொந்த மாவட்டத்தில் அதிகரிக்கும் மக்களின் கோபமும் வெறுப்பும்!



வீரக்கெட்டியவிலிருந்து
• மீரா ஸ்ரீனிவாசன்

நெல் விவசாயியான எஸ்.டி.வீரவன்ச அண்மைய வாரங்களில் வாழ்க்கைத்தொழில் தீர்மானமொன்றையும் அரசியல் சபதமொன்றையும் எடுத்திருக்கிறார். அதாவது, எதிர்வரும் போகத்தில் வயலை விதைக்கப்போவதில்லை. அத்துடன், ஒரு ராஜபக்ஷவையும் மீண்டும் ஒருபோதும் ஆதரிக்கப்போவதில்லை.

அவரின் இந்தத் தீர்மானங்கள் ஒன்றுடன் ஒன்று தொடர்பில்லாதவையல்ல. அவரது பயிர்ச்செய்கையின் அறுவடை 50 சதவீதத்தினால் வீழ்ச்சிகண்டுவிட்டது. இலங்கை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ கடந்த வருடம் இரசாயன பசளை வகைகள் மீது விதித்த தடையின் விளைவே இது. விவசாயிகளின் எதிர்ப்பையும் விவசாயத்துறை நிபுணர்களின் கண்டனங்களையும் தொடர்ந்து பல மாதங்களுக்குப் பிறகு இந்தத் தடை நீக்கப்பட்டது. ஆனால், அது பயிர்ச்செய்கையை காப்பாற்றவில்லை. இலங்கையின் உணவுப் பாதுகாப்புக்கும் வெளிநாட்டு செலாவணிக்கும் இன்றியமையாத வருடாந்த நெல் மற்றும் தேயிலை சாகுபடி அரைவாசியினால் வீழ்ச்சி கண்டிருப்பதாக விவசாயிகளும் விவசாய நிபுணர்களும் கூறுகிறார்கள்.

"ஒரு போத்தல் களைக்கொல்லியை 2,000 ரூபாவுக்கு நான் வாங்குவது வழமை. இப்போது ஒரு போத்தலின் விலை 22,000 ரூபா. இரசாயன பசளை வகைகள் இப்போது கிடைக்கின்றன என்றாலும் அவற்றை வாங்க எனக்குக் கட்டுப்படியாகாது" என்று தென்னிலங்கையின் அம்பாந்தோட்டை மாவட்டத்தில் வீரக்கெட்டியவில் தனது சிறிய வீட்டின் சீமெந்து விறாந்தையில் அமர்ந்திருந்தவாறு வீரவன்ச விளக்கினார். பிரயோசனமற்ற பெருஞ்செலவினங்கள் என்று கண்டிப்பவர்களினால் வர்ணிக்கப்படுகின்ற சீன முதலீட்டுடனான பிரம்மாண்டமான திட்டங்களுக்கு பெயர்போனது இந்த அம்பாந்தோட்டை மாவட்டம்.

2021 மே மாதத்தில் ராஜபக்ஷ அரசாங்கம் இரசாயனப் பசளைகளுக்கு விதித்த தடையும் பின்னரான அதன் நீக்கமும் விவசாயிகளுக்கு ஏற்கனவே வழங்கப்பட்ட பசளை மானியத்தை உண்மையில் நீக்கிவிட்டன. அதன் விளைவாக விவசாயிகளின் உற்பத்திச்செலவினம் பத்து மடங்காக அதிகரித்தது. அதுவும் தற்போதைய பொருளாதார நெருக்கடியின்போதான பணவீக்கமும் சேர்ந்து விவசாயத்துக்கு தேவையான பொருட்களின் விலைகளை சந்தையில் பலமடங்கு அதிகரிக்கச் செய்துவிட்டன. "ஒவ்வொருவரும் உணவு நெருக்கடியையும் பட்டினியையும் பற்றி பேசிக்கொண்டிருக்கிறார்கள். இப்போது உணவுத் தட்டுப்பாடுகளை நிவர்த்திசெய்ய விவசாயிகளை எதிர்பார்ப்பது நியாயமற்றது" என்று வீரவன்ச கூறுகிறார்.

நெல் விவசாயிகள் இந்த போகத்தில் வயல்களை விதைக்கப்போவதில்லை என்று தீர்மானிக்கும்போது டபிள்யூ.டபிள்யூ.பி. சந்திரசிறி போன்ற விதைநெல் விவசாயிகள் நேரடியாக பாதிக்கப்படுகிறார்கள். "இதைப் போன்ற ஒரு நேரத்தில் விவசாயிகள் விதைநெல்லை வாங்குவார்கள் என்று நான் எவ்வாறு எதிர்பார்க்கலாம்?" என்று மனம் ஒத்துக்கொள்ளாவிட்டாலும் தனக்கு ஏற்படப்போகின்ற நட்டத்தை ஏற்றவராக அவர் கூறினார்.



விதைநெல்லை அவற்றின் குறித்துரைக்கப் பட்ட 9 மாத காலத்துக்குப் பின்னர் களஞ்சியப்படுத்தி வைக்கமுடியாது. அந்த ஒன்பது மாதங்களுக்குப் பிறகு வேறு வழியின்றி விவசாயிகள் அரிசியாக மாற்றிவிடுவார்கள்."ஒரு கிலோ விதைநெல் 150 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகிறது. ஆனால், அதை அரிசியாக்கிவிட்டால் அதன் விலை 100 ரூபா மாத்திரமே" என்று அவர் கூறுகிறார். இது வல்லமைபொருந்திய ஒரு ஜனாதிபதியின் கண்மூடித்தனமான கொள்கை மாற்றம், நாட்டின் உணவுச்சூழல் தொகுதியை எவ்வாறு பாதிக்கிறது என்பதை உணர்த்துகிறது.

படுமோசமான பொருளாதார நெருக்கடியில் திணறிக்கொண்டிருக்கும் இலங்கை உணவு வகைகள் உட்பட அத்தியாவசியப் பொருட்களை இறக்குமதி செய்வதற்கு டொலர்கள் இல்லாமல் தவிக்கின்ற ஒரு நேரத்தில் இது பெருஞ்செலவை ஏற்படுத்துகிற ஒரு விடயமாகும்.

இந்தியா உட்பட வெளிநாடுகளிடமிருந்து கிடைக்கின்ற உதவிகள் மூலமாக இலங்கை சமாளிக்கிறது. உணவுப்பொருட்களுக்காக இந்தியா தொடர்கடன்களை வழங்கியிருக்கிறது. ஏற்படப்போகின்ற உணவுத்தட்டுப்பாடு குறித்து அண்மையில் எச்சரிக்கை செய்த பிரதமர் ரணில் விக்ரமசிங்க போதுமானளவு பசளை விநியோகத்தை உறுதிப்படுத்த நாட்டுக்கு 60 கோடி டொலர்கள் தேவைப்படுகிறது என்று கூறினார்.

இரசாயனப் பசளை வகைகளுக்குத் தடை விதித்தது ஒரு "தவறு" என்று ஏப்ரலில் ஒத்துக்கொண்ட ஜனாதிபதி கோட்டாபய, துரிதமாக தேசிய பசளைக் கொள்கையொன்றை வகுக்குமாறு அதிகாரிகளைக் கேட்டிருக்கிறார். உணவுப் பாதுகாப்பு தொடர்பில் 'அகல்விரிவான அரசாங்க - தனியார் கூட்டுப்பங்காண்மை செயற்றிட்டம்' ஒன்றை உடனடியாக முன்னெடுக்குமாறும் அதிகாரிகளுக்கு அவர் பணிப்புரை விடுத்ததாக அவரது அலுவலகம் திங்களன்று விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது.



பட்டினி அச்சுறுத்தல் மெய்யானது என்று சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்தன ஏப்ரலில் நாடாளுமன்றத்தில் தெரிவித்தார். போராட்டங்களில் இறங்கியிருந்த விவசாயிகளும் இது குறித்து நீண்டநாட்களுக்கு முன்னரேயே எச்சரிக்கை விடுத்துக்கொண்டு வந்தனர். ஆனால் எந்தப் பயனும் இல்லை.

"தலைநகர் கொழும்பிலும் ஏனைய பிரதான நகரங்களிலும் வாழ்கின்ற மக்கள் தற்போதைய நெருக்கடிக்கு மத்தியிலும் கிராமங்களில் இருப்பவர்கள் ஓரளவுக்கு நல்ல வாழ்க்கையை நடத்துவதாகக் கூறுகிறார்கள். எமது கோடிப்புறத்தில் பயிர்களை வளர்த்து உணவை எங்களால் தேடிக்கொள்ளமுடியும். அது உண்மைதான். ஓரளவுக்கு எங்களால் சமாளிக்கமுடியும். ஆனால், எங்களது சொந்த குடும்பத்தை மாத்திரமே எங்களால் பாதுகாக்க முடியும். அதுவும்கூட தற்காலிகமானதே. நாம் உணவை உற்பத்திசெய்யாவிட்டால் முழுநாடும் பட்டினி கிடக்கவேண்டும்" என்று சந்திரசிறி கூறுகிறார்.

கடந்த வருடம் விவசாயிகள் வெளிப்படுத்திய சீற்றத்தை இப்போது பரவலாக நாட்டுமக்கள் மத்தியில் காணக்கூடியதாக இருக்கிறது. மக்களின் சீற்றம் அண்மைய மாதங்களாக நாடுபூராவும் வீதிப்போராட்டங்களின் மூலம் வெளிக்காட்டப்பட்டு வருகிறது. அத்தியாவசிய உணவு வகைகள், பால்மா, எரிபொருட்கள் மற்றும் சமையல் எரிவாயு ஆகியவற்றுக்கு நிலவும் கடுமையான தட்டுப்பாட்டினாலும் மின்சாரவெட்டினாலும் பெரும் அவலத்துக்குள்ளாகியிருக்கும் மக்கள் தலைநகரிலும் ஏனைய மாவட்டங்களிலும் வீதிகளில் இறங்கி ஜனாதிபதி கோட்டாபய பதவி விலகவேண்டும் என்று கோருகிறார்கள்.

மக்களின் சீற்றம் முழு அரசாங்கத்துக்கும் ஆளும் வர்க்கத்துக்கும் எதிரானதாக இருக்கிறது. ஆனால், அது பிரதானமாக ராஜபக்ஷ குடும்பத்துக்கு எதிரானதாகவே உள்ளது. அது ஜனாதிபதியின் மூத்த சகோதரர் மஹிந்த ராஜபக்ஷவை பிரதமர் பதவியிலிருந்து விலகவைத்தது. ஏனைய சகோதரர்களான சமல், பெசில் மற்றும் மஹிந்தவின் மகன் நாமல் ஆகியோரும் தங்கள் அமைச்சர் பதவிகளிலிருந்து விலகினர்.

### மக்களின் சீற்றம்

ராஜபக்ஸக்களின் கோட்டையாக விளங்கும் வீரக்கெட்டியவில் மக்களின் சீற்றம் மிகவும் கடுமையாக வெளிப்பட்டது. ராஜபக்ஷ சகோதரர்களின் பெற்றோருக்காக அரசாங்கப் பணத்தில் நிர்மாணிக்கப்பட்டதாகக் கூறப்படும் நினைவாலயமொன்றுக்கு தீ வைக்கப்பட்டது. அருகாமையில் மெதமுலனவில் மஹிந்தவின் மூதாதையரின் இல்லமும் அவரின் தங்காலையில் உள்ள கார்ல்டன் வாசஸ்தலமும் கூட தீவைக்கப்பட்டன. தந்தையார் டி.ஏ.ராஜபக்ஷவின் பிரம்மாண்டமான உருவச்சிலையும் நிர்மூலஞ்செய்யப்பட்டது.

மஹிந்தவின் வீரக்கெட்டிய வீட்டுக்கு செல்லும் வீதியின் முனையில் பெற்றோரின் நினைவாக நிலத்தடியில் அமைக்கப்பட்ட அருங்காட்சியகத்துக்கு மேலே இருந்த பளிங்கினாலான இரு கூம்புக் கட்டமைப்புகள் வீழ்த்தப்பட்டுக் கிடந்தன. அவற்றின் முனைகள் நொறுக்கப்பட்டிருந்தன. ஆயுதமேந்திய படையினர் அந்தப் பகுதியில் காவல் கடமையில் ஈடுபட்டிருந்தனர்.

அந்த வீதியில் சில மீற்றர்கள் தூரத்தில் ராஜபக்ஷ சகோதரர்களில் மூத்தவரின் பெயரில் அமைந்த சமால் ஆரம்பப்பள்ளி, அருகாமையில் தந்தையாரின் பெயரில் அமைந்த இருந்த டி.ஏ.ராஜபக்ஷ மகாவித்தியாலயம் ஆகியன இருக்கின்றன. தென்னிலங்கையில் சிங்களவர்களைப் பெரும்பான்மையாகக்கொண்ட இந்தப் பகுதியில் ராஜபக்ஷக்களின் முத்திரையை காணாமல் இருப்பது கஷ்டம். அண்மைக்காலம் வரை மஹிந்த அங்கு மன்னர் போன்றும் கடவுள் போன்றும் கூட போற்றப்பட்டார்.

இனிமேல் அவ்வாறில்லை. "ராஜபக்ஷ நினைவாலயத்தை மக்கள் எவ்வாறு தாக்கி னார்கள் என்பதை நீங்கள் பார்த்தீர்கள்தானே" என்று வீரவன்ச கூறுகிறார். அவர் கோட்டாபயவுக்கு ஒரு வாய்ப்பைக் கொடுப்பதற்காக 2019 ஜனாதிபதித் தேர்தலில் கோட்டாபயவுக்கே வாக்களித்தார்." கோட்டாபய அரசியலுக்கு புதியவராக இருந்தார். நாட்டுக்காக பாடுபடப்போவதாக உறுதியளித்தார். ஆனால், அவர் எங்கள் எல்லோரையும் கைவிட்டுவிட்டார். இப்போது எந்தவொரு ராஜபக்ஷவையும் சகோதரரோ, மகனோ தாங்கள் சகித்துக்கொள்ளப் போவதில்லை என்பதை மக்கள் வெளிக்காட்டிவிட்டார்கள்" என்றும் வீரவன்ச கூறினார்.

அயல் மாவட்டமான மாத்தறையில் கொழும்பு காலிமுகத்திடலில் அமைந்திருப்பதைபோன்ற அரசாங்க எதிர்ப்புக் கோட்டாகோகம கிராமத்தில் ராஜபக்ஷாக்களின் உருவப்பொம்மைகள் இரும்புக்கூண்டுகளுக்குள் வைக்கப்பட்டிருந்தன. மக்களின் பணத்தைக் களவாடியதற்காக ராஜபக்ஷக்கள் சிறையிலடைக்கப்படவேண்டும் என்று ஆர்ப்பாட்டக்காரர்கள் கோருவதை அது பிரதிபலித்தது. சனசந்தடிமிக்க பஸ் நிலையத்துக்கு அண்மையாக வீதியோரத்தில் (மஹிந்தவினால் பிரபல்யப்படுத்தப்பட்ட) செந்நிற சால்வை சகிதம் சவப்பெட்டியொன்று வைக்கப்பட்டிருந்தது.

"மஹிந்த ராஜபக்ஷ தங்களது அரசியல் அனுகூலத்துக்காக போர்வெற்றியையும் இனவெறியையும் பயன்படுத்தி மக்கள் மத்தியில் திட்டமிட்டே பிளவுகளை ஏற்படுத்தினார் என்பதை மக்கள் இப்போது விளங்கிக்கொண்டுவிட்டார்கள். இனிமேலும் மக்கள் அத்தகைய ஏமாற்றுவேலைகளுக்கு மக்கள் பலியாகமாட்டார்கள்" என்று 36 வயதான வர்த்தகர் சம்பத் லியனகே அந்த ஆர்ப்பாட்ட இடத்தில் கூறினார்.

பிரதமராக விக்ரமசிங்கவின் அண்மைய நியமனத்தில் லியனகே எந்த வேறுபாட்டையும் காண்பவராக இல்லை."எல்லாமே அரசியல் ஒப்பந்தங்களின் ஓர் அங்கமே" என்றார் அவர்.

வேறுசிலர் ராஜபக்ஷக்களுக்கான மாற்றுத் தலைவர்கள் குறித்து இன்னமும் யாசித்துக்கொண்டிருக்கிறார்கள். உதாரணத்துக்கு லொத்தர் சீட்டுகள் விற்பனைசெய்யும் ஜே.பி.பத்ரா என்ற பெண்மணி,"கோட்டாபய முன்னர் நாட்டைக் காப்பாற்றியவர். அதனால்தான் நாங்கள் அவருக்கு வாக்களித்தோம். தற்போதைய பிரச்சினை தொடருமானால் மீண்டும் நாம் அவரை ஆதரிக்கமாட்டோம். ஆனால், அரசாங்கம் எங்களுக்கு சில நிவாரணங்களை தந்தால் பிறகு யோசிக்கலாம்" என்று வீரக்கெட்டிய நகர் சந்தியில் தனது விற்பனை சாவடியில் வைத்து கூறினார்.

(த இந்து)

---

## ஒஸ்ட்ரியாவில் நடைபெற்ற உலக சாம்பியன்ஷிப்பில் இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்தி...

# வடக்கு - மத்திய - மேல் மாகாண Red Bull Paper Wings தேசிய வெற்றியாளர்கள்

உத்தியோகபூர்வ Paper Plane World Championship (காகித விமான உலக சம்பியன்ஷிப்) போட்டியான Red Bull Paper Wings (ரெட் புல் பேப்பர் விங்ஸ்) அண்மையில் ஒஸ்ட்ரியாவின் சல்ஸ்பேர்க்கில் நிறைவடைந்தது. இதில் விசேட அம்சம் யாதெனில், இந்த உலகளாவிய இறுதிப் போட்டியில் இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்தி மூன்று போட்டியாளர்கள் கலந்துகொண்டிருந்தனர். உள்ளூர் மட்டத்திலான தகுதிச் சுற்றுகளில் வடக்கு, மத்திய, மேல் மாகாணங்களில் வெற்றிபெற்ற வீரர்களே இவ்வாறு அதில் பங்குபற்றியிருந்தனர்.

இம்முறை ஆறாவது முறையாக இடம்பெற்ற உலக இறுதிப் போட்டியானது, சல்ஸ்பேர்க்கில் உள்ள Hangar-7 இல் இடம்பெற்றது. Distance, Airtime, Aerobatics ஆகிய மூன்று பிரிவுகளில் சாதனை எண்ணிக்கையிலான விமானிகள் இதில் கலந்துகொண்டிருந்தனர். இவ்வாண்டு இடம்பெற்ற நிகழ்வில் 60 நாடுகளைச் சேர்ந்த 61,000இற்கும் மேற்பட்ட போட்டியாளர்கள் பங்கேற்றிருந்தனர்.

போட்டி விதிகளின்படி அனைத்து Distance, Airtime (இடப்பெயர்ச்சி, வளியில் நிலைத்திருக்கும் நேரம்) விமானிகளும் தங்கள் விமானத்தை ஒரே மாதிரியான பொருட்களிலிருந்து உருவாக்க வேண்டும். அதாவது, நிகழ்வு அமைப்பாளர்களால் வழங்கப்பட்ட தனியான தரப்படுத்தப்பட்ட A4 தாளின் மூலம் தயாரிக்க வேண்டும். அவர்களின் பணியானது, மடிப்பதன் மூலம் மாத்திரமே உரிய காற்றியக்கவியல் வடிவத்தை உருவாக்குவதாகும். வெட்டுதல், கிழித்தல், ஒட்டுதல், இணைத்தல் உள்ளிட்ட ஏனைய மாற்றங்களை மேற்கொள்ள அனுமதியில்லை.

Distance (இடப்பெயர்ச்சி) தொடர்பான போட்டியில் சேர்பியாவின் Lazar Krstic ஆதிக்கம் செலுத்தினார். அவர் தனது முதலாவது எறிதலில் 57.13 மீற்றர் எனும் தூரத்தை பதிவு செய்ததோடு, அதனை யாராலும் கடக்க முடியவில்லை. அதனைத் தொடர்ந்து தனது 2ஆவது எறிதலில் தனது முதலாவது பதிவை முறியடித்த அவர், 61.11 மீற்றர் எனும் தூரத்தை பதிவு செய்தார். இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த Krstic, "நான் அதற்காக கடுமையாக உழைத்தேன். இறுதியில் அது பலனளித்தது. இது ஒரு சிறந்த அனுபவம்.நான் அதை மிகவும் விரும்புகிறேன்" என்றார்.







தொடர்ந்தும் கருத்து தெரிவித்த அவர், "நான் ஒரு போட்டியாளர். ஆனால், நான் அதிகளவானோருடன் இருக்க விரும்புகிறேன். இந்நிகழ்வில் நான் மேலும் அதிகமான மக்களை சந்திக்க வேண்டுமென விரும்புகிறேன். நான் மிகவும் சந்தோஷமாக இருக்கிறேன். நீங்கள் என்னை மீண்டும் சந்திப்பீர்கள்" என்றார்.

Airtime (வளியில் நிலைத்திருக்கும் நேரம்) பிரிவில் விமானிகள் உச்ச மேலெழுதல் மற்றும் தரையிறங்குதல் நேரத்தை பெறுவதற்காக தங்கள் விமானங்களை Hangar-7 இலுள்ள வளைந்த கண்ணாடியைக் கொண்ட கூரையை நோக்கி எறிந்தனர். சுப்பர் இறுதிப் போட்டியில் பங்குபற்றிய பாகிஸ்தானின் ராணா மொஹமட் உஸ்மான் சயீத் 14.86 செக்கன்களில் வென்று புதிய Red Bull Paper Wings உலக இறுதிப் போட்டி சாதனையைப் படைத்ததன் மூலம் 10 ஆண்டுகால சாதனைக்கு முற்றுப்புள்ளி வைத்தார்.

Aerobatics (விமான சாகசம்) போட்டியில் படைப்பாற்றல், ஒட்டுமொத்த விமான செயல்திறன் மற்றும் தொழில்நுட்ப திறன் ஆகியவற்றின் அடிப்படையில் நடுவர் குழுவை திகைக்க வைத்து தங்களுக்கான புள்ளிகளை பெற விமானிகளுக்கு வெறுமனே 60 செக்கன்கள் வழங்கப்பட்டன. இசை, ஆடைகள், பல்வேறு அமைப்புகள், கருவிகள், பல்வேறு வகையான காகிதங்கள் மூலம் விமானங்களை தயாரிக்க அனுமதிக்கப்பட்டது. இதில் தென் கொரியாவைச் சேர்ந்த Seunghoon Lee (சியுங்ஹூன் லீ) முதல் இடத்தைப் பிடித்தார். அங்கு அவர் கறுப்பு நிற கோர்ட் (tuxedo) அணிந்து, மந்திரவாதி போன்று நடனக் கலையை வழங்கினார். அத்துடன், விமானங்களைச் சுழற்றி பூமரங் செய்து பறக்கவிட்டார். இவை அனைத்திற்கும் மேலாக அவர் இப்போட்டியில் வெற்றிபெற்றதைத் தொடர்ந்து மேடையில் தனது காதலியை அழைத்து அவருக்கு ஒரு காகித விமானத்தை வழங்கி, தனது காதலை வெளிப்படுத்தினார். குறித்த பெண்ணும் கண்ணீர் மல்க அதனை ஏற்றுக்கொண்டார். இக்காட்சி அனைவரையும் உச்சத்திற்கு கொண்டுசென்றது.

ஒரு சர்வதேச நிகழ்வில் பங்கேற்பதற்கான சிறகை (wiings) வழங்கியதற்காக இவ்வாண்டு நிகழ்வில் இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்திய மனித்த அபேசிறிவர்தன மற்றும் செனேஷ் வீரசிறி ஆகியோர் Red Bull இற்கு நன்றி தெரிவித்தனர்.

“நாம் சிறுவயது முதல் காகித விமானங்களை தயாரித்து பறக்கவிட்டு வருகிறோம். ஒரு நாள் எமது நாட்டைப் பிரதிநிதித்துவப்படுத்துவோம் என்று நாம் நினைத்துக்கூடப் பார்க்கவில்லை. இந்த வாய்ப்பிற்காக Red Bull நிறுவனத்திற்கு நாம் மிகவும் நன்றியுள்ளவர்களாக இருக்கிறோம். அடுத்த வருடம் நிச்சயமாக உயர்ந்த இலக்கை அடைவோம்" என்றனர்.

**Red Bull Paper Wings பற்றி..**

ரெட் புல் காகித சிறகானது உலகளாவிய காகித விமான சம்பியன்ஷிப்பிற்காக உலகம் முழுவதிலுமிருந்தும் போட்டியாளர்களுக்கு அழைப்பு விடுக்கிறது. இதன் யோசனை எளிமையானது எனும் அதேநேரத்தில் புத்திசாலித்தனமானதுமாகும். பங்கேற்பாளர்கள் ஒரு வெற்று காகிதத்தை முடிந்தவரை நீண்ட தூரத்திற்கு அல்லது நீண்ட நேரத்திற்கு அல்லது கலை அம்ச ரீதியாக காற்றில் பறக்கச்செய்ய வேண்டும். Distance, Airtime, Aerobatics ஆகிய மூன்று பிரிவுகளின் கீழ் அனைத்து தேசிய வெற்றியாளர்களும் ஒஸ்ட்ரியாவில் நடைபெறும் உலக இறுதிப் போட்டிக்காக Hangar-7இற்கு அழைக்கப்படுவார்கள். அங்கு புதிய உலக சம்பியன்கள் முடிசூட்டப்படுவார்கள்.

# காற்றில் கரைந்த கே.கேயின் குரல்: கண்ணீரால் உறைந்தது இசையுலகம்

## பிரதமர் மோடி உட்பட அரசியல் பிரமுகர்கள் திரைத்துறை பிரபலங்கள் இரங்கல்



பிரபல பின்னணிப் பாடகர் கே.கே. என்று அழைக்கப்படும் கிருஷ்ணகுமார் குன்னத்து (வயது 53), மாரடைப்பு காரணமாக செவ்வாய்க்கிழமை இரவு காலமானார்.

கொல்கத்தாவில் செவ்வாய்க்கிழமை மாலை நடைபெற்ற இசைநிகழ்ச்சியில் கலந்துகொண்டு சுமார் ஒரு மணிநேரம் தனது காந்தக்குரலால் பல்வேறு பாடல்களைப் பாடி கிறங்க வைத்திருந்தார். இசையெனும் இன்பவெள்ளத்தில் மூழ்கித் தழைத்திருந்தனர் ரசிகர்களும்.

நிகழ்ச்சி முடிந்த பின்னர் அவர் தங்கியிருந்த ஹோட்டலுக்குத் திரும்பியபோது திடீரென உடல்நலக்குறைவு ஏற்பட்டுள்ளது. இதனையடுத்து அவர் அருகிலுள்ள தனியார் வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளார். அவரைப் பரிசோதித்த மருத்துவர்கள், அவர் ஏற்கனவே உயிரிழந்துவிட்டதாக அறிவித்துள்ளனர்.

கே.கேயின் திடீர் மறைவு இசை ரசிகர்களிடையே அதிர்ச்சியையும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

தமிழ், தெலுங்கு, மலையாளம், ஹிந்தி, கன்னடம், மராத்தி, வங்காளி உள்ளிட்ட மொழிகளில் ஏராளமான பாடல்களைப் பாடியுள்ளார். தமிழில் மின்சாரக் கனவு, கில்லி, அந்நியன், மன்மதன், எம்.குமரன் சன் ஓவ் மகாலட்சுமி உள்ளிட்ட படங்களுக்கு பாடியுள்ளார். கே.கேயின் மறைவுக்கு இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி உள்ளிட்ட அரசியல் தலைவர்கள் மற்றும் திரைதுறை நட்சத்திரங்கள் பலர் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

இசைபிரியர்கள் கே.கே. இறப்பதற்கு சற்றுநேரத்திற்கு முன்னர் பங்கேற்ற மேடை நிகழ்ச்சியின் காணொளி மற்றும் அவரது புகைப்படங்களை வெளியிட்டு தமது சோகத்தைப் பகிர்ந்து வருகின்றனர்.

கிருஷ்ணகுமார் குன்னத்தின் திடீர் மறைவுக்கு மாரடைப்பே காரணம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

**கே.கேயின் மரணம் இயற்கைக்கு மாறானது**

பாடகர் கே.கேயின் மரணம் இயற்கைக்கு மாறானது என கொல்கத்தா நியூ மார்க்கெட் பொலிஸ் நிலையத்தில் வழக்குப் பதியப்பட்டது. இதனையடுத்து கே.கேயின் மனைவி ஜோதி கிருஷ்ணா, மகன் நகுல், மகள் தாமரை ஆகியோர் டில்லியிலிருந்து கொல்கத்தாவுக்கு சென்றனர்.

உடல் அடையாளங்களைக் காட்டி ஒப்புதல் பெற்றதும் அரச மருத்துவமனையில் கே.கேயின் உடல் கூறாய்வு செய்யப்பட்டு குடும்பத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டது.

**மேற்குவங்க முதலமைச்சர் மம்தா அஞ்சலி**

கொல்கத்தா ரபீந்திர சதன் பகுதியில் வைக்கப்பட்ட பாடகர் கே.கேயின் உடலுக்கு துப்பாக்கிக் குண்டுகள் முழங்க அரசு சார்பில் மரியாதை அளிக்கப்பட்டது. பாடகர் கே.கே. உடலுக்கு மேற்குவங்க முதலமைச்சர் மம்தா பெனர்ஜி அஞ்சலி செலுத்தினார்.

இதனிடையே கே.கே. தங்கியிருந்த ஓபரோய் கிராண்ட் விடுதி அறையைப் பார்வையிட்ட கொல்கத்தா காவல் இணை ஆணையர், விடுதி நிர்வாகத்தினரிடம் விசாரணை மேற்கொண்டார்.

**இசைப்புயலின் இசையில் முதல் பாடல்**

1968ஆம் ஆண்டில் டில்லியில் வசித்து வந்த மலையாள குடும்பத்தில் பிறந்த இவர், திரைப்படங்களுக்கு பின்னணி பாடல் பாடுவதற்கு முன்னதாக 3,500இற்கும் மேற்பட்ட சிங்கிள்களுக்கு பல்வேறு மொழிகளில் பாடியுள்ளார். தொடர்ந்து 1999ஆம் ஆண்டு கிரிக்கெட் உலகக் கிண்ணத் தொடரில் இந்திய அணிக்காக பாடல் பாடி இருந்தார் கே.கே. 1996முதல் திரைப்படப் பாடல்கள் பாடி வந்த கே.கே. மகேஷ் பட் இயக்கிய ஜிசம் என்ற படம் அவருக்கு பொலிவுட் திரையுலகில் பரவலான கவனத்தை அளித்தது.

ஏ.ஆர்.ரஹ்மான் இசையில்தான் முதன் முதலில் அவர் திரையில் பாடியுள்ளார். தமிழில் இசைப்புயலின் இசையில் 'காதல் தேசம்' படத்தில் ''கல்லூரி சாலை..'' பாடல் மூலம் பிரபலமானார்.

தொடர்ந்து தமிழ்த் திரைப்படங்களில் சுமார் 66 பாடல்களை அவர் பாடியுள்ளார். அவற்றுள் பெரும்பாலானவை ரசிகர்களிடம் மிகுந்த வரவேற்பைப் பெற்றவை. மின்சாரக் கனவு, செல்லமே, காக்க காக்க ,7ஜி ரெயின்போ காலனி, காவலன், மன்மதன், எம்.குமரன் சன் ஓவ் மகாலட்சுமி, அந்நியன், ரெட், கில்லி உள்ளிட்ட பல்வேறு படங்களில் இவர் பாடியுள்ளார்.

**தமிழில் கே.கேயின் குரல்**

***1997 - ''ஸ்ட்ராபெரி கண்ணே...'' (மின்சாரக் கனவு)***

***2002 - ''ஒல்லிக்குச்சி உடம்புகாரி...'' (ரெட்)***

***2003 - ''குண்டு குண்டு குண்டு பெண்ணே...'' (தூள்)***

***2003 - ''உயிரின் உயிரே..'' (காக்க காக்க)***

***2004 - ''அப்படி போடு...'' (கில்லி)***

***2004 - ''நீயே நீயே...'' (எம். குமரன் சன் ஓவ் மகாலட்சுமி)***

***2004- ''காதல் வளர்த்தேன்...'' (மன்மதன்)***

***2005 - ''ஒரு வார்த்த கேட்க...'' (ஐயா)***

***2008 - ''மொல மொலன்னு...'' (குருவி)***

***2011 - ''என் வெண்ணிலவே...'' (ஆடுகளம்)***


கே.கேயின் கடைசி நிமிடம்....

இறுதியாக ஜூலை மாதம் தமிழில் வெளியாகவுள்ள 'தி லெஜண்ட்' படத்தில் கே.கே. இரண்டு பாடல்களை பாடியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கே.கேயின் மறைவுக்கு பல்வேறு அரசியல் தலைவர்களும், பிரபலங்களும், ரசிகர்களும் இரங்கல் தெரிவித்து வருகின்றனர்.

இந்நிலையில், கே.கேயின் மறைவுக்கு இரங்கல் தெரிவித்து பிரதமர் மோடி வெளியிட்டுள்ள ட்விட்டர் பதிவில்,

''பிரபல பாடகர் கே.கே. என்று அழைக்கப்படும் கிருஷ்ணகுமார் குன்னத்தின் மறைவு வருத்தம் அளிக்கிறது. அனைத்து வயதினரையும் கவர்ந்த அவரது பாடல்கள் பலவிதமான உணர்ச்சிகளை பிரதிபலித்தன. அவரது பாடல்கள் மூலம் நாம் எப்போதும் அவரை நினைவுகொள்வோம்'' - எனத் தெரிவித்துள்ளார்.

அதேபோல் நடிகர் கமல்ஹாசன் வெளியிட்டுள்ள ட்விட்டர் பதிவில்,

''பன்மொழிகளிலும் பாடி ரசிகர்களை மகிழ்வித்த கே.கே. எனும் கிருஷ்ணகுமார் குன்னத் மாரடைப்பால் அகால மரணமடைந்த செய்தி அதிர்ச்சியளிக்கிறது. அவரை இழந்து வாடும் குடும்பத்தாருக்கும், நண்பர்களுக்கும், ரசிகர்களுக்கும் என் ஆறுதல்கள்'' - எனத் தெரிவித்துள்ளார்.

இசையமைப்பாளர் யுவன் சங்கர் ராஜா தனது ட்விட்டர் பக்கத்தில்,

''சித்து மூஸ் வாலாவை தொடர்ந்து இப்போது கே.கே. நம் நாட்டின் இசை சமூகத்திற்கு இது ஒரு சோகமான வாரம். வாழ்க்கை கணிக்க முடியாதது. அடுத்த நிமிடம் என்ன நடக்கும் என்று தெரியாதது. உங்களை மிஸ் செய்கிறோம் கே.கே.'' என்று தனது இரங்கல் குறிப்பில் தெரிவித்துள்ளார்.

## துப்பாக்கி குண்டுகள் முழங்க அரசு சார்பில் மரியாதை; மேற்குவங்க முதலமைச்சர் மம்தா பெனர்ஜி அஞ்சலி



# அயோத்தி இராமர் கோயில் கருவறைக்கு அடிக்கல் நாட்டினார் யோகி ஆதித்யநாத்



உத்தரப் பிரதேச மாநிலம் அயோத்தியில் இராமர் கோயில் கருவறைக்கு அம்மாநில முதலமைச்சர் யோகி ஆதித்யநாத் அடிக்கல் நாட்டிவைத்தார்.

உச்சநீதிமன்றம் வழங்கிய தீர்ப்புக்குப் பிறகு, உத்தரப் பிரதேச மாநிலம் அயோத்தியில் ராமர் கோயில் கட்டுமானப் பணிகள் கடந்த பெப்ரவரி மாதம் தொடங்கி நடைபெற்று வருகின்றன.

2023 ஆம் ஆண்டுக்குள் கீழ் தளத்தில் இராமர் கோயில் கருவறை கட்டி முடிக்கப்படும் எனவும் அதே ஆண்டு டிசம்பர் மாதம் முதல் பக்தர்களுக்கு அனுமதி வழங்க திட்டமிடப்பட்டுள்ளதாகவும் இராமர் கோயில் கட்டுமானக் குழுத் தலைவர் ரிபேந்திர மிர்ஸா தகவல் தெரிவித்திருந்தார். மேலும், கோயில் அடித்தளம் மற்றும் தூண்கள் அமைக்கும் பணி முழுமையடைந்ததும், கோபுரம் அமைக்கும் பணிகள் தொடங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில், அயோத்தியில் ராமர் கோயில் கருவறைக்கு முதலமைச்சர் யோகி ஆதித்யநாத் நேற்று இடிக்கல் நாட்டிவைத்தார்.

# உலக செய்திகள்

## அவுஸ்திரேலிய அமைச்சரவையில் புதிய சாதனை: முதன்முறையாக பெண்களுக்கு அதிக முக்கியத்துவம்



அவுஸ்திரேலியாவில் புதிதாக அமைக்கப்பட்ட அமைச்சரவையில் முதன்முறையாக பெண்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது.

கடந்த மாதம் 21ஆம் திகதி நடைபெற்ற தேர்தலில் தொழிலாளர் கட்சித் தலைவர் அந்தோணி அல்பேனிஸ் வெற்றிபெற்று கடந்த மாதம் 23ஆம் திகதி பிரதமராக பொறுப்பேற்றார்.

நேற்று பொறுப்பேற்றுக்கொண்ட அவரது அமைச்சரவையில் மொத்தம் உள்ள 23 பேரில் பெண்கள் 10 பேர் இடம்பெற்றுள்ளனர். கடந்த ஆட்சியில் அதிகபட்சமாக 7 பெண்கள் மட்டுமே அமைச்சரவையில் இடம்பெற்றிருந்தனர்.

## உக்ரைனின் செவரோடொனட்ஸ்க் நகர இரசாயன ஆலை மீது ரஷ்யா தாக்குதல்



உக்ரைனின் செவரோ-டொனெட்ஸ்க் நகரிலுள்ள இரசாயன ஆலை மீது ரஷ்யப் படைகள் வான் தாக்குதல் நிகழ்த்தியதால் அப்பகுதி மக்கள் வீட்டை விட்டு வெளியேற வேண்டாம் என எச்சரிக்கப்பட்டுள்ளனர்.

தொழிற்சாலைகள் நிறைந்த செவரோ டொனெட்ஸ்க் நகரின் பெரும்பகுதி ரஷ்யப் படைகள் வசம் சென்றுள்ளது. அங்குள்ள இரசாயன ஆலை மீது ரஷ்யப் படைகள் நிகழ்த்திய தாக்குதலில் நைட்ரிக் அமிலம் நிரப்பப்பட்டிருந்த கொள்கலன் வெடித்துச் சிதறியது.

நைட்ரிக் அமிலம் கலந்த வாயுவை சுவாசிப்பது ஆபத்தை விளைவிக்கும் என்பதால் மக்கள் பேக்கிங் சோடா கலந்த நீரில் துணிகளை முக்கி, காயவைத்து அவற்றை முகக்கவசங்களாக பயன்படுத்துமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

### பொருளாதார நெருக்கடி:

## தெமட்டகொடையைச் சேர்ந்த மூவர் அகதிகளாக தமிழகத்தில் தஞ்சம்

**(மன்னார் நகர் நிருபர், திருச்சி எம்.கே. ஷாகுல் ஹமீது)**



இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக இலங்கையிலிருந்து மேலும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூன்று பேர் அகதிகளாக தனுஷ்கோடியை அடுத்த கோதண்டராமர் கடற்கரையை நேற்று புதன்கிழமை சென்றடைந்துள்ளனர்.

அவர்களை மீட்ட மெரைன் பொலிஸார் மற்றும் இராமேஸ்வரம் மெரைன் பொலிஸ் நிலையத்திற்கு அழைத்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

இலங்கையிலிருந்து தமிழகத்திற்கு இதுவரை 83 பேர் அகதிகளாக சென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

தமிழகத்தை சென்றடைந்த மூவரிடமும் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் அவர்கள் கொழும்பு, தெமட்டகொடை பகுதியைச் சேர்ந்த வரதனின் மனைவி ஜெசிந்தா மேரி (வயது 51), வரதனின் மகன் பிரிவின் சஞ்சய் (வயது10), லோகநாதன் மகன் அனிஸ்டன் (வயது 31) என தெரியவந்தது.

இதுகுறித்து அவர்கள் தெரிவிக்கையில், இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியால் தொடர்ந்து தங்களால் கூலி வேலை செல்ல முடியாமல் உணவுக்கு தவித்து வந்ததாகவும், இதனால் இந்தியா சென்று பிழைத்துக்கொள்ளலாம் என முடிவு செய்து நேற்றுமுன்தினம் மாலை மன்னார் பகுதியிலிருந்து பணம் கொடுத்து பிளாஸ்ரிக் படகில் வந்ததாகவும் தெரிவித்தனர்.

மேலும் 3 அகதிகளும் 1995ஆம் ஆண்டுமுதல் 2017ஆம் ஆண்டுவரை குடியாத்தம் அகதிகள் முகாமில் இருந்துள்ளனர் என்றும் தெரியவந்தது. இதைத்தொடர்ந்து 3 பேர் மீதும் பொலிஸார் வழக்குப் பதிவுசெய்து விசாரணை நடத்தி வருகின்றனர். விசாரணைக்குப் பின்னர் அவர்கள் மண்டபம் அகதிகளின் மறுவாழ்வு முகாமுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர்.

## எட்னாலிருந்து ஆறாக பாயும் நெருப்புக் குழம்பு



ஐரோப்பிய கண்டத்திலுள்ள 3 பெரிய எரிமலைகளில் ஒன்றான எட்னா எரிமலை இத்தாலியிலுள்ள சிசிலி பகுதியில் அமைந்துள்ளது. எரிமலையில் ஏற்பட்ட சீற்றத்தையடுத்து முகப்பு பகுதியிலிருந்து லாவா எனப்படும் நெருப்புக் குழம்பும் சாம்பலும் ஆறாக பாய்ந்தோடி வருகின்றன.

# “ஓய்வு பெறுவதற்கு இதுவே சரியான தருணம்”



முடிவை அறிவித்தார் டி மரியா

இந்தாண்டு இறுதியில் கட்டாரில் நடைபெறவுள்ள பிபா உலகக் கிண்ண உதைபந்து தொடருடன் ஆர்ஜென்டீனா அணியின் பிரபல வீரர் டி மரியா ஓய்வு பெற முடிவு செய்துள்ளார்.

ஆர்ஜென்டீனா உதைபந்து அணியின் முன்னணி வீரர்களில் ஒருவர் ஏஞ்சல் டி மரியா. அந்த அணிக்காக 121 சர்வதேச போட்டிகளில் விளையாடி 24 கோல்கள் அடித்துள்ளார். கடந்த ஆண்டு கோபா அமெரிக்கா உதைபந்து தொடரில் ஆர்ஜென்டீனா 1-0 என்ற கோல் கணக்கில் பிரேசிலை வீழ்த்தி 28 ஆண்டுகளுக்குப் பிறகு சம்பியன் பட்டம் வென்றது. இதில் வெற்றிக்குரிய கோலை அடித்தவர் டி மரியாதான்.

இந்நிலையில், 34 வயதான ஏஞ்சல் டி மரியா, எதிர்வரும் நவம்பர்-டிசம்பர் மாதங்களில் கட்டாரில் நடைபெறும் 22ஆவது உலகக்கிண்ண தொடருடன் சர்வதேச உதைபந்து போட்டிக்கு முழுக்கு போட முடிவு செய்துள்ளார். உலகக்கிண்ணம் முடிந்ததும் ஓய்வு பெறுவதற்கு அதுவே சரியான தருணம் என்று அவர் தெரிவித்துள்ளார்.

டி மரியா பிரான்ஸை சேர்ந்த பி.எஸ்.ஜி. உதைபந்து கழகத்துக்காக விளையாடுகிறார். இந்த கோடைகால சீசனுடன் அந்த கழகத்திலிருந்து வெளியேறும் அவர், அதன்பிறகு வேறு ஏதாவது கழகத்தில் ஆடுவாரா என்பது குறித்து இன்னும் முடிவு செய்யவில்லை.

# திட்டமிட்டபடி தொடர் நடைபெறும் இலங்கை வந்தடைந்த ஆஸி. அணி

அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணியின் இலங்கை சுற்றுப்பயணம் திட்டமிட்டபடி நடைபெறும் என இரு நாட்டு கிரிக்கெட் சபைகளும் உறுதிப்படுத்தியுள்ளன. இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதாரப் பிரச்சினைகள் காரணமாக அவுஸ்திரேலிய அணி இலங்கை வருமா, இல்லையா என்பது தொடர்பில் அதிகமான கேள்விகள் கடந்த வாரங்களில் எழுந்திருந்த நிலையில், அதற்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டுள்ளது.



இலங்கை கிரிக்கெட் சபையின் செயலாளர் மொஹான் டி சில்வா வெளிநாட்டு ஊடகமொன்றுக்கு வழங்கிய செவ்வியில், போட்டிகள் திட்டமிட்டவாறு நடைபெறும் எனவும், பகலிரவு போட்டிகளும் திட்டமிட்ட நேரங்களில் நடைபெறும் எனவும் சுட்டிக்காட்டியுள்ளார். அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணி இலங்கைக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு 3 போட்டிகள்கொண்ட இருபதுக்கு 20 சர்வதேச தொடர், 5 போட்டிகள் கொண்ட ஒருநாள் மற்றும் 2 போட்டிகள்கொண்ட டெஸ்ட் ஆகிய தொடர்களில் விளையாடவுள்ளது.

இந்தத் தொடர் எதிர்வரும் 7ஆம் திகதி ஆரம்பமாகி ஒரு மாத காலம் நடைபெறவுள்ளதுடன், ஜூலை 12ஆம் திகதி தொடர் நிறைவுக்கு வரவுள்ளது. அந்தவகையில் முதலில் நடைபெறவுள்ள இருபதுக்கு 20 தொடருக்கான அவுஸ்திரேலியா இருபதுக்கு 20 அணி நேற்று இலங்கை வந்தடைந்தது.

இதேவேளை, அவுஸ்திரேலிய தொடரையடுத்து இலங்கையில் நடைபெறவுள்ள ஆசியக்கிண்ணம் தொடர்பிலான இறுதி முடிவுகள் இதுவரை எடுக்கப்படவில்லை. ஆஸி. அணியுடனான தொடர் நடைபெறும் விதத்தைத் தொடர்ந்து ஆசியக்கிண்ணம் தொடர்பில் இறுதித் தீர்மானம் எடுக்கப்படும் என ஆசிய கிரிக்கெட் சபை சுட்டிக்காட்டியுள்ளது.

விளையாட்டு செய்திகள்

thamilansports@gmail.com

# நம்பர் வன் வீரர் ஜோகோவிச்சுக்கு அதிர்ச்சி கொடுத்த நடால்



பிரான்ஸ் தலைநகர் பரிஸில் நடைபெற்றுவரும் பிரெஞ்ச் ஓபன் டென்னிஸ் தொடரின் நேற்று நடைபெற்ற காலிறுதி ஆட்டத்தில் நோவக் ஜோகோவிச்சை வீழ்த்தி ரபேல் நடால் அரையிறுதி சுற்றுக்கு முன்னேறினார்.

'கிராண்ட்ஸ்லாம்' அந்தஸ்து பெற்ற பிரெஞ்ச் ஓபன் டென்னிஸ் தொடரின் ஆடவர் ஒற்றையர் பிரிவில் மிகுந்த எதிர்பார்ப்புக்கிடையே நடைபெற்ற காலிறுதி ஆட்டத்தில் பிரெஞ்ச் ஓபனை 13 முறை வென்றவரான ரபெல் நடாலும் (ஸ்பெயின்), உலகின் 'நம்பர் வன்' வீரரும் நடப்பு சம்பியனுமான நோவக் ஜோகோவிச்சும் (செர்பியா) மோதினர்.

டென்னிஸ் உலகின் இரு நட்சத்திரங்கள் விளையாடுவதால் ரசிகர்களிடையே இந்தப் போட்டிக்கு பலத்த எதிர்பார்ப்பு ஏற்பட்டது. பரபரப்பான இந்த ஆட்டத்தில் இருவரும் சம பலத்துடன் விளையாடினர். விறுவிறுப்பாக நடைபெற்ற ஆட்டத்தில் 6-2, 4-6, 6-2, 7-6 (7-4) என்ற செட் கணக்கில் ரபேல் நடால் வெற்றிபெற்று பிரெஞ்ச் ஓபன் டென்னிஸ் தொடரின் அரையிறுதி சுற்றுக்கு முன்னேறினார்.



# மாதவிடாய் வலியால் பிரெஞ்ச் ஓபனிலிருந்து வெளியேறிய சீன வீராங்கனை

மாதவிடாய் காரணமாக கடுமையான வயிற்றுவலி ஏற்பட்டதால் பிரெஞ்ச் ஓபனில் அதிர்ச்சியூட்டும் வெற்றிவாய்ப்பை இழந்த சீன வீராங்கனை ஜெங் கின்வென், தான் ஒரு ஆணாக இருந்திருக்கலாம் என வேதனை தெரிவித்துள்ளார். உலகின் நம்பர் வன் டென்னிஸ் வீராங்கனையான போலந்து நாட்டைச் சேர்ந்த இகா ஸ்விடெக்கிற்கு எதிராக பிரெஞ்ச் ஓபன் தொடரில் வெற்றிபெற்று அனைவரையும் அதிர்ச்சியடைய செய்யவேண்டும் என்ற தனது நம்பிக்கையை கடுமையான வயிற்றுப் பிடிப்புகள் சிதைத்துவிட்டதாக சீனாவின் ஜெங் கின்வென் கூறினார்.

உலக தரவரிசையில் 74ஆவது இடத்தில் இருக்கும் 19 வயதேயாகும் ஜெங், திங்கட்கிழமையன்று முதல் முறையாக ரோலண்ட் கரோஸ் அரங்கத்தில் விளையாடினார். அதுவும் உலகின் நம்பர் வன் டென்னிஸ் வீராங்கனை இகா ஸ்விடெக்கிற்கு எதிரான போட்டியாக அமைந்தது. இந்தப்போட்டியில் இரண்டாவது செட்டின் தொடக்கத்தில் ஜெங்கிற்கு, தனது காயம்பட்ட வலது காலில் மருந்து கட்ட மருத்துவ காலஅவகாசம் தேவைப்பட்டது. ஆனால், அதைவிட பெரிய கவலைகள் இருந்ததாக அவர் வெளிப்படுத்தினார்.

“அது பெண்களின் விடயங்கள்'' என்று ஜெங் தனது மாதவிடாய் வலியைக் குறிப்பிடுகிறார். “முதல் நாள் எப்போதுமே மிகவும் கடினமான வலி இருக்கும். பின்னர் நான் விளையாட்டில் ஈடுபட வேண்டும். என் இயல்பிற்கு எதிராக என்னால் செல்ல முடியவில்லை, நான் ஒரு ஆணாக இருக்க விரும்புகிறேன், அதனால் நான் கஷ்டப்பட வேண்டியதில்லை'' என்று கூறிய அவர், இப்போது ஒரு பெண்ணாக மிகவும் கடினமாக இருக்கிறது என்று கூறினார். கால் வலி விளையாட்டை கடினமாக்கியது, ஆனால், வயிற்றுவலியுடன் ஒப்பிடும்போது அது ஒரணும் பெரிதல்ல, வயிறு மிகவும் வலியாக இருந்ததால் தன்னால் டென்னிஸ் விளையாட முடியாது என்கிறார்.

# சம்மாந்துறை மண்ணில் முதன் முறையாக உலமாக்களுக்கான கிரிக்கெட் சுற்றுத் தொடர்

(ஏ. அகீல் சிஹாப்)

கிழக்கு மாகாணத்திலுள்ள உலமாக்கள் மற்றும் ஹாபிழ்மார்களைக்கொண்ட கிரிக்கெட் அணிகளுக்கு இடையே லீக் சுற்று முறையில் 12 அணிகளின் பங்குபற்றுதலுடன் சம்மாந்துறை மண்ணில் முதன் முறையாக கடந்த சனி, ஞாயிறு தினங்களில் சம்மாந்துறை பொது விளையாட்டு மைதானத்தில் மிகக் கோலாகலமாக ரௌழா சம்பியன்ஸ் வெற்றிக்கிண்ண கிரிக்கெட் தொடர் இடம்பெற்றது.

இறுதிப் போட்டியில் நிந்தவூர் காஷிபி வி. கழகத்தை எதிர்த்து கல்முனை ஹூமாத் பிரதர்ஸ் வி. கழகம் ஆடியது. இரு அணிகளும் பலம் பொருந்திய அணிகளாக காணப்பட்ட போதிலும் நிந்தவூர் காஷிபி விளையாட்டுக் கழகம் இறுதிப்போட்டியில் வெற்றிபெற்று 2022ஆம் ஆண்டின் உலமாக்களுக்கான ரௌழா சம்பியன்ஸ் கிண்ணத்தை சுவீகரித்துக்கொண்டது. இந்த சுற்றுத்தொடரின் தொடர் ஆட்டநாயகனாக காஷிபி விளையாட்டுக் கழகத்தின் அணித்தலைவர் மௌலவி அஸ்ஸாம் (காஷிபி) தெரிவானதோடு, இறுதிப் போட்டியின் ஆட்டநாயகன் விருதை அதே கழகத்தின் ரிப்தாஸ் (அல்ஹாபிழ்) தெரிவானர்.

இறுதிப் போட்டியில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் சம்மாந்துறைத் தொகுதிக்கான அமைப்பாளர் ஐ.எல்.எம்.மாஹிர் பிரதம அதிதியாக கலந்துகொண்டதோடு, அதிதிகளாக பராமௌண்ட் ஹார்ட்வெயார் உரிமையாளர் ஹாரிஸ், எஸ்.எல்.ஏ.புட் சிட்டி உரிமையாளர் நஜாத், ரௌபீக் ஹாஜியார் மற்றும் ரோயல் மெட்ரிட் விளையாட்டுக் கழகத்தின் உதைபந்தாட்ட பயிற்சியாளர் எம்.டி.எம்.ரிஸா ஆகியோர் கலந்து சிறப்பித்ததோடு வெற்றிக் கிண்ணங்களையும் வழங்கி கௌரவித்தனர்.









# இலங்கை அணியில் மீண்டும் பானுக!



ஆஸி. அணியுடன் நடைபெறவுள்ள 3 போட்டிகள்கொண்ட இருபதுக்கு 20 சர்வதேச தொடருக்கான தசுன் சானக்க தலைமையிலான இலங்கை அணியின் இறுதி 18 பேர் கொண்ட குழாம் நேற்று இலங்கை கிரிக்கெட் சபையால் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டது.

இந்த குழாத்தில் புதுமுக வீரரான மதீஷ பதிரண இணைக்கப்பட்டுள்ளார். உபாதை காரணமாக வெளியேற்றப்பட்ட நுவான் துஷாவும் அணியில் இடம்பிடித்துள்ளார். இதேவேளை, உடற்தகுதி காரணமாக அணியிலிருந்து நீக்கப்பட்டிருந்த பானுக ராஜபக்ஷ மீண்டும் அணிக்குள் அழைக்கப்பட்டுள்ளார்.

**இலங்கை குழாம்**

தசுன் சானக்க (தலைவர்), பெதும் நிஸ்ஸங்க, தனுஷ்க குணதிலக்க, குசல் மெண்டிஸ், சரித் அசலங்க, பானுக ராஜபக்ஷ, நுவனிந்து பெர்னாண்டோ, லஹிரு மதுசங்க, வனிந்து ஹஸரங்க, சாமிக்க கருணாரத்ன, துஷ்மந்த சமீர, கசுன் ராஜித, நுவான் துஷார, மதீஷ பத்திரண, ரமேஷ் மெண்டிஸ், மஹீஷ் தீக்ஷன, பிரவீன் ஜயவிக்ரம, லக்ஷான் சந்தகன்

# இலங்கை புறப்பட முன்னர் ஆஸி. பயிற்றுவிப்பாளருக்கு கொரோனா



அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணியின் தலைமைப் பயிற்றுவிப்பாளர் அண்ட்ரூ மெக்டொனால்டுக்கு இலங்கை புறப்பட முன்னர் நேற்று கொரோனா தொற்று ஏற்பட்டிருப்பது உறுதியானது. இதனைத் தொடர்ந்து அவர் மெல்பேர்னில் பல நாட்கள் தனிமைப்படுத்தப்பட்டார்.

மெல்பேர்னிலிருந்து கிடைத்த தகவலின்படி இலங்கைக்கு எதிரான இரண்டாவது இருபதுக்கு 20 போட்டியில் அவுஸ்திரேலிய அணியுடன் அவர் இணைவாரென எதிர்பார்க்கப்படுகிறது. 3 போட்டிகள்கொண்ட இருபதுக்கு 20 சர்வதேச தொடர், 5 போட்டிகள் கொண்ட ஒருநாள் மற்றும் 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் ஆகிய தொடர்களில் பங்கேற்கும் அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணி நேற்று பிற்பகல் வேளையில் இலங்கையை வந்தடைந்தது.

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7